தமிழகம் முழுவதும் பின்கோடு வாரியாக
நிருபர்கள் தேவை (Freelancer)
நமது ஆனந்த பாஸ்கர், பேப்பர்பாய் மற்றும் தமிழ்நாடுஇபேப்பர் நாளிதழ்களுக்கு பணியாற்ற தொண்டுள்ளம் கொண்ட தன்னார்வளர்கள் (freelancer) அடிப்படையில் நிருபர்களாக பணியாற்ற, மக்கள் தொடர்பு அதிகம் உள்ள பத்திரிக்கை துறையில் ஆர்வம் உள்ளவர்கள், தமிழகம் முழுவதும் பின்கோடு வாரியாக நிருபர்கள் தேவை.
www.vaniks.com
No Monthly Commitments
9337501889, 7789941009


# தமிழ்நாடு இ பேப்பர்.காம்

www.tamilnaduepaper.com





CHENNAI | Volume- 3 | Issue:210 | 14-02-2026 | சனிக்கிழமை | Free E- Paper | சென்னை | மதுரை | கோவை | திருச்சி

## இன்றைய பஞ்சாங்கம்

14.02.2026 மாசி 2
சனிக்கிழமை

சூரிய உதயம் 6.34

திதி:
இன்று மாலை 4.43 வரை
துவாதசி பின்பு திரயோதசி.

நட்சத்திரம்:
இன்று இரவு 7.00 வரை
பூராடம் பின்பு உத்திராடம்.

யோகம் :
இன்று அதிகாலை
4.12 வரை வஜ்ரம்
பின்பு சித்தி

கரணம் :
இன்று அதிகாலை
3.57 வரை கௌலவம்
பின்பு மாலை 4.43 வரை
தைதுலம் பின்பு கரசை.

அமிர்தாதி யோகம் :
இன்று முழுவதும்
சித்த யோகம்.

சந்திராஷ்டமம்
இன்று மாலை
7.00 வரை ரோகிணி
பின்பு மிருகசீரிடம்.

நல்ல நேரம்
காலை 7.30 –9.00.
மாலை 4.30 – 5.30

இன்று சனிப் பிரதோஷம்

ஜோதிட நிபுணர்:
இராஜபாளையம்
இராமமூர்த்தி
செல்: 8189908040

# “மீண்டும் ஆட்சிக்கு வந்தால் மாதம் ரூ.2 ஆயிரமாக உயர்த்துவோம்”

## மகளிர் உரிமைத்தொகை பெறுவோருக்கு வங்கியில் ரூ.5000 வரவு வைப்பு: ஸ்டாலின்

**சென்னை, பிப்.14:**

மகளிர் உரிமைத்தொகை பெறுவோருக்கு (1.31 கோடி) இன்று (13ந் தேதி) காலையே ரூ.5000 அவரவர் வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்தார்.

கலைஞர் மகளிர் உரிமைத்தொகை குறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள பதிவில் கூறியிருப்பதாவது:

“தமிழ்நாட்டு மகளிருக்கு இந்த ஸ்டாலின் தந்த உறுதிமொழிதான் உரிமைத்தொகை. யார் தடை ஏற்படுத்தினாலும் அதிலிருந்து பின்வாங்க மாட்டேன்.

தேர்தலைக் காரணம் காட்டி, 3 மாதங்களுக்கு உரிமைத்தொகையை முடக்கப் பார்க்கிறார்கள். முந்திக்கொண்டது நமது திராவிட மாடல்அரசு. பிப்ரவரி, மார்ச், ஏப்ரல் மாதங்களுக்கான முன்பணமாக ரூ.3 ஆயிரம் + கோடைக்காலச் சிறப்புத் தொகுப்பாக ரூ.2 ஆயிரம்.

1.31 கோடி கலைஞர் மகளிர் உரிமைத் திட்டப் பயனாளிகளுக்கும் இன்று காலை 5 ஆயிரம் ரூபாய் வரவு வைக்கப்பட்டிருக்கிறது. வெல்லும் தமிழ்ப் பெண்கள் ஆதரவோடு அடுத்தும் நாங்கள்தான் வெல்வோம்!

நாம் ஆட்சிக்கு வருவதற்கு முன்பு, மாதம் ஆயிரம் ரூபாய் உரிமைத்தொகை வழங்கப்படும் என்று அறிவித்தேன். அப்போது, "இது சாத்தியமே இல்லை" எனச் சிலர் சொன்னார்கள். ஆனாலும், நிதி நெருக்கடியைச் சமாளித்து, ஒன்றிய அரசின் ஓரவஞ்சனையையும் மீறி, கடந்த 2023ம் ஆண்டு செப்டம்பர் மாதம் முதல் "கலைஞர் மகளிர் உரிமைத் திட்ட"த்தை வெற்றிகரமாகச் செயல்படுத்திக் கொண்டு வருகிறோம். முதலில், ஒரு கோடியே 13 லட்சம் மகளிருக்குப் பயனளித்த இந்தத் திட்டம், அண்மையில் விரிவுபடுத்தப்பட்டு, தற்போது ஒரு கோடியே 31 லட்சம் குடும்பத் தலைவிகள் பயன்பெற்று வருகிறார்கள். இது வெறும் நிதியுதவி அல்ல.

### அன்றாட வீட்டுச் செலவு மருத்துவச் செலவுகள்...

சமூகத்தில் பெண்கள் ஆற்றும் பங்களிப்பை அங்கீகரிப்பதற்காகக் கொடுக்கப்படுகிற உரிமைத்தொகை! இந்தத் தொகையை வைத்து, அன்றாட வீட்டுச் செலவுகள், குடும்பத்தில் ஏற்படும் மருத்துவச் செலவுகள், குழந்தைகளுக்கான கல்விச் செலவுகள், என, பல அத்தியாவசியச் செலவுகளை, மகளிர் தாங்களே நிறைவு செய்ய இந்த திட்டம் வழிவகுத்தது.



### நிறுத்த, சூழ்ச்சி

அதனால் தான், ஒவ்வொரு மாதமும் 15ம் தேதி என்பது, ஒவ்வொரு குடும்பத்தலைவியும் ஆவலோடு எதிர்பார்க்கும் நாளாக அமைந்துள்ளது. இவ்வளவு சிறப்பு வாய்ந்த இந்தத் திட்டத்தை மற்ற மாநிலங்களும் பின்பற்றி வருகிறார்கள். இந்த உரிமைத் தொகையை மேம்படுத்த வேண்டும் என நாம் செயல்பட்டு வந்தால், அதற்கு எதிராக டெல்லியில் இருக்கும் ஒரு கூட்டமும், தமிழ்நாட்டில் அவர்களுக்கு அடிமையாக இருக்கும் இன்னொரு கூட்டமும், எதிர்வரும் சட்டமன்றத் தேர்தலைக் காரணம் காட்டி, அடுத்த 3 மாதங்களுக்கு இந்த மகளிர் உரிமைத் தொகையை நிறுத்த, சூழ்ச்சி செய்வதாகத் தகவல் வருகிறது! இதுபற்றி நீதிமன்றத்தில் வழக்கு தொடரவும் சிலர் முயற்சி செய்வதாகச் செய்திகள் வருகிறது.

### 3 மாதம் நிறுத்தி வைத்தால் சிரமம்...

ஒரு கோடியே 31 லட்சம் மகளிர் உழைப்பை அங்கீகரிக்கும் இந்த திட்டத்தை 3 மாதம் நிறுத்தி வைத்தால் நீங்கள் எவ்வளவு சிரமங்களுக்கு ஆளாவீர்கள் என உங்கள் வீட்டில் ஒருவனாக இருக்கும் எனக்கு நன்றாகத் தெரியும். கடும் வெயிலில் வேலைக்குப் போக கடினமான கோடைக்காலத்தில், இந்தத் தொகை நிறுத்தப்பட்டால், உங்களுக்கு எவ்வளவு வலி ஏற்படும் என என்னால் உணர முடிகிறது.

உங்கள் மாதாந்திர செலவை, எப்படி சமாளிப்பீர்கள்? உங்கள் குடும்பத்தில் நோய்வாய்ப்பட்டவர்களுக்கு மாத்திரை வாங்கிக் கொடுக்க முடியுமா? குழந்தைகள் தேர்வு எழுதும் காலத்தில் அவர்களுக்கு உணவு கொடுப்பதில் இருந்து, தேவையான கல்விச் செலவுகளைச் செய்ய முடியுமா?

இந்தக் கஷ்டத்தை எல்லாம் நினைத்துப் பார்த்துதான், ஒரு முக்கியமான முடிவை எடுத்துள்ளேன். அதன்படி, இந்த பிப்ரவரி மாதம் மட்டுமில்லாமல் அடுத்த 2 மாசம் அதாவது மார்ச், ஏப்ரலுக்கான உரிமைத்தொகை தவணைகளையும் சேர்த்து 3 ஆயிரம் ரூபாயும், கூடுதலாகக் கோடைக்காலச் செலவுகளை கருத்தில் கொண்டு மேலும் 2 ஆயிரம் ரூபாய் சிறப்புத் தொகையும் சேர்த்து, இந்த பிப்ரவரி மாசம் 5 ஆயிரம் ரூபாயைச் சிறப்பு மகளிர் உரிமை தொகையாக ஒரு கோடியே 31 லட்சம் பெண்களுக்கு வழங்க உத்தரவிட்டிருக்கேன்.

இந்த தருணத்தில் இன்னொரு அன்பான வேண்டுகோள்: இந்த 5 ஆயிரம் ரூபாயை அடுத்த 3 மாதத்துக்கு நீங்கள் பயன்படுத்திக்கொள்ளவேண்டும் என்பதால், கொஞ்சம் கவனமாகச் செலவிடுங்கள். முடிந்த அளவுக்குச் சேமிக்கவும் பாருங்கள்.

திராவிட மாடல்அரசு 2.0ல் ஆயிரம் ரூபாய் உரிமைத்தொகையை 2 ஆயிரமாக உயர்த்தி வழங்குவோம்! இது, என் சகோதரிகளுக்கு இந்த முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் கொடுக்கும் வாக்குறுதி!

வெல்வோம் ஒன்றாக!”

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# ‘தமிழ்நாடு தான் என் வீடு; 8 கோடி பேர் என் சொந்தம்’: சேலம் கூட்டத்தில் விஜய் பேச்சு

**சேலம், பிப். 14:**

‘தாய்நாடான தமிழ்நாடு தான் என் வீடு, 8 கோடி பேர் என் சொந்தம்’ என்று இன்று காலை சேலத்தில் நடந்த கூட்டத்தில் தமிழக வெற்றிக் கழகத்தின் (த.வெ.க.) தலைவர் விஜய் பேசினார்.

சேலம் மாவட்ட த.வெ.க. நிர்வாகிகள் சந்திப்பு கூட்டம் சீலநாயக்கன்பட்டி பைபாசில் உள்ள தாளமுத்து நடராஜன் திடலில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக விஜய் சென்னையிலிருந்து தனி விமானம் மூலம் சேலம் ஓமலூர் காமலாபுரம் விமான நிலையத்திற்கு வந்தார். விமான நிலையத்திலிருந்து வெளியே வந்த விஜயைக் காண தவெகவினர் பலர் அங்கே காத்து நின்றனர்.

அங்கிருந்த தொண்டர்களை அப்புறப்படுத்திவிட்டு வாகனங் களுக்கு வழி விட போக்குவரத்துக் காவலர்கள் உள்ளிட்டோர் கடும் முயற்சி மேற்கொண்டனர். ஓமலூர் விமான நிலையத்திலிருந்து கூட்டம் நடைபெறும் வளாகத்துக்கு வர அரை மணி நேரம் ஆகும் என்று கூறப்பட்ட நிலையில், மிகச் சரியாக 12.25 மணிக்கு கூட்டம் நடைபெறும் இடத்துக்கு வந்தடைந்தார். வழிநெடுகிலும் அவருக்கு தொண்டர்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர். தாளமுத்து நடராஜன் திடலுக்கு வருகை தந்த போது விஜய்க்கு பூத்தூவி தொண்டர்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர்.

கூட்டத்தில் விஜய் பேசியதாவது:

‘நம்முடைய பவர் எப்போது வரும் தெரியுமா? நம்மை குறைத்து மதிப்பிடுபவர்களுக்கு நாம் யார் என்பதைக் காட்டுவதற்கு தோன்றுவது தான் உத்வேகம். அது எதில் தோன்றும் தெரியுமா? எந்த விஷயத்தில் நம்மை கிண்டலும், கேலியும் பேசுவார்கள் தெரியுமா? அதே விஷயத்தை நாம் பாசிட்டிவா மாற்றுவது தான். அங்கிருந்து தான் பவர் தோன்றும். அதுதான் உண்மையான பவர் தான். அதிலிருந்து நாம் தொடங்குவோம்.

### விஜய், வீட்டை விட்டு வெளியே வா?

விஜய் வீட்டை விட்டு வெளியே வா? பனையூரை விட்டு வெளியே வா? என்று சொல்பவர்களுக்கு எனது வீடு எங்கிருக்கு தெரியுமா? எனது வீடு எது தெரியுமா? என்னை சீண்டிப் பார்ப்பதாக நினைத்து கிண்டல் செய்பவர்களுக்கு நான் சொல்கிறேன். தமிழ்நாடு... தமிழ்நாடு என்று சொல்கிறார்களே.. அது மற்றவர்களுக்கு மாநிலமாக இருக்கலாம். ஆனால் என்னைப்பொறுத்தவரையில் தாய்நாடான தமிழ்நாடு தான் என் வீடு.... என் வீட்டில் 8 கோடி பேர் உள்ளனர். ஒட்டு மொத்த தமிழ்நாட்டு மக்களுக்கும் என் மக்கள். என் குடும்பம்... என் உறவு.... என் சொந்தம். எனக்கு எல்லாம் கொடுத்த இந்த 8 கோடி சொந்தகளுடன் இனி நிற்கப்போவது இந்த விஜய் மட்டும் தான்.

### முதல் படைவீரன்

தமிழ்நாட்டின் முதல் படைவீரனாக, முதல் பாதுகாவலானாகநிற்கப்போவது இந்த விஜய்தான். அது தான் என் குறிக்கோள். இந்த விஜய் உங்களிடம் ஓட்டுக்கேட்க மட்டும் வரவில்லை, நீதி கேட்கத்தான் வந்திருக்கிறேன். உங்களுக்கு நீதி கிடைக்கதான் நான் அரசியலுக்கு வந்தேன். இந்த விஜய் எதற்கு அரசியலுக்கு வந்தான்.



தன்னை நேசித்த உங்களுக்காக அரசிலுக்கு வந்தான். அது தவறா? எல்லாதைதையும் ஒதுக்கிவிட்டு அரசியலுக்கு மட்டும் வந்தது தவறா? மற்ற கட்சிகளுக்கு மாநாடு மற்றும் பொதுகூட்டம் நடத்த அனுமதி கொடுப்பார்கள். ஆனால் நமக்கு மட்டும் எதுக்கும் அனுமதி கொடுக்கமாட்டார்கள். இது என்ன நியாயம்?

நான் மக்களை சந்திப்பதற்கும், அவர்கள் குறைய கேட்பதற்கோ... அல்லது மக்கள் என்னை சந்திப்பதற்கு உரிய இடமோ, பாதுகாப்போ கொடுக்க மாட்டார்கள். கொடுக்கவும் விடமாட்டார்கள். இது ஸ்டாலின் சார் ஆப்பரேட்டிங் புரொசிஜர் (SOP). இது என்ன நியாயம். நான் உண்மையானவன் என்பது தெரியும். நமக்கு எதிரா சதி செய்வது யார் என்பது உங்களுக்கு தெரியும். அதனால் என் சொந்தங்களான உங்களிடம் நீதி கேட்காமல் யாரிடம் நீதி கேட்பேன்.

### விசிலை ஊதி அனுப்புங்கள்..

‘செல்பே’ எடுக்காத கூட்டணி கணக்கும், காசு கொடுத்து ஓட்டு வாங்குவதும் நான் வந்தபிறகு எடுபடாது. ஆயிரம், 2 ஆயிரம், 5 ஆயிரம் என்று கொடுப்பார்கள். அது உங்கள் பணம். பணத்தை வாங்கிக் கொண்டு, அவர்கள் காதில் விசிலை ஊதி அனுப்புங்கள். இளம் தலைமுறையினருக்கும் ஒன்று சொல்ல வேண்டும். பணம் கொடுக்கும் கலாசாரத்தை ஒழிக்க வேண்டும். எல்லோரும் கையை நீட்டுங்கள். உறுதிமொழி ஒன்று எடுத்துக்கொள்வோம். "எங்கள் ஓட்டு எங்கள் உரிமை, எங்களை யாரும் விலைக்கு வாங்க முடியாது. எங்கள் ஓட்டு விசில் சின்னத்திற்கு. வேறு யாரையும் நம்பி ஏமாறமாட்டோம்.

நீங்கள் கொள்ளையடித்த பணத்தை குப்பையில்தான் போடவேண்டும். மக்கள் குப்பையில்தான் உங்களை தூக்கிப் போடுவார்கள். மக்களையும், மக்கள் எதிர்காலத்தையும் மனதில் வைத்து அரசியலுக்கு வந்துள்ளேன். பெற்றோரிடம் யாருக்கு ஓட்டு என்று மைக்கை நீட்டி கேட்டால், அதற்கு பின்னால் நின்று விசில் சின்னத்துக்கு என்று சொல்லும்மா என்று குழந்தைகள் பேசும் வீடியோவை நான் பார்த்தேன்.

நான் எந்த கட்சியையும் ஒழிக்க அரசியலுக்கு வரவில்லை. வெறுப்பு அரசியல் செய்யவும் வரவில்லை. தேர்தலில் நின்று ஜெயித்து மக்களுக்கு நல்லது செய்ய அரசியலுக்கு வந்துள்ளோம். நாங்கள் ஆட்சிக்கு வந்தால், மக்களின் அடிப்படையை தீர்ப்பதே முதல் வேலை. அதை தேடிப்போவதே அஜண்டா. தேர்தல் அறிக்கை தயாராகிக் கொண்டு இருக்கிறது. விரைவில் வெளிவரும்.

இவ்வாறு அவர் பேசினார்.

### “ஒரு பிரச்சினையை சந்திக்கும் திறன் கூட விஜய்க்கு இல்லை!” – பழனிசாமி தாக்கு

கரூரில் ஒரு பிரச்சினை நடந்தது, 72 நாட்கள் அவர் வீட்டை விட்டே வெளியே வரவில்லை. ஏன் வீட்டை விட்டு வெளியே வரவில்லை என கேட்பதாக விஜய் சொல்கிறார். தலைவர் என்றால் கேள்வி கேட்கத்தான் செய்வார்கள். பதில் சொல்லித்தான் ஆகவேண்டும். நீங்கள் எவ்வளவு கேள்வி கேட்கிறீர்கள்.

ஒரு கட்சியை நடத்தினால், நிருபர்கள், மக்கள் கேட்கும் கேள்விக்கும் பதில் சொல்ல வேண்டியது தலைவரின் கடமை. அதனை அவர் செய்துள்ளாரா? பிரச்சினை நடந்தவுடன் 15 நாட்கள் கட்சி அலுவலகத்தை மூடிவிட்டு சென்றுவிட்டார். அப்புறம் எப்படி கட்சி நடத்தி மக்களுக்கு நல்லது செய்யப் போகிறார். ஒரு பிரச்சினையை சந்திக்கும் திறன்கூட அவருக்கு இல்லை. இது ஜனநாயக நாடு. யாரும் கட்சி தொடங்கலாம். மக்கள் அங்கிகரித்தால் வெற்றி பெறலாம்” என்றார்.

## பட்ஜெட் கூட்டத்தொடர் முதல் அமர்வு நிறைவு: மக்களவை மார்ச் 9ந்தேதி வரை ஒத்திவைப்பு

**சென்னை, பிப்.13:**

பட்ஜெட் மீதான விவாதத்தில் நேற்று முன் தினம் பேசிய மக்களவை எதிர்க்கட்சி தலைவர் ராகுல் காந்தி பிரதமர் மோடியை கடுமையாக விமர்சித்தார். ராகுலை எம்.பி. பதவியில் இருந்து நீக்கம் செய்வதற்காக நோட்டீசை பாஜக எம்.பி. நிஷிகாந்த் துபே வழங்கி உள்ளார்.

இந்த நிலையில் இன்று காலை 11 மணிக்கு நாடாளுமன்ற இரு அவைகளும் கூடியது. மக்களவை கூடியதும் நடப்பு பட்ஜெட் கூட்டத்தொடரின் முதல் அமர்வின் கடைசி நாளான இன்று ஜனவரியில் இறந்த எம். பி. பகவான் தாஸ் ரத்தோரை நினைவு கூறும் வகையில் இரங்கல் தீர்மானம் வாசிக்கப்பட்டது.

இதனையடுத்து எதிர்க்கட்சி எம்.பிக்கள் அமெரிக்காஇந்தியா வர்த்தக ஒப்பந்தம் உள்ளிட்ட பல்வேறு விஷயங்களை வலியுறுத்தி கடும் அமளியில் ஈடுபட்டனர்.

இதனால் அவையில் கூச்சல், குழப்பம் நிலவியது. அவை மதியம் 12 மணி வரை ஒத்திவைக்கப்பட்டது.

பின்னர் 12 மணிக்கு அவை கூடியதும் எதிர்க்கட்சி எம். பி.க்கள் தொடர்ந்து கடும் அமளியில் ஈடுபட்டனர். இதனையடுத்து நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடரின் முதல் பகுதி நிறைவடைந்து, இன்று நாள் முழுவதும் அவை ஒத்திவைக்கப்பட்டு இரண்டாம் பகுதிக்காக மக்களவை 9-ம் தேதி அன்று மீண்டும் கூடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதே நேரத்தில் காலை 11 மணிக்கு மாநிலங்களவை கூடி நடந்து வருகிறது. பட்ஜெட் மீதான விவாதங்களில் எம்.பி.க்கள் விவாதங்களை முன் வைத்தனர். இன்றுடன் மாநிலங்களவையிலும் முதல் அமர்வு நிறைவடைகிறது.

## தோல்வி பயத்தில் ஸ்டாலின் என்னவெல்லாம் செய்கிறார் பார்த்தீர்களா?

**சென்னை, பிப். 14:**

மகளிரின் உரிமைத் தொகை கணக்கில் ரூ.5,000 வரவு வைக்கப்பட்டிருப்பதை எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி விமர்சித்துள்ளார்.

இப்போது தேர்தல் நேரத்து பணம் வரவு வைக்கும் இந்த ‘Patchwork’ வேலையை தமிழ்நாட்டுப் பெண்கள் நம்பி விடுவார்களா என்ன? என்று அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

பிப்ரவரி மாதத்துக்கான மகளிர் உரிமைத் தொகை ரூ. 1,000, மார்ச் மற்றும் ஏப்ரல் மாதத்துக்கான தொகை ரூ. 2,000 மற்றும் கோடைக்கால சிறப்பு தொகுப்பாக ரூ. 2,000 என மொத்தம் ரூ. 5,000 இன்று காலை மகளிர் உரிமைத் தொகை கணக்குகளில் வரவு வைக்கப்பட்டதாக முதல்வர் ஸ்டாலின் அறிவித்தார். தேர்தல் தோல்வி பயம், பொம்மை முதல்வரை என்னவெல்லாம் செய்ய வைக்கிறது என்று பார்த்தீர்களா? 28 மாதங்களாக "1000 ரூபாய்" கொடுக்காமல் இழுத்து அடித்த ஸ்டாலின் அரசு, தற்போது 3 மாதத் தொகையோடு சேர்த்து "கோடைக்கால சிறப்புத் தொகை" கொடுக்கிறாராம். தமிழக மக்களின் பேராதரவுடன் இன்னும் மூன்று மாதங்களுக்குள் அமையவுள்ள அண்ணா தி.மு.க. ஆட்சியில், தமிழகப் பெண்களுக்கு "குல விளக்குத் திட்டம்" மூலம் அனைத்து குடும்பத் தலைவிக்கும் "மாதம் ரூ.2000" என்று நான் அளித்த வாக்குறுதியானது, அண்ணா தி.மு.க. ஆட்சி அமைந்தவுடன் அமல்படுத்தப்படும்” எனத் தெரிவித்துள்ளார்.

ADVERTISING
FOR ALL TYPES OF NOTICE ADS
Public Notice | Loss of Share
Legal Notice | Merger
Tender Notice | Acquisition
Society Notice | AFR, UFR, etc.
for just Rs. 249/- only in Daily Print Paper
ஆனந்த பாஸ்கர்
9337501889, 7789941009
Email: anandabhaskarnews@gmail.com



## திருக்குறள் குறள்-530

**உழைப்பிரிந்து காரணத்தின் வந்தானை வேந்தன்
இழைத்திருந் தெண்ணிக் கொளல்**



தன்னிடமிருந்து பிரிந்து சென்று பின் ஒருக் காரணம்பற்றித் திரும்பிவந்தவனை, அரசன் அவன் நாடிய உதவியைச் செய்து ஆராய்ந்து உறவு கொள்ள வேண்டும்.

## சிந்திக்க ஒரு நொடி



அன்று இல்லங்கள்
கல்லால் கட்டப்பட்டன
உள்ளங்கள் பொன்னாக
இருந்தன...
ஆனால்.....
இன்று வீடுகள்
பொன்னாக உள்ளன
உள்ளங்கள் கல்லாக
உள்ளன

**உஷா முத்துராமன்**

## ஆர்ப்பாட்டம்



நில அளவர் இனத்தையும் வரைவாளர் இனத்தையும் ஒருங்கிணைப்பு செய்து துறையை மறுசீரமைத்திட வலியுறுத்தி, சென்னையில் நில அளவை பதிவேடுகள் துறை ஆணையரக அலுவலகம் முன் நேற்று ஆர்ப்பாட்டம் நடந்தது.

## ஓய்வு பெற்ற டான்டீ தோட்ட தொழிலாளர்கள் மற்றும் ஊழியர்களுக்கு பணிக்கொடை



குன்னூர் டான்டீ அலுவலகத்தில் ஓய்வு பெற்ற டான்டீ தோட்ட தொழிலாளர்கள் மற்றும் ஊழியர்களுக்கு பணிக்கொடை மற்றும் விடுப்புடன் கூடிய ஊதியத்தை நீலகிரி மக்களவை உறுப்பினர் ஆ.ராசா வழங்கினார். அருகில் அரசு கொறடா கா.ராமசந்திரன் உள்ளிட்டோர்.

## பேராசிரியர்கள் ஆர்ப்பாட்டம்



தூத்துக்குடியில் அரசு உதவி பெறும் கல்லூரி பேராசிரியர்கள் நேற்று பணி மேம்பாடு ஊதியம் வழங்கக் கோரி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

## விழிப்புணர்வு



பெரம்பலூர் ஊராட்சி ஒன்றிய பகுதியில் குழந்தை திருமணத்திற்கு எதிராக வீடு வீடு வீடாகச் சென்று விழிப்புணர்வு வில்லைகள் ஒட்டுவதை கலெக்டர் மிருணாளினி தொடங்கிவைத்தார்.

## ஆர்ப்பாட்டம்



புதுக்கோட்டையில் அதிமுக மாவட்ட செயலாளர் வைரமுத்து தலைமையில் திமுக அரசை கண்டித்து ஆர்ப்பாட்டம் நடந்தது.

## கலைஞர் சிலை திறப்பு முன்னிட்டு அன்னதானம் வழங்கும் விழா: மாநில விவசாய தொழிலாளர்அணி துணை செயலாளர் பங்கேற்பு

**செய்யாறு பிப்.14:**

செய்யாறில் முத்தமிழறிஞர் கலைஞர் சிலை திறப்பு முன்னிட்டு அன்னதானம் வழங்கும் விழா நேற்று முன்தினம் இரவு நடைபெற்றது.

திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறு கிழக்கு ஒன்றிய துணை செயலாளர் சா.நர்கிஸ் பானு சான்பாஷா ஏற்பாட்டில் மாநில விவசாய தொழிலாளர் அணி துணை செயலாளர் ,முன்னாள் எம்எல்ஏ வ.அன்பழகன் அன்னதானத்தை துவக்கி வைத்தார்.

நகர மன்ற தலைவர் ஆ. மோகனவேல், பொதுக்குழு உறுப்பினர் வெங்கடேஷ் பாபு ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

துணை செயலாளர்கள் சீனிவாசன், சக்திவேல் ,திமுக நிர்வாகிகள் வழக்கறிஞர்கள் அசோக்,சுந்தர் கருணாநிதி, ஆசிரியர்கள் ரமேஷ்,சேகர்,



செய்யாறில் கலைஞர் சிலை திறப்பு முன்னிட்டு செய்யாறு கிழக்கு ஒன்றிய துணை செயலாளர் சா. நர்கீஸ் பானுசான் பாஷா ஏற்பாட்டில் முன்னாள் எம் எல் ஏ வ.அன்பழகன் அன்னதானம் வழங்கினார்.

திமுக நிர்வாகிகள் ஸ்ரீதர், ரஜினி முருகன், பூபதி ,தனசேகர் , பாலாஜி, சேட்டு, சௌகார்பாய், கார்த்திக் ,மற்றும் காங்கிரஸ் பொதுக்குழு உறுப்பினர் தில்லை ,நகர மன்ற உறுப்பினர்கள் அகமது, ரவி ,கங்காதரன், செந்தில் , அண்ணாதுரை உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

மேலும் திரளான பொதுமக்கள் பங்கேற்று அன்னதானம் பெற்று பயன்பெற்றனர்.

## சீர்காழியில் சார் பதிவாளர் அலுவலகம் புதிய கட்டிடம் திறப்பு விழா

**சீர்காழி , பிப் .14:**

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழியில் பத்திர பதிவு அலுவலகம் (சார் பதிவாளர் அலுவலகம் ) புதிய கட்டிட திறப்பு விழா சிறப்பாக நடைபெற்றது. தமிழ்நாடு முதலமைச்சர் காணொளி மூலம் திறந்து வைத்தார்.

இந்த நிகழ்ச்சியில் சீர்காழி தொகுதி ரியல் எஸ்டேட் செய்வோர் நல சங்கம் மற்றும் சீர்காழி தாலுக்கா வியாபாரிகள் சங்கம் சார்பாக திரளானவர்கள் கலந்து கொண்டனர். சார்பதிவாளர் அனிதா மற்றும் ஊழியர்களுக்கு ரியல் எஸ்டேட் சங்கத்தின் சார்பாக இனிப்புகளும் நினைவு பரிசும் வழங்கப்பட்டது. சீர்காழி தாலுக்கா வியாபாரிகள் சங்கம் சார்பாகவும் நினைவு



பரிசு வழங்கப்பட்டது. இந்த நிகழ்வில் ரியல் எஸ்டேட் சங்க தலைவர் பொறியாளர் சுப்பிரமணியன், மாதிரவேலூர் பள்ளி செயலாளர் சரண்ராஜ், ரியல் எஸ்டேட் சங்க செயலாளர் கோவிந்தராஜன், பொருளாளர் ஃபெலிக்ஸ் ராஜ் , துணை தலைவர்கள் கிருஷ்ணமூர்த்தி, முத்துராமலிங்கம், சத்யநாராயணன், வெற்றிலை முருகன் இணைச் செயலாளர் குணசேகரன், பிரகாஷ் செம்மங்குடி குமார், கிளை செயலாளர் பாலாஜி , காமராஜர், சுந்தர், சட்ட ஆலோசகர் ராம.சிவசங்கர், மக்கள் தொடர்பு அலுவலர் தில்லை நடராஜன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

## 2025ம் ஆண்டுக்கான கலைஞர் காவல் கோப்பை மாநில அளவில் முதலிடம் விழுப்புரம் காவல் நிலையம்



தமிழ்நாட்டில் சிறப்பாக செயல்படும் அனைத்து மகளிர் காவல் நிலையங்களை ஊக்குவிக்கும் வகையில் 2025ம் ஆண்டுக்கான கலைஞர் காவல் கோப்பைகளை மாநில அளவில் முதலிடம் விழுப்புரம் காவல் நிலையம், இரண்டாம் இடம் திண்டுக்கல் காவல் நிலையம்,3ம் இடம்பொள்ளாச்சி காவல் நிலையம் ஆகியவற்றுக்கு முதல்வர் ஸ்டாலின் நேற்று வழங்கினார்.

## வாடிப்பட்டியில் அ.தி.மு.கவினர் ஆர்ப்பாட்டம்



**வாடிப்பட்டி, பிப்.14:**

மதுரை மாவட்டம் வாடிப்பட்டி வடக்கு ஒன்றிய அ.தி.மு.க சார்பாக கிராம மக்களின் 125 நாள் வேலை உறுதி திட்டத்தைசீர்குலைக்கும் முயலும் திமுக அரசை கண்டித்து வாடிப்பட்டி ஊராட்சி ஒன்றிய அலுவலகம் முன்பு ஆர்ப்பாட்டம் நடந்தது.

இந்த ஆர்ப்பாட்டத்திற்கு ஒன்றிய செயலாளர் மு காளிதாஸ் தலைமை தாங்கினார். மகளிர் அணி மாவட்ட செயலாளர் லட்சுமி, பாரதிய ஜனதா கட்சி மண்டல் தலைவர் மாயகிருஷ்ணன், தர்மர், முன்னாள் ஊராட்சி மன்ற தலை வர்கள் ஆலயமணி, தெய்வ தர்மர், முன்னாள் ஒன்றிய கவுன்சிலர்கள் பரந்தாமன், செந்தாமரைக் கண் ணன், வழக்கறிஞர் செந்தூர் பாண்டி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் அ.தி.மு.க நிர்வாகிகள் வி.எஸ். பாண்டி, திருப்பதி,சசி, பிரசன்னா, பாலாஜி, பிச்சை, மூர்த்தி, விஸ்வநாதன், பாரதிய ஜனதா கட்சி நகர மண்டல் செயலாளர் தர்மராஜ் பிரச்சார ஒன்றிய செயலாளர் நாகேந்திரன் விருந்தோம்பல் பிரிவு மாவட்ட செயலாளர் ராமதாஸ் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## கொடி நாள் உறுதிமொழி



சென்னை தேமுதிக அலுவலகத்தில் பிரேமலதா தலைமையில் கொடி நாள் உறுதிமொழி எடுக்கப்பட்டது.

## திமுக சார்பில் ஆர்ப்பாட்டம்



மத்திய பட்ஜெட்டில் தமிழகத்தை புறக்கணித்ததை கண்டித்து கோவை டாடாபாத் சிவானந்தா காலனியில் திமுக சார்பில் ஆர்ப்பாட்டம் நடந்தது.

## மகளிருக்கு நலத்திட்ட உதவிகள்



**வாடிப்பட்டி, பிப்.14:**

மதுரை மாவட்டம் வாடிப்பட்டி மூவேந்தர் முன்னேற்றக் கழக அலுவலகத்தில் மாநில பொருளாளர் நாகராஜன் 45 வது ஆண்டு சபரிமலை சபரிமலை ஐயப்பன் யாத்திரியை முன்னிட்டு ஏழை எளிய மகளிர்க்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி நடந்தது. இந்த நிகழ்ச்சிக்கு மாவட்ட தலைவர் எம் கே கணேசன் தலைமை தாங்கினார் மாவட்ட செயலாளர் செந்தில் பாண்டி முன்னிலை வகித்தார். ஒன்றிய தலைவர் கருப்பையா வரவேற்றார். இந்த நிகழ்ச்சியில் ஏழை எளியோருக்கு இலவச சேலைகளை மாநில பொருளாளர் நாகராஜன் வழங்கினார். இதில் கட்சி நிர்வாகிகள் விவசாய அணி செயலாளர் வையாபுரி, நாகசுப்பிரமணி, கவின் உள்பட பலர் கலந்து கொண்டனர். முடிவில் தொழிலாளர் அணி செயலாளர் செல்வம் நன்றி கூறினார்.

## தமிழக அரசின் நிர்வாக சீர்கேட்டை கண்டித்து அதிமுக சார்பில் தமிழகமெங்கும் கண்டன ஆர்ப்பாட்டம்

**திருவண்ணாமலை, பிப்.14:**

திருவண்ணாமலை மாவட்டத்தில் 125 நாள் கிராமப்புற வேலைவாய்ப்பு உறுதி அளிப்பு திட்டத்தில், தமிழக அரசின் நிர்வாக சீர்கேட்டை கண்டித்து ,அதிமுக சார்பில் தமிழகமெங்கும் கண்டன ஆர்ப்பாட்டம் நடந்தது.

செய்யாறு தாலுக்கா, அனக்காவூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தின் எதிரில் அதிமுக சார்பில் 125 நாள் கிராமப்புற வேலைவாய்ப்பு உறுதி அளிப்பு திட்டத்தில் தமிழக அரசின் நிர்வாக சீர்கேட்டை கண்டித்து அதிமுக சார்பில் தமிழகமெங்கும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

எம்.ஜி.ஆர் மன்ற மாநில துணைச் செயலாளர் வழக்கறிஞர் ஜாகீர் உசேன் அவர்கள் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு ஆர்ப்பாட்டத்தை துவக்கி வைத்து பேசினார்.

இக்கூட்டத்திற்கு அனக்காவூர் மேற்கு ஒன்றிய செயலாளர் துரை மற்றும் அனக்காவூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் சிவராஜ் ஆகியோர் தலைமை தாங்கினர்கள். மாவட்ட வர்த்தக அணி செயலாளர் பூக்கடை கோபால் மற்றும்





கோவிந்தராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தார்கள்.

அதிமுக அனக்காவூர் மேற்கு ஒன்றிய அவை தலைவர சேகர் வரவேற்றார். அனக்காவூர் கிழக்கு ஒன்றிய அவைத்தலைவர் கோபாலகிருஷ்ணன் நன்றி கூறினர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் அதிமுக கூட்டணி கட்சிகளான பாஜக, பாமக,உள்ளிட்ட கூட்டணி கட்சியினர் கலந்து கொண்டார்கள். இந்த ஆர்ப்பாட்டத்தில் பெண்கள் ஏராளமாக கலந்து கொண்டு கண்டன கோஷங்கள் எழுப்பினார்கள்.

**தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

## அனக்காவூர் ஒன்றிய அதிமுக சார்பில் மாநில அரசை கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்

**செய்யாறு பிப். 14:**

திருவண்ணாமலை மாவட்டம், அனக்காவூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் முன்பு 100 நாள் வேலை திட்டத்தை 125 நாட்களாக உயர்த்தப்பட்டதை சீர்குலைக்க முயலும் மாநில அரசை கண்டித்து அனக்காவூர் கிழக்கு, மேற்கு ஒன்றிய அதிமுக சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம். அனைத்து உலக எம்ஜிஆர் மன்ற துணை செயலாளர் ஜாகிர் உசேன் தலைமையில் நடைபெற்றது.

இதைத்தொடர்ந்து நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தில் பேசிய ஜாகிர் உசேன் பேசியதாவது, வருகின்ற சட்டமன்றத் தேர்தலில் கழகப் பொதுச் செயலாளர் எடப்பாடியார் 10 முத்தான தேர்தல் வாக்குறுதிகளை அளித்துள்ளார்இதைத்தொடர்ந்து 100 நாள் வேலை திட்டத்தை 125 நாட்களாக உயர்த்தியதை



கொச்சைப்படுத்தி பேசிய மாநில அரசை கண்டித்து கண்டன கோஷங்கள் எழுப்பப்பட்டது.

அனக்காவூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் பையூர் சிவராஜ், அனக்காவூர் மேற்கு ஒன்றிய செயலாளர் செய்யாற்றை வென்றான் துரை ஆகியோரின் ஏற்பாட்டில் நடைபெற்ற ஆர்பாட்டத்தில் அதிமுக நிர்வாகிகள் மற்றும் தேசிய கூட்டணி கட்சி சேர்ந்த நிர்வாகிகள் ஒன்றிய அவைத் தலைவர் சேகர்,வர்த்தக அணி மாவட்ட செயலாளர் கோபால், அம்மா பேரவை மாவட்ட இணை செயலாளர் கோவிந்தராஜ், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் துளசிராமன், பொன்னுரங்கம், சீனு, அமாமுக நிர்வாகிகள் சண்முகம், ராஜா,பாமக நிர்வாகிகள் நடராஜ், மகேந்திரன், பார்த்திபன், அருண், யுவராஜ், பூங்காவனம், பிஜேபி நிர்வாகிகள் சிவா, ஜெயபிரகாஷ் உள்ளிட்ட பொதுமக்கள் பெரும் திரளாக கலந்து கொண்டனர்.

# சென்னை மெட்ரோ 2-ம் கட்ட திட்டம்: பூந்தமல்லி-வடபழனி இடையே பாதுகாப்பு கமிஷனரின் ஆய்வு நிறைவு



**சென்னை, பிப்.14:**

சென்னையில் 116 கிலோ மீட்டர் தொலைவுக்கு 3 வழித்தடங்களில் 2-ம் கட்ட மெட்ரோரெயில்திட்டப்பணிகள் நடந்து வருகிறது. இதில், கலங்கரை விளக்கம் பூந்தமல்லி வரையிலான வழித்தடத்தில் (26 கிலோ மீட்டர்) பூந்தமல்லி போரூர் வரையிலான 10 கிலோ மீட்டர் தொலைவுக்கு பணிகள் முடிந்துள்ளது.

இவ்வழித்தடத்தில் மெட்ரோ ரெயில் சேவையை தொடங்குவதற்கான பாதுகாப்பு சான்றிதழையும் ரெயில்வே வாரியம் வழங்கியது. இதேபோல, போரூர் - வடபழனி இடையில் கடந்த மாதம் 11-ந்தேதி வெற்றிகரமாக சோதனை ஓட்டம் நடத்தி பார்க்கப்பட்டது. இதனால், பூந்தமல்லி - வடபழனி இடையில் மெட்ரோ ரெயிலை இயக்கு வதற்கான அனைத்து சோதனை பணிகளையும் சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம் முழுமையாக முடித்தது.

இதனைத் தொடர்ந்து பூந்தமல்லி - வடபழனி இடையிலான 16 கிலோ மீட்டர் தூரத்துக்கு தென்மண்டல ரெயில்வே பாதுகாப்பு கமிஷனர் ஏ.எம்.சவுத்ரி தலைமையிலான குழுவினர் ஆய்வு பணிகளை தொடங்கினர். பூந்தமல்லி மெட்ரோ ரெயில் நிலையத்தில் இருந்து காலை 10 மணிக்கு சோதனை தொடங்கியது.

அய்யப்பன்தாங்கல் நிலையம் முதல் வடபழனி மெட்ரோ நிலையம் வரை மொத்தம் 11 மெட்ரோ நிலையங்கள் உட்பட 8.5 கிலோமீட்டர் தூரம் ஆய்வு மேற்கொண்டனர்.

கடந்த 2 நாட்களாக மின்சாரம், தண்டவாளம் மற்றும் கட்டுமான பணிகள் குறித்த பல்வேறு கட்டமாக ஆய்வுகள்மேற்கொள்ளப்பட்டன. மெட்ரோரெயிலை அதிவேகத்தில் இயக்கும் சோதனை இம்மாத இறுதியில் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# கடந்த ஓராண்டில் மட்டும் 15.65 லட்சம் இந்தியர்கள் மலேசியா பயணம்

**கோவை, பிப்.14:**

மலேசியாவைசிறந்த சுற்றுலா இலக்காக மேம்படுத்தும் நோக்கில் டூரிசம் மலேசியா (-எம்டிபிபி), மலேசியா சுற்றுலா பயண முகவர்கள் சங்கம் (எம்ஏடிடிஏ) இணைந்து 'விசிட் மலேசியா இயர் 2026' (விஎம்ஒய்2026) திட்டத்தை பிரபலப்படுத்தும் வகையில் 'சேல்ஸ் மிஷன் 2026' என்ற பயண ஊக்குவிப்பு நிகழ்ச்சியை பிப்ரவரி 11-ஆம் தேதி கோவை லீ மெரிடியன் ஓட்டலில் நடத்தியது.

இந்த நிகழ்ச்சியில் மலேசியாவைச் சேர்ந்த 49 சுற்றுலா நிறுவனங்களும், கோவை மற்றும் கொங்கு மண்டலத்தைச் சேர்ந்த முக்கிய சுற்றுலா மற்றும் பயண வர்த்தக நிறுவனங்களும் கலந்து கொண்டன. இதன் மூலம் கொங்கு மண்டலத்துடனான மலேசியாவின் சுற்றுலா தொடர்பு மேலும் வலுப்பெற்றதாக தெரிவிக்கப்பட்டது.

டூரிசம் மலேசியா தலைவர் டத்தோ மனோகரன் பெரியசாமி தலைமை வகித்து பேசுகையில், "மலேசியா பல்வேறு வகையான சுற்றுலா வாய்ப்புகளை வழங்கும் நாடாக உள்ளது. ஓய்வுநேரப் பயணம், குடும்ப விடுமுறை, தீவுகள், ஷாப்பிங், கலை நிகழ்ச்சிகள், இயற்கை சுற்றுலா ஆகிய துறைகளில் இந்தியர்களின் வருகை அதிகரித்து வருகிறது. மேலும் மாநாடுகள், கண்காட்சிகள், ஆடம்பரத் திருமணங்கள் போன்ற நிகழ்வுகளுக்காகவும் இந்தியர்கள் மலேசியாவை தேர்வு செய்கின்றனர்," என்றார்.

21 லட்சம் பேரை ஈர்க்க இலக்கு

அவர் மேலும் கூறுகையில், "இந்தியா, மலேசியாவின் முக்கிய சுற்றுலா சந்தைகளில் ஒன்றாகத் திகழ்கிறது. 2025-ஆம் ஆண்டில் 15,65,194 இந்தியர்கள் மலேசியா சென்றுள்ளனர். இது 2024-ஆம் ஆண்டின் 13.65 லட்சம் வருகைகளுடன் ஒப்பிடுகையில் 14.6 சதவீத உயர்வாகும். 'விசிட் மலேசியா இயர் 2026' திட்டத்தின் கீழ் இந்தியாவிலிருந்து 21 லட்சம் சுற்றுலாப் பயணிகளை ஈர்க்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது," என்றார்.

# திருவாரூரில் ஊரக வளர்ச்சித்துறை அலுவலர்கள் சங்கம் ஆர்ப்பாட்டம்

**திருவாரூர், பிப்.14:**

ஊரக வளர்ச்சித் துறையில் காலியாக உள்ள அனைத்து பணியிடங்களையும் நிரப்ப வேண்டும். தமிழ்நாடு உறுதி அளிக்கப்பட்ட ஓய்வூதிய திட்டத்தில் ஊராட்சி செயலாளர்களை இணைக்க வேண்டும். ஊராட்சி செயலாளர்களுக்கு தேர்வு நிலை சிறப்பு நிலை, மருத்துவ விடுப்பு மற்றும் விடுபட்ட உரிமைகளை வழங்க வேண்டும். வீடு கட்டும் திட்டத்திற்கு தனியாக துணை வட்டார வளர்ச்சி அலுவலர் பணியிடம் ஏற்படுத்த வேண்டும் என்பன உள்ளிட்ட 18 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி ஊரக வளர்ச்சித் துறை அலுவலர்கள் காலவரையற்ற வேலை நிறுத்தம் போராட்டத்தை தொடங்கினர்.

திருவாரூர் கலெக்டர் கலெக்டர் அலுவலகம் முன்பு நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு, மாவட்டத் தலைவர் வசந்தன் தலைமை வகித்தார். மாவட்டச் செயலாளர் செந்தில் முன்னிலை விகித்தார். மாவட்டப் பொருளாளர் சிவக்குமார், மாநிலக் குழு உறுப்பினர் ராஜசேகர் உள்ளிட்ட பலர் பங்கேற்று முழக்கங்கள் இட்டனர். வேலை நிறுத்தம் காரணமாக, அனைத்து ஊராட்சி ஒன்றிய அலுவலகங்களும் வெறிச்சோடி காணப்பட்டது. ஊரக வளர்ச்சித்துறை அலுவலகப் பணிகள் பாதிக்கப்பட்டன.

# சிவகங்கை மன்னர் கல்லூரியில் போதைப்பொருள் எதிர்ப்பு விழிப்புணர்வு

**சிவகங்கை, பிப். 14:**

சிவகங்கை மன்னர் துரைசிங்கம் அரசு கலைக்கல்லூரியின் போதைப்பொருள் எதிர்ப்புக் குழு, இளைஞர் செஞ்சிலுவை சங்கம் மற்றும் ரெட்ரிப்பன் கிளப் இணைந்து நடத்திய போதைப்பொருள் ஒழிப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது.

நிகழ்ச்சியில், கல்லூரியின் போதைப்பொருள் எதிர்ப்புக் குழு ஒருங்கிணைப்பாளர் முனைவர் பி.சிவானந்தவேல் வரவேற்புரை ஆற்றினார். கல்லூரியின் முதல்வர் எஸ். அந்தோணி டேவிட்நாதன் தலைமை உரையாற்றினார். இதில், சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட சிவகங்கை மாவட்ட காவல்துணை கண்காணிப்பாளர் பி.எஸ். ராமகிருஷ்ணன், போதைப்பொருள்களின் பல்வேறு வகைகள் மற்றும் அவற்றின் பாதிப்புகள் குறித்து எடுத்துக்கூறினார்.

போதைக்கு எதிரான விழிப்புணர்வு: மேலும், போதைப் பொருளின் பயன்பாட்டிற்கு எதிரான விழிப்புணர்வு குறித்து விரிவாக உரையாற்றினார். காவல் ஆய்வாளர் சரவணன், போதை பொருள்களின் தீயவிளைவுகள் குறித்து உரையாற்றினார். நிகழ்ச்சியில், சிவகங்கை மற்றும் ராமநாடு என்.ஐ.பி காவல்துறை அதிகாரிகள், பேராசிரியர்கள் மற்றும் மாணவ மாணவிகள் பங்கேற்றனர்.

# என்.எல்.சி. ஒப்பந்த முறைகேடு புகார்: சி.பி.ஐ. விசாரணை நடத்த ஐகோர்ட் உத்தரவு

**சென்னை, பிப்.14:**

என்.எல்.சி. ஒப்பந்தங்களில் முறைகேடு நடந்ததாக கூறப்பட்ட புகார் மீது விசாரணை நடத்த சி.பி.ஐ.க.கு சென்னை ஐகோர்ட் உத்தரவிட்டுள்ளது.



ன்.எல்.சி. நிறுவனத்தில் பல்வேறு பணிகளுக்கு ஒப்பந்தங்கள் வழங்கியதில் சுமார் ரூ.442 கோடிக்கு முறைகேடு நடந்ததாக கூறி கடலூரைச் சேர்ந்த மணிகண்டன் என்பவர் சி.பி.ஐ.யிடம் புகார் அளித்திருந்தார். இந்நிலையில், தனது புகார் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்றும், தனது புகார் தொடர்பாக வழக்குப்பதிவு செய்து சி.பி.ஐ.க்கு உத்தரவிட வேண்டும் எனவும் கோரி சென்னை ஐகோர்ட்டில் வழக்கு தாக்கல் செய்திருந்தார்.

இந்த வழக்கு நீதிபதி நிர்மல்குமார் முன்பு இன்று விசாரணைக்கு வந்தபோது, சி.பி.ஐ. தரப்பில், "புகார்தாரர் தனது புகார் தொடர்பாக முழுமையான ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை. அவரை விசாரணைக்கு அழைத்தும் அவர் ஆஜராகவில்லை" என தெரிவிக்கப்பட்டது.

இதனை பதிவு செய்து கொண்ட நீதிபதி, புகாரில் உள்ள குற்றச்சாட்டுகள் குறித்து முகாந்திரம் இல்லாமல் நேரடியாக வழக்குப்பதிவு செய்ய முடியாது என்று கூறி, என்.எல்.சி. உயர் அதிகாரிகளுக்கு எதிரான புகார்களுக்கு ஆதாரங்களை சமர்ப்பிக்க மனுதாரர் தரப்பிற்கு உத்தரவிட்டார்.

மேலும், அந்த ஆதாரங்களின் அடிப்படையில் விசாரணை நடத்தி சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டும் என சி.பி.ஐ.க்கு உத்தரவிட்டு நீதிபதி வழக்கை முடித்து வைத்தார்.

# கோவை மாநகராட்சியில் ரூ.106.55 கோடி மதிப்பில் சாலைகள் சீரமைக்கும் பணி தொடக்கம்

**கோவை, பிப்.14:**

கோவை மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் ரூ.106.55 கோடி மதிப்பீட்டில் 1,847 சாலைகள் சுமார் 255.30 கிலோமீட்டர் நீளத்திற்கு சீரமைக்கும் பணிகளை கலெக்டர் பவன்குமார் கிரியப்பனவர் தொடங்கி வைத்தார்.

மத்திய மண்டலம், வார்டு எண் 83-க்கு உட்பட்ட ஆடிஸ் வீதி பகுதியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மேயர் கா.ரங்கநாயகி, மாநகராட்சி கமிஷனர் மா.சிவகுரு பிரபாகரன் ஆகியோர் முன்னிலையில் பணிகள் தொடங்கப்பட்டன.

முதலமைச்சர் வழிகாட்டு தலின்படி மாநகராட்சியின் கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு மற்றும் மத்திய மண்டலங்களில் வளர்ச்சித் திட்டப்பணிகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

இதற்கு முன்பு ரூ.200 கோடி ஒதுக்கீட்டில் 3,456 மண் மற்றும் பழுதடைந்த சாலைகள் (503.67 கி.மீ.) புதுப்பிக்கும் பணிகள் அறிவிக்கப் பட்டிருந்தன. இதில் 3,367 பணிகள் (487.91 கி.மீ.) நிறைவடைந்துள்ளன. மீதமுள்ள 89 சாலைகள் (16.83 கி.மீ.) பணிகள் நடைபெற்று வருகின்றன.

தற்போது தொடங்கப்பட்டுள்ள புதிய பணிகளில் தெற்கு மண்டலத்தில் ரூ.18.09 கோடி மதிப்பில் 383 சாலைகள் (44.41கி.மீ.), கிழக்கு மண்டலத்தில் ரூ.23.07 கோடியில் 307 சாலைகள் (55.17 கி.மீ.), மேற்கு மண்டலத்தில் ரூ.27.26 கோடியில் 468 சாலைகள் (60.06 கி.மீ.), வடக்கு மண்டலத்தில் ரூ.24 கோடியில் 458 சாலைகள் (62.48 கி.மீ.), மத்திய மண்டலத்தில் ரூ.13.05 கோடியில் 241 சாலைகள் (33.18 கி.மீ.) ஆகியவை அடங்கும்.

மொத்தம் 1,847 சாலைகள் 255.30 கி.மீ. நீளத்திற்கு தார்சாலை மற்றும் சிமெண்டு சாலைகளாக புதுப்பிக்கப்படுகின்றன. பணிகளை விரைவாகவும் தரமாகவும் நிறைவு செய்ய அதிகாரிகளுக்கு கலெக்டர் அறிவுறுத்தினார்.

நிகழ்ச்சியில் துணை மேயர் ரா.வெற்றிசெல்வன், தலைமைப் பொறியாளர் விஜயகுமார், மண்டலக்குழுத் தலைவர்கள் மற்றும் மாநகராட்சி அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

# நந்தா கல்வி நிறுவனங்களின் சார்பில் 15வது "படைப்பாற்றல்" கண்காட்சி

**ஈரோடு, பிப்.14:**

நந்தா கல்வி நிறுவனங்களின் சார்பில் 15வது "படைப்பாற்றல்" மாணவர் கண்காட்சி நந்தா தொழில்நுட்ப வளாகத்தில் கடந்த 5 மற்றும் 6 ஆகிய இரண்டு நாட்களில் நடைபெற்றது. பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களின் திறமைகளை வெளிக்கொணரும் மற்றும் ஊக்குவிக்கும் நோக்கில் இந்த கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டது.



துவக்க விழாவிற்கு ஸ்ரீ நந்தா கல்வி அறக்கட்டளை தலைவர் வி.சண்முகன் தலைமை தாங்கினார். சென்னையில் செயல்படும் பி.என்.ஒய் மிலோன் டெக்னாலஜிஸ் நிறுவன இயக்குனர் வித்யா துரை, நேஷ்னல் ஆக்ரோ பவுண்டேஷன் முதன்மை கண்காணிப்பு அலுவலர் எம்.ஆர். ராமசுப்பிரமணியன் மற்றும் சி.ஜி. பவுண்டேஷன் எஸ்.தருண்யா ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டு கண்காட்சியை தொடங்கி வைத்தனர்.

"ஒரு மாணவன், ஒரு மரம்" என்ற கருப்பொருளின் அடிப்படையில் 1100 மரக்கன்றுகள் மாணவர்களுக்கு வழங்கப்பட்டன. அவற்றை தங்களது இல்லங்களில் நட்டு பராமரித்து, மாதந்தோறும் வளர்ச்சி புகைப்படங்களை குறிப்பிட்ட இணைய தளத்தில் பதிவேற்ற வேண்டும் என அறிவுறுத்தப்பட்டது. சிறப்பாக வளர்த்த மாணவர்கள் ஆண்டுதோறும் பாராட்டப்படுவார்கள் என தெரிவிக்கப்பட்டது.

கண்காட்சியில் மருத்துவம், அறிவியல், பொறியியல் உள்ளிட்ட துறைகளில் 1439-க்கும் மேற்பட்ட கண்டுபிடிப்புகள் காட்சிப் படுத்தப்பட்டன. பொறியியல், சித்தா, இயற்கை மற்றும் யோகா மருத்துவம், மருந்தியல், செவிலியர், இயன்முறை மருத்துவம், கலை அறிவியல் மற்றும் பள்ளி மாணவர்களின் புதுமைகள் இடம்பெற்றிருந்தன. 143-க்கும் மேற்பட்ட தனித்துவமான படைப்புகள் இடம்பெற்றன.

இவ்விழாவில் அறக்கட்டளை அங்கத்தினர் பானுமதி சண்முகன், செயலர் எஸ்.நந்தகுமார் பிரதீப், செயலர் எஸ்.திருமூர்த்தி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

முதல் நாளில் ஈரோடு மாவட்டத்தின் பல பள்ளிகளில் இருந்து 520-க்கும் மேற்பட்ட மாணவர்கள் மற்றும் நந்தா கல்வி நிறுவன மாணவர்கள், பொதுமக்கள் உள்ளிட்ட சுமார் 7000 பேர் கண்காட்சியை பார்வையிட்டதாக நந்தா பொறியியல் கல்லூரி புதிய படைப்புகள் முன்னேற்ற மைய தலைவர் புலமுதல்வர் எம். ஈஸ்வரமூர்த்தி தெரிவித்தார்.

கண்காட்சி ஏற்பாடுகளை சிறப்பாக ஒருங்கிணைத்த நந்தா பொறியியல் கல்லூரி முதல்வர் யு.எஸ்.ரகுபதி, தொழில்நுட்பக் கல்லூரி முதல்வர் எஸ்.நந்தகோபால், நந்தா பாலிடெக்னிக் முதல்வர் ஜீ.மோகன்குமார் உள்ளிட்ட கல்வி நிறுவன முதல்வர்கள், பேராசிரியர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கு நிர்வாகத்தினர் பாராட்டு தெரிவித்தனர்.

தமிழ்நாடு இ பேப்பர்.காம்
www.tamilnaduepaper.com

இ பேப்பரை தினமும் இலவசமாக பெற விரும்புபவர்கள்.

"welcome Tamilnadu" என்று கீழ் உள்ள வாட்ஸ்ஆப் எண்ணிற்கு அனுப்பி வையுங்கள். தங்களின் அமைப்பு செய்திகள் தங்கள் பகுதியில் நடைபெறும் நிகழ்ச்சிகளை வெளியிட செய்தி மற்றும் புகைப்படத்தை கீழ்உள்ள வாட்ஸ்ஆப்பிற்கு அனுப்புங்கள்

94452 65389



## நலம் தரும் மருத்துவம்

# தலையின் பின்புறம் வலிக்கிறதா? அலட்சியம் வேண்டாம்... உயிருக்கே ஆபத்தாகலாம்!



தற்போதைய காலகட்டத்தில் பரபரப்பான வாழ்க்கை முறை மற்றும் மன அழுத்தம் காரணமாக பலரும் கழுத்து வலி மற்றும் தலையின் பின்புறவலி (NECK PAIN AND HIGH BLOOD PRESSURE) ஆகியவற்றை அனுபவித்து வருகின்றனர். இந்த வலிகள் பெரும்பாலும் நாம் அவற்றிற்கு கொடுக்கும் அதிக வேலைப்பளுவால் ஏற்படுகின்றன, என்று நினைத்திருப்போம். சில நேரங்களில் இந்த வலி தூக்கமின்மை, சோர்வு ஆகிய காரணங்களினாலும் ஏற்பட வாய்ப்புள்ளது.

இந்த வலியை தொடர்ச்சியாக உணர்ந்தாலோ, தினசரி அதை அனுபவித்தாலோ அதை சாதாரணமாக கருதி புறக்கணிப்பது ஆரோக்கியத்திற்கு மிகவும் ஆபத்தான செயலாகும். இந்த வலி திடீரென்று உருவாகலாம் அல்லது படிப்படியாக அதிகரித்துக் கொண்டே வரலாம். பலரும் இதை எலும்பு தேய்மானம் அல்லது தசை பிடிப்பு காரணமாக ஏற்படுகிறது என்று கூட நினைக்கிறார்கள். இதன் உண்மையான தீவிரத்தை பலரும் அறிவது இல்லை.

தலைவலி மற்றும் கழுத்து வலி ஆகியவை மற்ற சில காரணங்களாலும் ஏற்படலாம். குறிப்பாக உயர் ரத்த அழுத்தத்தின் அறிகுறியாகவும் இது இருக்கலாம். இந்த வலி எப்போது இயல்பானது? எப்போது இதற்கு எச்சரிக்கை தேவை? என்பதை புரிந்து கொள்வது மிகவும் அவசியம். ஒரே இடத்தில் மீண்டும் மீண்டும் வலி ஏற்பட்டாலோ, தொடர்ச்சியாக அதை அனுபவித்தாலோ, அதை சாதாரணமாக எடுத்துக் கொள்ளக் கூடாது.

இது போன்ற தருணங்களில் மருத்துவரை அணுகி, அவரது பரிந்துரையின் பெயரில் சில சோதனைகளை செய்து கொள்ளலாம்.

இரத்த அழுத்தம் இயல்பு நிலையை விட அதிகமாகும் பொழுது ரத்த நாளங்களில் அழுத்தம் ஏற்படுகிறது. இந்த அழுத்தத்தின் காரணமாக அது தலையின் பின்புறம் மற்றும் கழுத்து வலியை ஏற்படுத்துகிறது. இந்த வலி பெரும்பாலும் படிப்படியாக உருவாகி நீண்ட நேரம் நீடிக்கும். இந்த வலியை சிலர் காலை நேரங்களிலோ அல்லது மன அழுத்தம் அதிகமாக இருக்கும் நேரங்களிலோ, அனுபவிக்கிறார்கள்.

அடிக்கடி வரும் தலைச்சுற்றல், சோர்வு அல்லது விரைவான இதயத் துடிப்பு ஆகிய அறிகுறிகளுடன் இந்த வலி இருந்தால், அதைப் புறக்கணிக்கக் கூடாது. சரியான நேரத்தில் நோயறிதல் மற்றும் சரியான பராமரிப்பு எதிர்காலத்தில் நிகழ இருக்கும் பெரிய அபாயத்தில் இருந்து காப்பாற்றலாம்.

இது தவிர வேறு சில அறிகுறிகளையும் உயர் ரத்த அழுத்தத்தோடு தொடர்புபடுத்தி பார்க்கலாம். இதில் படபடப்பு, சோர்வு மற்றும் மங்கலான பார்வை ஆகியவை அடங்கும். நீண்டகால உயர் இரத்த அழுத்தம் ஒருவரின் நினைவாற்றலை கூட பாதிக்கும். சில சமயங்களில் மங்கலான பார்வை அல்லது பிரகாசமான வெளிச்சத்தில் பார்ப்பதில் சிரமத்தை ஏற்படுத்தும். இந்த அறிகுறிகள் ஆரம்பத்திலேயே கண்டறியப்பட்டால், கடுமையான உடல்நலப் பிரச்னைகளைத் தடுக்கலாம்.

இந்த வலிகளில் இருந்து மீளுதல் எவ்வாறு?

வாரம் இருமுறை உங்கள் இரத்த அழுத்தத்தை சரிபார்த்துக் கொள்ளவும். அவை மருத்துவர்கள் பரிந்துரைத்த சராசரி அளவில் இருக்கிறதா? என்பதை உறுதி செய்யவும். தினசரி உணவில் குறைந்த அளவு உப்பினை பயன்படுத்துங்கள். அதிக எண்ணெய் கொண்ட பலகாரங்களை தவிர்த்து விடுங்கள். இருப்பினும் பொதுமக்கள், உணவு சார்ந்த விஷயத்தில் விழிப்புணர்வுடன் இருந்தால், புற்றுநோய் வருவதை முன்னரே தடுக்க முடியும்.

## தூய்மை பணியாளர்கள் அனைவருக்கும், காலை உணவு வழங்கும் திட்ட தொடக்க விழா

**அருப்புக்கோட்டை, பிப்.14:**

விருதுநகர் மாவட்டம் அருப்புக்கோட்டை நகராட்சி அலுவலகத்தில் உள்ள வளாகத்தில், விருதுநகர் மாவட்டத்தில் பணிபுரியும் உள்ளாட்சி அமைப்பு தூய்மை பணியாளர்கள் அனைவருக்கும், காலை உணவு வழங்கும் திட்ட தொடக்க விழா நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு மாவட்ட ஆட்சியர் சுகபுத்ரா அவர்கள் தலைமை தாங்கினார். தமிழ்நாடு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைதுறை அமைச்சர் கேகேஎஸ்எஸ்ஆர் இராமச்சந்திரன் உணவுத் திட்டத்தை தொடங்கி தொடங்கி வைத்து, தூய்மை பணியாளர்களுக்கு உணவு வழங்கினார். தமிழ்நாடு முதலமைச்சர் தூய்மை பணியாளர்கள் தங்களது பணிகளை அதிகாலை நேரத்தில் தொடங்க இருப்பதால் அவர்கள் காலையில் உணவு சமைப்பதிலும் சமைத்த உணவுகளை பணிபுரியும் இடத்திற்குஎடுத்துவந்துசாப்பிடுவதிலும் பல்வேறு இடர்பாடுகளை சந்தித்து வருகின்றனர். இதனை கருத்தில் கொண்டு உள்ளாட்சி அமைப்புகளில் பணிபுரியும் தூய்மை பணியாளர்கள் அனைவருக்கும் காலை உணவு வழங்கும் திட்டம் முதன் முதலாக சென்னையில் தொடங்கப்பட்டு படிப்படியாக மாநகராட்சி பேரூராட்சி உள்ளிட்ட உள்ளாட்சி பகுதிகளில் இத்திட்டம் சிறப்பாக தொடங்கி வைக்கப்பட்டது.

## திருப்பரங்குன்றம் முருகன் கோவில் துணை கமிஷனர் பதவி ஏற்பு

**திருப்பரங்குன்றம், பிப்.14:**

திருப்பரங்குன்றம் முருகன் கோவிலில் துணை கமிஷனராக ஞானசேகரன் கோவில் அலுவலகத்தில் பொறுப்பு ஏற்றுக் கொண்டார். கோவிலின் கருவறைக்குள் சென்று தரிசனம் செய்தார். பின்னர் கோப்புகளில் கையொழுத்திட்டு பணியை தொடங்கினார். கோவில் துணை கமிஷனரை அறங்காவலர் குழு தலைவர் சத்யபிரியாபாலாஜிசந்தித்தார். கோவில் உள்துறை சூப்பிரெண்டுகள் சுமதி, சத்தியசீலன் கோவில் அலுவலக சூப்பிரெண்டு ரஞ்சனி, பேஷ்காரர்கள் புகழேந்தி நெடுஞ்செழியன் மற்றும் சிவாச்சாரியார்கள் உடன் இருந்தனர்.

## துறையூர் புளியம்பட்டியில் புதிய ரேசன் கடை திறப்பு

**துறையூர், பிப்.14:**

திருச்சி மாவட்டம் துறையூர் அடுத்த முத்தையம்பாளையம் ஊராட்சியில் உள்ள புளியம்பட்டி கிராமத்தில், கடந்த பல ஆண்டுகளாக வாடகை கட்டிடத்தில் இயங்கி வந்த ரேசன் கடைக்கு, சொந்தமாக கட்டிடம் வேண்டி, அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்திருந்தனர். துறையூர் சட்டமன்ற உறுப்பினர் ஸ்டாலின் குமார், தனது தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து , புதிய கட்டிடம் கட்டி அதற்கான திறப்பு விழா நடைபெற்றது. விழாவிற்கு சட்டமன்ற உறுப்பினர் ஸ்டாலின் குமார் தலைமை வகித்து, புதிய ரேஷன் கடையை ரிப்பன் வெட்டி பொது மக்களின் பயன்பாட்டிற்காக திறந்து வைத்தார்.

# பிப்.15-ல் மகா சிவராத்திரி பெருவிழா: அறநிலையத் துறை ஏற்பாடு

**சென்னை, பிப்.14:**



இந்து சமய அறநிலையத் துறை நிர்வாகக் கட்டுப்பாட்டிலுள்ள 12 கோயில்கள் சார்பில் இந்த ஆண்டு மகா சிவராத்திரி பெருவிழாவை ஆன்மிக சொற்பொழிவுகள் மற்றும் கலை நிகழ்ச்சிகளுடன் பிப்.15-ம் தேதி வெகு சிறப்பாக கொண்டாட இந்து சமய அறநிலையத் துறை சார்பில் ஏற்பாடுகள் நடந்து வருகிறது.

இதுகுறித்து இந்து சமய அறநிலையத் துறை வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு: மகா சிவராத்திரியை முன்னிட்டு கடந்த ஆண்டு 9 கோயில்கள் சார்பில் மகா சிவராத்திரி பெருவிழா வெகு விமரிசையாக கொண்டாடப்பட்டது.

அதன்படி, மயிலாப்பூர் கபாலீஸ்வரர் கோயில், திருவண்ணாமலை அண்ணாமலையார் கோயில், தஞ்சாவூர் பெருவுடையார் கோயில், திருநெல்வேலி நெல்லையப்பர் கோயில், பேரூர் பட்டீசுவரர் கோயில், மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வரர் கோயில் மற்றும் திருவானைக்காவல் ஜம்புகேஸ்வரர் கோயில், திருவாரூர் தியாகராஜசுவாமி கோயில், திருவாலங்காடு வடாரண்யேஸ்வரசுவாமி கோயில் ஆகிய 9 கோயில்களின் சார்பில் மகா சிவ ராத்திரி விழா கொண்டா டப்பட்டது.

இந்நிலையில், 2025-2026-ம் ஆண்டு சட்டப்பேரவை அறிவிப்பின்படி, 'இந்த ஆண்டு கூடுதலாக, ராமநாதபுரம் மாவட்டம் ராமேசுவரம் ராமநாதசுவாமி கோயில், கடலூர் மாவட்டம் விருத்தாச்சலம் விருத்தகிரீஸ்வரர் கோயில், தஞ்சாவூர் மாவட்டம் திருநாகேசுவரம் நாகநாதசுவாமி கோயில் ஆகிய 3 கோயில்கள் சார்பில் மகா சிவராத்திரி விழா நடத்தப்படும்" என அறிவிக்கப்பட்டது.

அந்த வகையில், ராமேசுவரம் ராமநாதசுவாமி கோயில், விருத்தாச்சலம் விருத்தகிரீசுவரர் கோயில், திருநாகேசுவரம் நாகநாதசுவாமி கோயில் ஆகிய 3 கோயில்களுடன் ஏற்கெனவே மகாசிவராத்திரி விழா நடத்தப்பட்டு வரும் 9 கோயில்களையும் சேர்த்து மொத்தம் 12 கோயில்கள் சார்பில் பிப்.15-ம் தேதி (ஞாயிற்றுக்கிழமை) மாலை 6 மணி முதல் 16-ம் தேதி (திங்கட்கிழமை) காலை 6 மணி வரை மகாசிவராத்திரி பெருவிழா ஆன்மிக சொற்பொழிவுகள் மற்றும் கலை நிகழ்ச்சிகளுடன் சிறப்பாகக் கொண்டாடப்பட உள்ளது என்று அதில் கூறப்பட்டுள்ளது.

# மகா சிவராத்திரி பிரம்மோற்சவ விழா 2வது நாள்: காளஹஸ்தீஸ்வரர் கொடியேற்றம்

**ஸ்ரீகாளஹஸ்தி, பிப்.14:**



திருப்பதி மாவட்டம் ஸ்ரீகாளஹஸ்தி சிவன் கோவிலில் வருடாந்திர மகாசிவராத்திரி பிரம்மோற்சவ விழா நேற்று முன்தினம் பக்த கண்ணப்பர் கொடியேற்றத்துடன் கோலாகலமாக தொடங்கி நடந்து வருகிறது. விழாவின் 2-வது நாளான நேற்று ஸ்ரீகாளஹஸ்தீஸ்வரர் கொடியேற்றம் நடந்தது.

முன்னதாக நேற்று காலை 10 மணியளவில் வெள்ளி அம்பாரிகளில் உற்சவர்களான ஞானப்பிரசுனாம்பிகை சமேத ஸ்ரீகாளஹஸ்தீஸ்வரரும், தனித்தனி சப்பரங்களில் விநாயகர், சண்டிகேஸ்வரர், வள்ளி தெய்வானை சமேத சுப்பிரமணியசாமி ஆகியோர் கோவிலின் நான்கு மாட வீதிகளில் உலா வந்து பக்தர்களுக்கு அருள்பாலித்தனர்.

பின்னர் உற்சவர்களான ஸ்ரீகாளஹஸ்தீஸ்வரர்-ஞானப்பிரசுனாம்பிகை தாயார், விநாயகர், வள்ளி தெய்வானை சமேத சுப்பிரமணியசாமி, சண்டிகேஸ்வரர் கோவில் தங்கக் கொடிமரம் எதிரில் எழுந்தருளினர். உற்சவர்களான சந்திரசேகரர்-உமாதேவி (சிவன்-அம்பாள்) திரிசூலத்தில் இருந்து கொடியேற்ற விழா பூஜைகளை அர்ச்சகர்கள் தொடங்கினர். அதன்பிறகு சிறப்பு கலசம் நிறுவப்பட்டு சங்கல்ப பூஜைகள் தொடங்கி கலச பூஜைகள் செய்யப்பட்டன.

அஷ்டதிக் பாலகர்கள், ரிஷிகள், முப்பத்து முக்கோடி தேவர்களுக்கு பிரம்மோற்சவ விழாவில் பங்கேற்க அழைப்பு விடுக்கும் வகையில் வேதப் பண்டிதர்கள் வேத மந்திரங்களை முழங்க நாணல் கயிற்றில் சிவலிங்கம் உருவம் அச்சிடப்பட்ட கொடியானது, பக்தர்கள் காணிக்கையாக வழங்கிய வஸ்திரங்களை இணைத்து பக்தி கோஷம் முழங்க தங்கக் கொடிமரத்தில் ஏற்றப்பட்டது. பக்தர்கள் காணிக்கையாக வழங்கிய 3 ஆயிரத்துக்கு மேற்பட்ட வஸ்திரங்கள் அனைத்தும் கொடிமரத்தில் ஏற்றப்பட்டன.

கொடியேற்றும் நிகழ்ச்சியில் ஸ்ரீகாளஹஸ்தி சிவன் கோவில் செயல் அலுவலர் டி.பாபிரெட்டி, எம்.எல்.ஏ.வின் தாயார், மனைவி, கோவில் அறங்காவலர் குழு தலைவர் கொட்டே சாய் பிரசாத் தம்பதியர், அறங்காவலர் குழு உறுப்பினர்கள், மற்றும் திரளான பக்தர்கள் கலந்துகொண்டனர்.

# சென்னையில் பிரம்மோற்சவ விழா.. கஜ வாகனத்தில் எழுந்தருளி அருள்பாலித்த பத்மாவதி தாயார்

**சென்னை, பிப்.14:**

சென்னையில் உள்ள பத்மாவதி தாயார் கோவிலில் வருடாந்திர பிரம்மோற்சவம் கோலாகலமாக கொண்டாடப்படுகிறது. கடந்த 7-ம் தேதி தொடங்கிய பிரம்மோற்சவ விழா, வருகிற 16-ம் தேதி வரை நடைபெற உள்ளது. பிரம்மோற்சவத்தின்போது தினமும் காலை 9.00 மணி மற்றும் இரவு 7.00 மணிக்கு பத்மாவதி தாயார் பல்வேறு வாகனங்களில் எழுந்தருளி பக்தர்களுக்கு தரிசனம் அளிக்கிறார்.



பிரம்மோற்சவத்தின் ஒரு பகுதியாக நேற்று காலை பத்மாவதி தாயார் பல்லக்கில் எழுந்தருளி, பக்தர்களுக்கு அருள்பாலித்தார். இரவில் கஜ வாகனத்திலும், காலையில் சர்வபூபால வாகனத்திலும் எழுந்தருளி பக்தர்களுக்கு அருள்பாலித்தார். இந்நிகழ்வில் தேவஸ்தான உதவி நிர்வாக அதிகாரி தனஞ்சயா, கண்காணிப்பாளர் புஷ்பலதா, கோவில் அர்ச்சகர்கள் மற்றும் திரளான பக்தர்கள் கலந்து கொண்டு தாயாரை தரிசனம் செய்தனர்.




## மதுரை பென்சில் பார்க் வளாகத்தில் உலகச் சாதனை ஓவியப் போட்டி

**சோழவந்தான், பிப்.14:**

ரீஹாப் இந்தியா சாரிட்டபிள் டிரஸ்ட் சார்பில், உலகச் சாதனை முயற்சியாக, "அடுத்த ரவிவர்மாவை கண்டறிதல்-சீசன் 8" ("FINDING NEXT RAVIVARMA SEASON 8)" என்ற தலைப்பில் நடைபெற்ற ஓவியப் போட்டி, பென்சில் பார்க், அண்ணா நகர், மதுரை வளாகத்தில் சிறப்பாக நடைபெற்றது.

"பிளாஸ்டிக் இல்லா மதுரை" என்ற கருப்பொருளில் நடைபெற்ற இப்போட்டியில், 100க்கும் மேற்பட்ட பென்சில் பார்க் மாணவர்கள் பங்கேற்று, சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வை தங்களின் ஓவியங்கள் மூலம் வெளிப்படுத்தினர். போட்டியில் பங்கேற்ற அனைத்து மாணவர்களுக்கும் பங்கேற்பு சான்றிதழ்கள் மற்றும் உலகச் சாதனை சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

மாணவர்களின் படைப்புகள், வயது, பிரிவுகளின் அடிப்படையில், மதிப்பீடு செய்யப்பட்டு, சிறப்பான வரவேற்பைப் பெற்றன. சுற்றுச்சூழல் பாதுகாப்பின் அவசியத்தை, குழந்தைகள் மற்றும் இளைஞர்களிடையே எடுத்துரைக்கும் வகையில் இந்நிகழ்ச்சி அமைந்தது.

## திருவாரூர் நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் அரசு செயலாளர் கே.எஸ். பழனிசாமி நேரில் ஆய்வு

**திருவாரூர், பிப். 14:**

திருவாரூர் மாவட்டத்தில் உள்ள நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில், தமிழ்நாடு கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை அரசு செயலாளர் கே.எஸ். பழனிசாமி நேரில் ஆய்வு மேற்கொண்டார்.

முன்னதாக, திருவாரூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் சம்பா பருவ நெல் கொள்முதல் பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு அரசு செயலாளர் கே.எஸ். பழனிசாமி தலைமை வகித்தார். தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக நிர்வாக இயக்குநர் ஆ. அண்ணாதுரை, மாவட்ட ஆட்சியர் வ. மோகனச்சந்திரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். பின்னர் மன்னார்குடி வட்டம் இடையர்நத்தம் மற்றும் செருமங்கலம் ஆகிய பகுதிகளில் உள்ள நேரடி நெல் கொள்முதல் நிலையங்களுக்குச் சென்று அவர் களஆய்வு செய்தார். அப்போது செய்தியாளர்களிடம் அரசு செயலாளர் கே.எஸ். பழனிசாமி தெரிவித்ததாவது:

தமிழ்நாடு முதலமைச்சரின் உத்தரவின்படி, திருவாரூர் மாவட்டத்தில் 2025-26 சம்பா பருவ கொள்முதல் பணிகள் கடந்த ஜனவரி 8-ஆம் தேதி தொடங்கப்பட்டது. மாவட்டத்தில் தற்போது 540 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. பிப்ரவரி 8-ஆம் தேதி வரை 1,06,933 மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. இதில் 62 சதவீத நெல் பாதுகாப்பாகக் கிடங்குகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள நெல்லை 48 மணி நேரத்திற்குள் அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# 300 ஆண்டுகளாக நம்மை ஏமாற்றிய விசித்திர நிலவு! தண்ணீரில் போட்டால் தெர்மாகோல் மாதிரி மிதக்கும்!

பனிக்கட்டியை நன்றாக உருட்டி ஒரு பந்து போலச் செய்து, அதை அப்படியே விண்வெளியில் வீசினால் அது எப்படி இருக்குமோ, அப்படி இருக்கும் நிலவுதான் தெத்திஸ் (TETHYS) நிலவு. நம் சூரிய குடும்பத்தில் எத்தனையோ விசித்திரமான நிலவுகள் இருந்தாலும், சனிக்கிரகத்தைச் சுற்றி வரும் இந்த ஐந்தாவது மிகப்பெரிய நிலவு மட்டும் கொஞ்சம் ஸ்பெஷல். 17-ம் நூற்றாண்டிலேயே கண்டுபிடிக்கப்பட்ட இந்த நிலவு ஒரு சாதாரண பனிக்கட்டி பந்து மட்டுமல்ல, அதற்குள் பல மர்மங்கள் ஒளிந்துகிடக்கின்றன.

### மிதக்கும் நிலவு!

இந்த நிலவின் அடர்த்தியைப் பற்றிச் சொன்னால் நீங்கள் நிச்சயம் ஆச்சரியப்படுவீர்கள். பொதுவாக பாறைகளால் ஆன நிலவுகள் அதிக எடையுடன் இருக்கும். ஆனால் தெத்திஸின் அடர்த்தி வெறும் 0.98 கிராம் தான். அதாவது தண்ணீரின் அடர்த்தியைவிட இது குறைவு. ஒருவேளை பிரம்மாண்டமான ஒரு தண்ணீர் தொட்டி கிடைத்தால், அதில் இந்த தெத்திஸ் நிலவை நம்மால் மிதக்கவிட முடியும். இது முழுக்க முழுக்க நீரால் ஆன பனிக்கட்டியால் உருவானது என்பதையே இது காட்டுகிறது. இதன் விட்டம் சுமார் 1060 கிலோமீட்டர். இது நம் பூமியின் நிலவில் மூன்றில் ஒரு பங்குதான்.

சினிமா ஹீரோக்களுக்குத் தான் பாடிகார்ட் இருப்பார்கள் என்று நினைத்துவிடாதீர்கள். இந்த தெத்திஸ் நிலவுக்கும் இரண்டு பாடிகார்டுகள் இருக்கிறார்கள்.



சனிக்கிரகத்தைச் சுற்றி வரும்போது, தெத்திஸுக்கு முன்னால் டெலஸ்டோ (TELESTO) என்ற நிலவும், பின்னால் கலிப்ஸோ (CALYPSO) என்ற நிலவும் பாதுகாப்பாக வருகின்றன.

### ஒடிஸியஸ் பள்ளம்!

இந்த நிலவின் மிக முக்கியமான அடையாளமே அதன் முகத்தில் இருக்கும் பிரம்மாண்டமான பள்ளம் தான். அதற்கு ஒடிஸியஸ் என்று பெயர் வைத்துள்ளார்கள். சுமார் 400 கிலோமீட்டர் அகலம் கொண்ட இந்த பள்ளம், நிலவின் மொத்த அளவில் ஐந்தில் இரண்டு பங்கு இடத்தை ஆக்கிரமித்துள்ளது. இவ்வளவு பெரிய ஒரு விண்கல் மோதல் நடந்தபோது இந்த நிலவு சுக்குநூறாக உடைந்திருக்க வேண்டும். ஆனால் இது பனிக்கட்டியால் ஆனது என்பதால் உடையாமல் தப்பித்துவிட்டது. காலப்போக்கில் அந்தப் பள்ளம் உருகித் தட்டையாக மாறிவிட்டது.

### ITHACA CHASMA!

தெத்திஸில் இருக்கும் இன்னொரு பெரிய ஆச்சரியம் இதாகா கேஸ்மா எனப்படும் மிகப்பெரிய பிளவு. இது சுமார் 2000 கிலோமீட்டர் நீளமும், 100 கிலோமீட்டர் அகலமும் கொண்டது. இது எப்படி உருவானது என்பதற்கு ஒரு சுவாரஸ்யமான காரணம் சொல்லப்படுகிறது. ஆரம்ப காலத்தில் இந்த நிலவு திரவ நிலையில் இருந்தபோது, அதன் உள்ளே இருந்த கடல் நீர் உறைந்து பனிக்கட்டியாக மாறியது. தண்ணீர் உறையும்போது விரிவடையும் என்பது நமக்குத் தெரியும். அப்படி உள்ளே இருந்த நீர் விரிவடைந்தபோது, நிலவின் மேல் ஓடு தாங்க முடியாமல் வெடித்து, இப்படி ஒரு பெரிய பிளவு ஏற்பட்டிருக்கலாம் என்று விஞ்ஞானிகள் கணிக்கிறார்கள்.



### பேக்மேன் நிலவு!

நாம் வீடியோ கேமில் விளையாடும் பேக்மேன் (PAC-MAN) பொம்மை போல இந்த நிலவின் வெப்ப வரைபடம் இருக்கிறது. சனிக்கிரகத்தின் காந்தப்புலத்தால் ஈர்க்கப்படும் எலக்ட்ரான்கள் இந்தநிலவின்ஒருபக்கத்தைத் தாக்குவதால், அந்தப் பகுதி மட்டும் கெட்டியான பனிக்கட்டியாக மாறி வெப்பத்தை வித்தியாசமாக வெளிப்படுத்துகிறது. பார்க்க ஒரு சாதாரண ஐஸ் பந்து போலத் தெரிந்தாலும், அறிவியல் ரீதியாக இது ஒரு பொக்கிஷம். வெறும் கண்களுக்கு ஒரு சிறிய வெள்ளைப் புள்ளியாகத் தெரியும் தெத்திஸ், அருகில் சென்று பார்க்கும்போதுதான் தனது பிரம்மாண்டமான காயங்களையும் வடுக்களையும் காட்டுகிறது.

# மல்லிகை



அதே பூக்கடை வாசலில் உஷாவை தன் நண்பன் முரளியுடன் சந்திப்போம் என்று ரவி நினைக்கவில்லை.

உஷாவை கவனிக்காதவாறு, ”முரளி எங்கே இந்த பக்கம்?” என்றான்.

”என் மாமியார் வீடு மதுரைதான் . இங்கு ஒரு விசேஷத்துக்கு வந்தேன்” என்ற முரளி, ”மீனாட்சி அம்மன் கோயிலுக்கு போயிட்டு அப்படியே கொஞ்சம் பூ வாங்க வந்தோம்.... உன் ஊரும் இதானே ரவி ?” என்றான் முரளி.

”உஷா ..... இவர்தான் என் ப்ரெண்ட் ரவி” என்று அறிமுகபடுத்தியவனிடம், ”வணக்கம்” என்றாள் உஷா, ஒரு வித படபடப்போடு. முகம் வியர்த்து போனது.

கல்லூரிக்கு பாட்டு போட்டியில் அவளுக்கு முதல் பரிசு கிடைத்து, அவளை அடுத்தடுத்து ரவி சந்தித்த நட்பானது, காதலாய் மாறியது.

இதே கடையில் எத்தனை மல்லிகைப்பூ வாங்கி கொடுத்து இருப்பான். காதலிலும் கண்ணியத்தை காத்தான். அவன்தான் குடும்பத்துக்கு மூத்த பிள்ளை. பொருளாதாரத்தில் இழுத்து பிடித்துதான் வாழ்க்கை ஓடி கொண்டிருந்தது. உஷா பணக்கார குடும்பத்தை சேர்ந்தவள். ‘எட்டாக்கனிக்கு ஆசைப்பட்டு வாழ்க்கை புளித்து போய்விடக் கூடாது’ என்று தனக்குள்ளேயே சில சமயம் யோசனை செய்வான். காதல் வேறு கல்யாணம் வேறு. தன் வாழ்க்கைப் பற்றி எந்த முடிவுக்கும் வர முடியாமல் தூக்கம் வராமல் கூட தவித்து போவான். ஆனால், உஷாவுக்கு பணத்தை பற்றி எந்த கவலையும் இல்லை. திருமணத்தை பற்றி அவள் வற்புறுத்தும்போதெல்லாம் அதை அவன் தள்ளிப் போட்டுக் கொண்டேஇருந்தான்.

”எனக்கு வீட்ல மாப்பிள்ளை பார்க்கிறாங்க” - அவள் சொல்லியும் அவன் மௌனம் சாதித்தது அவளுக்குக் கோபமே வந்தது.

ஒரு நாள், “கல்யாணம் நிச்சயமாகி விட்டது” என்று கூறி கண்ணீரோடு விடைபெற்றாள்.

”என் ஒய்ஃப்க்கு மல்லிகை என்றால் மிகவும் பிடிக்கும்”, என்று கூறிய முரளியிடம் ”எனக்கு அந்த வாசனையே பிடிக்காது” என்ற ரவி, ஏதோ யோசனை செய்ய “என்ன ரவி.... எங்கே ஞாபகம் ?” என்று முரளி கேட்க, உஷா பயத்துடன் ரவியை எதிர்நோக்கினாள்.

ஒன்றும் நடக்காதது போல் முகத்தை வைத்து கொண்டு அவளைப் பார்த்து சிரித்தான். ”சரி.... முரளி, அடுத்த தடவை வரும்போது ஃபேமிலியோடு வீட்டுக்கு வாங்க” என்று விடைபெற்றவன் கண்கலங்கிப் போவதை உஷா கவனிக்க தவறவில்லை. இப்பொழுதும் ரவி, கண்ணியத்தையே காத்தான்.



**-ஐயந்தி சிவக்குமார்**
திருச்சி.

# "மக்கள் சக்தி மகேசன் சக்தி"

குப்பைத் தொட்டியருகே நின்று சிதறிக் கிடக்கும் குப்பைகளை ஒழுங்குபடுத்தி, வண்டியில் ஏற்றினான் இளங்கோ.

அவன் ஒரு துப்புரவுத் தொழிலாளி அல்ல. ஆனாலும், கைகள் அழுக்காவதைப் பற்றிக் கவலை கொள்ளாமல் ஒரு சமூக சேவையாய் அதைச் செய்து கொண்டிருந்தான்.

காலை ஆறு மணியிலிருந்து எட்டு மணிக்குள் அந்தப் பகுதியிலுள்ள எல்லாத் தெருக்களும் சுத்தமாகி விடும்.
அவன் பெயரோ, புகைப்படமோ எந்தப் போஸ்டரிலும் இருக்காது. ஆனால் அவன் செய்யும் சமூக சேவை மட்டும் எல்லாருக்கும் தெரியும்.

“இவன் யார்?... எங்கிருந்து வந்தான்?” என்று யாரும் கேட்டதில்லை. அதற்கு அவசியமும் இல்லை. ஏனெனில் அவன் செய்வது சேவை, அதற்கு விளம்பரம் தேவையில்லை என்று நினைப்பவன் அவன்.




அன்று காலை வெள்ளை வேட்டி, வெள்ளை சட்டை அணிந்த அரசியல்வாதி வந்தார். கார்களின் வரிசை, கொடிகள், கைதட்டல்களுக்கு நடுவே நின்று இளங்கோவைப் பார்த்தார்.

“இவனை யார் இதையெல்லாம் செய்யச் சொன்னது?... என் தொகுதியில் என் பெயர் இல்லாமல் சேவை நடக்கலாமா?” என்று அலுவலர்களிடம் கோபம் காட்டினார்.

மறுநாளே இளங்கோவிற்கு நோட்டீஸ் வந்தது.

“சட்ட விரோதச் செயல்”
“பொது இடத்தில் இடையூறு”
“அரசியல் உள்நோக்கம்”
இன்னபிற வார்த்தைகளோடு.

இளங்கோ பதிலேதும் தரவில்லை.
மீண்டும் துடைப்பத்தை எடுத்தான். சேவையைத் தொடர்ந்தான். அந்த மௌனம்தான் அவனுடைய பதில்.
ஆனால் அவனுக்காக மக்கள் பேசத் தொடங்கினர்.

“இந்தப் பையன் வந்ததிலிருந்து தெருவெல்லாம் சுத்தமாயிருக்கு.. எந்தச் சாக்கடையும் அடைத்துக் கொள்ளவில்லை..."

“என் அம்மா தெருவில் தடுமாறாமல் நடந்து செல்கிறாள்"
“என் பிள்ளை குப்பையிலே விளையாடவில்லை.”
"இந்த ஏரியாவில் கொசுத் தொல்லையே இல்லை’

ஒரே நாளில் மக்களின் அந்த பதில்கள் வாட்ஸ்அப் ஸ்டேட்டஸ் ஆனது.
அடுத்த நாளில் செய்தி.
மூன்றாம் நாளில் மக்கள் கூட்டம் இளங்கோவிற்கு ஆதரவாய்.
அரசியல்வாதி அதிர்ந்தார். அவரது கோபம் மறைந்து பயம் வந்தது.

அடுத்த வார மேடைப் பேச்சிலும், மீடியா இண்டர்வியூவிலும், அரசியல்வாதி புன்னகையுடன் இளங்கோவை உயர்த்திப் பேசினார்.

“இந்த இளைஞன் நம்ம ஊரின் பெருமை! இவரைப் போல நூறு பேர் வரணும். நான் இவருக்கு முழு ஆதரவு தருகிறேன்!”

மக்கள் கைதட்டினார்கள். ஆனால் அந்த கைதட்டலில் நம்பிக்கை இல்லை. எச்சரிக்கை மட்டுமே இருந்தது.

தன்னை மேடைக்கு அழைத்தும் இளங்கோ மேடையேறவில்லை. கீழேயே நின்றான். துடைப்பத்தைப் பிடித்தபடி.

அப்போதுதான் அரசியல்வாதி புரிந்து கொண்டார், "மக்கள் ஆதரவு உள்ளவனைப் புகழ்வது அரசியல்!... மக்கள் வாழ்க்கையை மாற்றுவது தான் சேவை" இவ்விரண்டும் ஒரே கையில் எப்போதும் இருக்காது, என்று.



**-முகில் தினகரன்**
கோயமுத்தூர்.

# ஔவைக் குறளும் 6,7



■Banumathi Nachiyar



மாயன் பிரம்ம னுருத்திரன் மகேசனோ
டாயுஞ் சிவமூர்த்தி யைந்துயன்

விளக்கம்
நிலம்.. பிரம்மன்
நீர்.. மாயன்
நெருப்பு.. உத்திரன்
வாயு.. மகேசன்
ஆகாயம்.. சதாசிவன்

ஆன்மாவின் தத்துவங்களாக இவர்களைச் சொல்லலாம்.
இந்து சமயத்தில் பஞ்சமூர்த்திகள் பிரம்மா, திருமால், உருத்திரன் மகேஸ்வரன், சதாசிவன் என ஐவரையும் குறிக்கும்.

சைவ சித்தாந்தத்தில் சிவன், பார்வதி, விநாயகர், முருகர், சண்டிகேஸ்வரர் ஆகியவரைக் குறிக்கும்.

இக்குறளில் இறைவனின் பஞ்ச மூர்த்திகளைச் சொல்லியிருந்தாலும் அதன் குணத்தை மறைமுகமாகச் சொல்லி இருக்கிறார் ஔவையார்.

ஆன்மா என்பது அறிவானால், பஞ்சபூதங்கள் தேகம் ஆகும். பஞ்சபூதங்களில் இருந்து ஐம்பொறிகள் அதன் புலன் உணர்ச்சிகளைக் கண்டோம். இக்குறளில் பஞ்ச மூர்த்திகளின் இயல்பையும் குறிக்கிறார்கள். அதாவது மனித இயல்பாகிய ஆனந்தம், சாந்தம், கருணை, வசீகரம், ருத்ரம் ஆகிய ஐந்து குணங்களையும் தெய்வீகத் தன்மை விளங்குமாறு, மனிதனின் குணங்களை இறைவனின் பெயர்களோடு ஒப்பிட்டுக் கூறியிருப்பது சிறப்பு.

வைணவத்தில் விஷ்ணுவின் குணங்களே பிரதானம்.
மனிதனுக்கும் பஞ்சபூதங்களுக்கும் அதன் குணங்கள் ஐந்து புலன்கள், 5புலன் உணர்ச்சிகள், மனிதமேம்பாடுகள் (பஞ்சமூர்த்திகள்) ஆகியவற்றுக்கு இடையே இயல்பாகவே தொடர்பு உள்ளது என்பதை விளக்குவதாக அமைகிறது இக்குறள்.

நாளை இன்னொரு செல்பியுடன் ..

மாலனங்கி யிரவி மதியு மையோ
டேலுந் திகழ்சக்தி யாறு

விளக்கம்
ஆறு சக்திகளாக ஔவையார் கூறுவது திருமால், பிரம்மன், அக்னி(ருத்திரன்), சூரியன், சந்திரன், உமாதேவியும் பொருந்தித் திகழ்கின்ற சக்திகள் அறுவர் ஆகும் என்பது.

மனித உடலுக்கு, ஆனந்தம், கருணை, வசீகரம், ருத்ரம் இவர்களோடு பொருந்தி, திகழ்கின்ற சக்தி உமையவளோடு ஆறு சக்திகள் என்பர்.

சக்தி என்பது வலிமை, ஆற்றல், திறன் ஆகியவற்றைக் குறிக்கும். பிரபஞ்சத்தின் அடிப்படையான நிலம், நீர், காற்று, தீ, ஆகாயம் ஆகியவற்றின் மூலமாக நிகழ்கின்ற அனைத்திற்கும் ஆற்றலாய் இருப்பவள் உமையாள் என்பது கருத்தாகிறது.



சக்தி இல்லையேல் சிவம் இல்லை என்பது சைவ சித்தாந்தம். அதனை வலியுறுத்துவது போல, இயக்குவதற்கும் இயங்குவதற்கும் ஒரு சக்தி, ஆற்றல் தேவைப்படுவதால் அதன் சிறப்பினைத் திகழ்சக்தி ஐந்திற்கும் பொருந்திய உமாதேவியே அறு சக்தியாக இக்குறளில் ஔவையார் சிறப்பிக்கிறார்.
நாளை மற்றொரு செல்பியுடன்

(தொடரும்).

# மாசி மாதச் சிறப்புகள்







சூரிய பகவான், கும்ப ராசியில் சஞ்சரிக்கும் மாதமே மாசி மாதம். இந்த மாதத்திற்குரிய அதி தேவதை மகாவிஷ்ணுவாகும். தமிழ் வருடத்தில் நான்கு மாதப்பிறப்புகள் விஷ்ணுபதி புண்யகாலம் என்றழைக்கப்படுகிறது. அதில் மாசி மாதப்பிறப்பும் அடங்கும். விஷ்ணுபதி புண்யகாலமான மாதப் பிறப்பன்று மகாவிஷ்ணுவை பூஜித்தால் வாழ்வில் அளப்பரிய நன்மைகள் கிடைக்கும். இம்மாதத்தில் ஸ்ரீமன் நாராயணனை தினமும் துளசிக் கொண்டு பூஜித்தால் இல்லத்தில் சுப காரியங்கள் அனைத்தும் தடையின்றி நிறைவேறும்.

இந்த மாதம் அனைத்து தெய்வங்களுக்கும் உரிய மாதமாகும். இந்த மாதத்தில் சிவசக்தி வழிபாடு, பெருமாள் வழிபாடு, புனித நீராடுதல் மற்றும் தான தர்மங்கள் செய்வது, சுமங்கலி பாக்கியம் மற்றும் செல்வ வளத்தை அதிகரிக்கும் என்று நம்பப்படுகிறது. மகாவிஷ்ணு வராக அவதாரம் எடுத்தது மாசி மகத்தன்று என்று புராணம் கூறுகிறது. உயர்கல்வி கற்க விரும்புபவர்கள் மற்றும் ஆராய்ச்சியில் ஈடுபாடு உள்ளவர்கள் மாசி மக நாளில் அவற்றைத் தொடங்கினால் அதில் சிறந்து விளங்கலாம்.

மாசி மாத சங்கடஹர சதுர்த்தி மிகவும் விசேஷமானது. அன்று விரதம் இருந்து விநாயகரை வணங்கினால், நம் அனைத்து சங்கடங்களும், பாவங்களும் விலகும். மாசி மாதத்தில் வரும் தேய்பிறை சதுர்த்தி மகா சிவராத்திரியாகக் கொண்டாடப்படுகிறது.

சிவராத்திரி விரதத்தால் நமது புலன்களை வென்று மனத்தை அடக்கி நீண்ட ஆயுள் உடல் ஆரோக்கியம் பெறலாம். பக்தர்கள் இரவு முழுவதும் விழித்திருந்து சிவனை வழிபடுவதே இந்நாளின் சிறப்பாகும்.

சிவராத்திரி அன்று முறைப்படி விரதம் இருந்து சிவனை வழிபட்டால் பிரம்மஹத்தி தோஷம் விலகும். மேலும் காசியில் வீடுபேறு அடைந்த பலன் கிடைக்கும். இந்த வருடம் பிப்ரவரி 15, மாசி 3ஆம் தேதியன்று சிவராத்திரி.

மாசிமாதப் புனர்பூச நட்சத்திரத்தன்று குலசேகர ஆழ்வார் அவதாரத் திருநாள். மாசி மாதம் பூச நட்சத்திரம் அன்று முருகப் பெருமான் சிவபெருமானுக்குப் பிரணவ மந்திரத்தை உபதேசம் செய்த நாளாகும் .

மாசி மாதப் பௌர்ணமியுடன் மகம் நட்சத்திரம் வரும் நாள் மாசி மகம் என்று அழைக்கப்படும் இந்நாள் இந்துக்களுக்கு மிகவும் முக்கியமான நாளாகும். அன்றுதான் சிவபெருமான் மன்மதனை எரித்தார். இது காம தகன நாள் என்று கொண்டாடப்படுகிறது. மாசி மகத்தன்று புனித நீராடினால் ஏழு ஜென்மங்களில் செய்த பாவங்கள் விலகும், புத்திர பாக்கியம் கிடைக்கும் என்று பெரியோர்கள் கூறுவர். அனைத்து கோவில்களிலும் அன்று சிறப்பு பூஜைகள் நடைபெறும். மாசி மாதத்தில்தான் பார்வதி தேவி காளிந்தி நதியில், தாமரைமலரில் வலம்புரிச் சங்காகத் தோன்றினாள் என்கிறது புராணம். பெரும்பாலான வைஷ்ணவ ஆலயங்களில் தெப்பத் திருவிழா நடைபெறும். 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை கும்பகோணத்தில் நடக்கும் மாசி மகத் திருவிழா மகா மகம் என்று அழைக்கப்படும் வட மாநிலங்களில் இது கும்பமேளாவாக கொண்டாடப்படுகிறது. அனைத்து நலன்களையும் அருளும் மாசி மகம் ஒரு சிறப்பான நாளாகும். அன்றைய தினம் விரதம் இருந்து இறைவன் அருளைப் பெறுவோம்.

மாசி மாதத்தில் வரும் இரு ஏகாதசிகளும் மிகவும் சிறப்பு வாய்ந்தவை இதில் வளர்பிறை ஏகாதசி ஜெய ஏகாதசி எனவும் தேய்பிறை ஏகாதசி விஜய ஏகாதசி எனவும் அழைக்கப்படும் இதில் தேய்பிறையில் வரும் விஜய ஏகாதசி அன்று மகாவிஷ்ணுவை மனதார தியானித்து விரதம் இருந்தால் அதிர்ஷ்டம், வெற்றி, செல்வ வளம் உள்ளிட்ட சகல ஐஸ்வர்யங்களும் கிடைக்கும். இந்த இரண்டு ஏகாதசிகளிலும் விரதம் இருப்பவர்களுக்கு எடுத்த காரியங்கள் அனைத்திலும் வெற்றி கிடைக்கும் என்பது ஐதீகம் .

இம்மாதம் புதிய கலைகள் கற்கவும் மந்திர உபதேசம் பெறவும் சிறந்த மாதமாகும். எனவே தான் உபநயங்கள் அதாவது சிறு குழந்தைகளுக்கு பூணூல் போடுவதை இம்மாதத்தில் வைத்துக் கொள்வார்கள்.

மாசிச் சரடு பாசி படரும் என்பதற்கு ஏற்ப சுமங்கலி பெண்கள், ஒரு நல்ல நாளில் திருமாங்கல்ய சரடு மாற்றிக் கொள்வார்கள்.

மாசியும் பங்குனியும் கூடும் நேரத்தில் 'காரடையான் நோன்பு' அனுஷ்டிக்கப்படுகிறது இது 'சத்தியவான் சாவித்திரி நோன்பு' என்றும் அழைக்கப்படும் சாவித்திரி சத்தியவானை எமனிடமிருந்து மீட்பதற்காகக் காட்டில் கிடைத்தவற்றைக் கொண்டு கார அடை செய்து சத்யவானை உயிருடன் மீட்டுக் கொண்டு வந்தாள். கணவரின் தீர்க்க ஆயுளுக்காக பெண்கள் கார அடை செய்து மாசியும் பங்குனியும் கூடும் நேரத்தில் நோன்புச்சரடு கட்டிக் கொள்வார்கள். அப்போது அவர்கள் "உருகாத வெண்ணையும் ஓர் அடையும் போல நானும் என் கணவனும் இணை பிரியாது இருக்க வேண்டும்!" என்று வேண்டிக் கொள்வார்கள்.

இவ்வளவு சிறப்பு வாய்ந்த மாசி மாதத்தில் வரும் விரதங்களைக் கடைபிடித்து இறைவனின் பரிபூரண அருளுக்கு அனைவரும் பாத்திரமாவோம். நன்றி



எழுத்தாளர்
-அலமேலு ரங்கராஜன்
ஸ்ரீவில்லிப்புத்தூர்

# தினம் ஒரு தலைவர்கள் அப்பாஸ் அலி வரலாறு

புகழ்பெற்ற சுதந்திரப் போராட்ட வீரர், இந்திய தேசிய ராணுவத்தின் போராளி சுபாஷ் சந்தர் போஸின் நெருங்கிய கூட்டாளி மற்றும் தீவிர சோசலிஸ்ட் கேப்டன் அப்பாஸ் அலி, பிரிட்டிஷ் இந்திய ராணுவத்தில் தஃபதர் அதிகாரியான அய்யூப் அலி கானின் மகனாவார். அவர் 1920 ஜனவரி 3 ஆம் தேதி புலந்த்ஷஹரில் (உ.பி.) குர்ஜாவில் பிறந்தார். சுதந்திரப் போராட்ட வீரர்களின் ராஜபுத்திர முஸ்லிம் குடும்பத்தைச் சேர்ந்த அவரது தாத்தா ருஸ்தம் அலி கான், 1857 கலகத்திற்குப் பிறகு புலந்த்ஷஹரில் (ஐக்கிய மாகாணம், இப்போது உத்தரப் பிரதேசம்) உள்ள காலா ஆமில் பிரிட்டிஷ் ராணுவத்தால் தூக்கிலிடப்பட்டார். அப்பாஸ் அலி தனது பள்ளி நாட்களிலிருந்தே பகத்சிங்கின் புரட்சிகர கருத்துக்களால் ஈர்க்கப்பட்டார். பள்ளி மாணவராக, ஷாஹீத் பகத்சிங்கிற்கு மரண தண்டனை விதிக்கப்பட்டதைக் கண்டித்து 1931 மார்ச் 25 ஆம் தேதி குர்ஜாவில் நடந்த ஒரு போராட்ட அணிவகுப்பிலும் பங்கேற்றார். பகத் சிங் தூக்கிலிடப்பட்ட உடனேயே, பகத்சிங்கால் நிறுவப்பட்ட நௌஜவான் பாரத் சபாவில் சேர்ந்தார், மேலும் பள்ளியில் படிக்கும்போதே NBS இன் செயல்பாடுகளில் தீவிரமாகப் பங்கேற்றார். பிரபல பத்திரிகையாளரும் அப்பாஸ் அலியின் மகனுமான குர்பன் அலி கூறுகையில், தனது தந்தைக்கு அஞ்சலி செலுத்தும் போது, தனது தந்தை பின்வரும் உருது ஜோடிப் பாடலைப் பாடுகிறார்:

பக்ட் சாங்கக் டாம்கிக்
பார் சை ஆனா பாக்கி கா
ஹகும்த் கோ ஸ்லோவி
டெக்கானா பாகி கா
ஐ திரியா
ஐத்ரியாஸ்
பக்ட் சாங்கக் டாம்கிக்
பார் சை ஆனா பாக்கி கா
ஹகும்த் கோ ஸ்லோவி
டெக்கானா பாகி கா

மொழிபெயர்ப்பு:
பகத் சிங் நீங்கள்
மீண்டும் வர வேண்டும்
உங்கள் பலத்தை
அரசாங்கத்திற்கு காட்ட
வேண்டும்.
கங்கை நதியே,
அமைதியாக இரு.
ஓ சட்லஜ் நதியே,
கருப்பாக மாறு.
பகத் சிங் நீங்கள்
மீண்டும் வர வேண்டும்
உங்கள் பலத்தை
அரசாங்கத்திற்கு காட்ட
வேண்டும்.

1937 ஆம் ஆண்டு, குர்ஜாவின் ஜேஏஎஸ் உயர்நிலைப் பள்ளியில் மெட்ரிகுலேஷன் முடித்த பிறகு, அவர் உயர் படிப்புக்காக அலிகார் முஸ்லிம் பல்கலைக்கழகத்திற்குச் சென்றார். அலிகார் முஸ்லிம் பல்கலைக்கழகத்தில் தனது படிப்பைத் தொடர்ந்தபோது, அவர் தனது காலத்தின் சிறந்த கம்யூனிஸ்ட் தலைவர் டாக்டர் குன்வர் முகமது அஷ்ரப்பைத் தொடர்பு கொண்டார். அவரது உத்வேகத்தின் பேரில் அவர் முதலில் 1936 இல் நிறுவப்பட்ட இடதுசாரிக் கட்சிகளின் மாணவர் பிரிவான அகில இந்திய மாணவர் கூட்டமைப்பில் (AISF) சேர்ந்தார். பின்னர் அவர் பிரிட்டிஷ் இராணுவத்தில் சேர்ந்து 1939 இல் ஜூனியர் கமிஷன்டு அதிகாரியாக (JCO) ராயல் இந்தியன் ஆர்மி சப்ளை கார்ப்ஸ் (RIASC) உடன் இணைந்து இரண்டாம் உலகப் போரின் போது (1939-45) ஐக்கிய இந்தியா மற்றும் தென்கிழக்கு ஆசியாவின் பல்வேறு பகுதிகளில் பணியாற்றினார். தென்கிழக்கு ஆசியாவில் ஜப்பானியப் படைகள் பிரிட்டிஷ் படைகளைத் தாக்கியபோது, பிரிட்டிஷ் படைகளின் ஒரு பகுதியாக இருந்த கேப்டன் அப்பாஸ் அலி ஜப்பானியப் படைகளுடன் சண்டையிட்டார், ஆனால் ஜெனரல் பெர்சிவல் ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட பிரிட்டிஷ் படைகளுடன் சரணடைந்தபோது. ஜப்பானியர்கள் இரண்டு பெரிய பிரிட்டிஷ் போர்க் கப்பல்களை அழித்த பிறகு. கேப்டன் அப்பாஸ் அலி ஜப்பானியர்களுடன் போர்க் கைதியாக (POW) ஆனார். இந்தச் சிறைப்பிடிப்பின் போது அவர் ஜெனரல் மோகன் சிங் நிறுவிய இந்திய தேசிய இராணுவம் (INA) அல்லது ஆசாத் ஹிந்த் ஃபௌஜில் சேர்ந்தார். 1945 ஆம் ஆண்டில், நேதாஜி சுபாஷ் சந்தர் போஸின் தலைமையில் INAவின் 'டில்லி சலோ' திட்டத்தில் முக்கிய பங்கு வகித்தார். அவர் அரக்கானில் இந்திய இராணுவத்துடன் சண்டையிட்டார், ஆனால் ஜப்பானியர்கள் சரணடைந்தபோது, அவர் INAவின் 60000 சக வீரர்களுடன் கைது செய்யப்பட்டார். அவர் நீதிமன்றத்தில் தற்காப்புக்காக விசாரிக்கப்பட்டு மரண தண்டனை விதிக்கப்பட்டார். 1947 ஆம் ஆண்டு சுதந்திரத்திற்குப் பிறகு, நேரு அரசாங்கத்தால் விடுவிக்கப்பட்ட அவர், பின்னர் பிரதான அரசியலில் இணைந்தார். அவர் தீவிர சோசலிஸ்டாக இருந்தார்; 1948 ஆம் ஆண்டில் அவர் ஆச்சாரிய நரேந்திர தேவா, ஜெயபிரகாஷ் நாராயண் மற்றும் டாக்டர் ராம் மனோகர் லோஹியா ஆகியோரின் சோசலிசக் கட்சியில் சேர்ந்தார். 1966-67 ஆம் ஆண்டில் சம்யுக்த சோசலிஸ்ட் கட்சியின் (SSP) உத்தரப் பிரதேச பிரிவின் பொதுச் செயலாளராகவும், 1973-74 ஆம் ஆண்டில் சோசலிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளராகவும் இருந்தார். 1967 ஆம் ஆண்டில், சம்யுக்த சோசலிஸ்ட் கட்சியின் (SSP) மாநிலச் செயலாளராக இருந்தபோது, மறைந்த சௌத்ரி சரண் சிங் தலைமையிலான உத்தரப் பிரதேசத்தில் முதல் காங்கிரஸ் அல்லாத சம்யுக்த விதாயக் தளம் (SVD) அரசாங்கத்தை உருவாக்குவதில் முக்கிய பங்கு வகித்தார், பின்னர் அவர் சிறிது காலம் இந்தியாவின் பிரதமரானார். அவசரநிலையின் போது அவர் 19 மாதங்கள் சிறையில் அடைக்கப்பட்டார். அவசரநிலைக்குப் பிறகு, ஜனதா கட்சியின் உ.பி. பிரிவின் முதல் தலைவரானார். 1978 ஆம் ஆண்டில் அவர் ஆறு ஆண்டுகள் உ.பி. சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டார். அவர் ஆறு ஆண்டுகள் உ.பி. சன்னி மத்திய வக்ஃப் வாரியத்தின் உறுப்பினராக இருந்தார். அலிகரின் ஜவஹர் லால் நேரு மருத்துவக் கல்லூரியில் சிறிது காலம் உடல்நலக் குறைவால் பாதிக்கப்பட்டு 2014 அக்டோபர் 11 அன்று அவர் காலமானார்.



குறிப்புகள் மற்றும் கூடுதல் வாசிப்புகள்:
அலி, கேப்டன் அப்பாஸ். ந ஹூன் கிசி கா தஸ்த்-இ-நகர்- மேரா சஃபர்நாமா (குத்னாவிஷ்ட்). ராஜ்கமல் பப்ளிகேஷன், டெல்லி, 2009
அலி, குர்பன். கேப்டன் அப்பாஸ் அலி: ஒரு உண்மையான தேசபக்தர் மற்றும் மண்ணின் மைந்தர்.

தமிழ்நாடு இ பேப்பர்.காம்



# அப்பாவின் அந்த சிரிப்பை வாழ்க்கையில் மறக்கவே முடியாது



சவுந்தர்யா ரஜினிகாந்த் தயாரித்து மதன் இயக்கத்தில் அபிஷன் ஜீவிந்த், அனஸ்வரா ராஜன் நடிப்பில் சமீபத்தில் வெளியான படம், 'வித் லவ். இந்த படம் ரசிகர்களிடையே வரவேற்பை பெற்று வரும் நிலையில், படத்தின் வெற்றியை படக்குழுவினர் கொண்டாடினார்கள்.

இதில் தயாரிப்பாளர் சவுந்தர்யா ரஜினிகாந்த் பேசும்போது, 'வித் லவ்' படத்துக்கு ரசிகர்கள் தரப்பில் நல்ல வரவேற்பு கிடைத்து வருகிறது.

அந்த சந்தோஷத்துடன் படக்குழுவை அழைத்துக்கொண்டு என் அப்பாவை (ரஜினிகாந்த்) பார்க்க சென்றேன். என் அப்பா என்னை கட்டிப் பிடித்து, என்னை பார்த்து ஒருமாதிரியாக சிரித்தார். அப்போது நான் கேட்டேன். 'அப்பா இது தான் வெற்றியா?" என்று...

அப்பாவின் அந்த சிரிப்பை என்னால் வாழ்க்கையில் மறக்கவே முடியாது. 18 ஆண்டு திரைப்பயணத்தில் நான் அடைந்த முதல் வெற்றி இது. 'வித் லவ்' படக்குழுவால் தான் அது அமைந்தது. அனஸ்வரா ராஜனை பார்த்து, 'இத்தனை நாள் எங்கங்க இருந்தீங்க...' என்று அப்பா ஆச்சரியத்துடன் கேட்டார். அபிஷனையும் பாராட்டி தீர்த்துவிட்டார். இந்த குழு மீண்டும் இணைந்தாலும் நான் ரெடி. ஓகே சொல்லட்டும். பட்டறையை போட்டுடலாம், என்றார்.

விஜய் தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகி வரும் சிறகடிக்க ஆசை சீரியல் மூலம் பிரபலமானவர் நடிகை சல்மா அருண். இவர் இந்த சீரியலில் ரோகிணி என்கிற கதாபாத்திரத்தில் நடித்து வருகிறார். இவருடைய வில்லத்தனமான நடிப்புக்கு ரசிகர்கள் ஏராளம்.

இன்ஸ்டாகிராமில் ஆக்டிவாக இருக்கக்கூடிய சல்மா அருண், தனது லேட்டஸ்ட் புகைப்படங்கள அதில் தொடர்ந்து பதிவு செய்த வருகிறார்.



# தலைவர் ரஜினியின் கருத்து பயனுள்ளதாக இருந்தது அனஸ்வரா ராஜன்

சௌந்தர்யா ரஜினிகாந்த் தயாரிப்பில், அறிமுக இயக்குநர் மதன் இயக்கத்தில் அபிஷன் ஜீவிந்த், அனஸ்வரா ராஜன் நடிப்பில் வெளியான திரைப்படம் 'வித் லவ்'. இந்தப் படத்தின் மூலம் அபிஷன் கதாநாயகனாக அறிமுகமானார். அபிஷன் ஜீவிந்த் முன்னதாக தமிழில் வெளியாகி பெரும் வெற்றி பெற்ற "டூரிஸ்ட் ஃபேமிலி" படத்தின் இயக்குநர் ஆவார்.

காதல் கதையை மையமாக கொண்டு எடுக்கப்பட்டு இருக்கும் "வித் லவ்" படத்தில் காவ்யா அனில், ஹரிஷ்குமார், சச்சின் நாச்சியப்பன், தேனி முருகன், ஆர்.ஜே. ஆனந்தி உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர். இந்தப் படத்திற்கு ஷான் ரோல்டன் இசையமைத்துள்ளார். பெரும் எதிர்பார்ப்புக்கு மத்தியில் வித் லவ் திரைப்படம் கடந்த வாரம் வெளியானது.



வித் லவ் திரைப்படம் வெளியான மூன்று நாட்களில் உலகளவில் ரூ. 11 கோடி வசூலித்துள்ளதாக படக்குழு அறிவித்துது. பெரும் எதிர்பார்ப்புக்கு மத்தியில் வெளியான நிலையில், வித் லவ் திரைப்படம் வெற்றி பெற்றுள்ளது. இந்த நிலையில், வித் லவ் திரைப்படத்தின் வெற்றி விழா சென்னையில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு பேசிய நடிகை அனஸ்வரா ராஜன், "வித் லவ் திரைப்படத்தை மிகுந்த அன்புடன் பெற்றதற்கு பார்வையாளர்களுக்கு மிக்க நன்றி. திரையரங்கிற்கு வந்த போது கிடைத்த வரவேற்பை பார்த்து நான் மிகவும் மகிழ்ச்சியடைந்தேன். பார்வையாளர்கள் படத்தை மிகவும் ரசிக்கிறார்கள். தலைவர் ரஜினி காந்தை நாங்கள் சந்தித்தோம், அவரது கருத்து எங்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருந்தது," என்றார்.

# நானியின் 'தி பாரடைஸ் - புது ரிலீஸ் தேதி அறிவிப்பு!



நடிகர் நானி மற்றும் இயக்குனர் ஸ்ரீகாந்த் ஒடேலா மீண்டும் இணைந்துள்ள படம் தி பாரடைஸ். 'தசரா' படத்திற்குப் பிறகு நானி-ஸ்ரீகாந்த் ஒடேலா இணையும் இரண்டாவது படம் இது. இப்படத்திற்கு அனிருத் ரவிச்சந்தர் இசையமைக்கிறார். கயாடு லோஹர் கதாநாயகியாக நடிக்கிறார். மோகன் பாபு, ராகவ் ஜுயல், சோனாலி குல்கர்னி மற்றும் சம்பூர்ணேஷ் பாபு ஆகியோர் முக்கிய வேடங்களில் நடிக்கின்றனர். தமிழ், தெலுங்கு, இந்தி, மலையாளம், கன்னடம் உள்ளிட்ட மொழிகளில் வெளியாகும் இப்படத்தை SLV சினிமாஸ் தயாரிக்கிறது.

1980-களில் செகந்திராபாத் பின்னணியில் நடக்கும் கதைக்களத்தை அடிப்படையாக கொண்டு எடுக்கப்பட்டுள்ளது. இதில் ஒடுக்கப்பட்ட சமூகத்திற்காகப் போராடும் தலைவராக நானி நடித்துள்ளார். இந்தப் படம் மார்ச் 26 அன்று வெளியாகும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. இந்நிலையில் படம் ஆகஸ்ட் 21 அன்று வெளியாகும் என்று அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# காதலர் தினத்தன்று வெளியாகும் லோகேஷ் கனகராஜின் 'DC' க்ளிம்ப்ஸ்!




முன்னணி நடிகர்களை வைத்து படம் இயக்கி, தமிழ் சினிமாவின் முக்கிய இயக்குநராக வலம்வருபவர் இயக்குநர் லோகேஷ் கனகராஜ். நடிகை ஸ்ருதிஹாசனுடன் ஆல்பம் பாடல் ஒன்றில் நடித்திருந்தார். அதனைத்தொடர்ந்து தற்போது இயக்குநர் அருண் மாதேஷ்வரன் இயக்கத்தில் டிசி படத்தின்மூலம் கதாநாயகனாக அறிமுகமாகிறார்.

இப்படம் முழு ஆக்ஷன் படமாக உருவாக உள்ளதாக கூறப்படுகிறது. இப்படத்தில் லோகேஷ் கனகராஜிற்கு ஜோடியாக ஹிந்தியின் முன்னணி நடிகையான வாமிகா கபி நடிக்கிறார். அனிருத் ரவிச்சந்திரன் படத்திற்கு இசையமைக்கிறார். சன் பிக்சர்ஸ் நிறுவனம் படத்தை தயாரிக்கிறது. இந்நிலையில் இப்படத்தின் க்ளிம்ப்ஸ் வீடியோ பிப்.14ம் தேதி காதலர் தினத்தன்று வெளியாகும் என படக்குழு அறிவித்துள்ளது.



பூவே பூச்சூடவா சீரியல் மூலம் சின்னத்திரையில் நடிகையாக அறிமுகமானவர் ரேஷ்மா முரளிதரன். இவர் தற்போது சன் டிவியில் ஒளிபரப்பாகி வரும் செல்லமே செல்லமே சீரியலில் கதாநாயகியாக நடித்து வருகிறார்.

இன்ஸ்டாகிராம் பக்கத்தில் Followers-ஐ கொண்டுள்ள நடிகை ரேஷ்மா வெளியிடும் புகைப்படங்கள் இணையத்தில் வைரலாகும். அந்த வகையில் தற்போது அசத்தலான லுக்கில் இவர் வெளியிட்டுள்ள போட்டோஷூட் புகைப்படங்கள் படுவைரலாகியுள்ளன.

# இதயம் முரளி படத்தில் இவரா?



டான் பிக்சர்ஸ் தயாரிப்பு நிறுவனத்தின் 4வது திரைப்படமாக, தயாரிப்பாளர் ஆகாஷ் பாஸ்கரன் இயக்கத்தில், அதர்வா முரளி நடிக்கும், படம் "இதயம் முரளி". இந்தப் படத்தின் டைட்டில், டீசர் மற்றும் பாடல்கள் வெளியாகி ரசிகர்கள் மத்தியில் வரவேற்பு பெற்றுள்ளது. இந்தப் படத்தில் அதர்வாவுடன் தமன் எஸ், ப்ரீத்தி முகுந்தன், கயாடு லோஹர் மற்றும் நிஹாரிகா முன்னணி கதாப்பாத்திரத்தில் நடித்துள்ளனர்.

முழுக்க முழுக்க இளைஞர்கள் கொண்டாடும், ரொமான்ஸ் திரைப்படமாக இதயம் முரளி உருவாகி வருகிறது. தமிழ் சினிமாவில் நடிகர் முரளியின் மறக்கமுடியாத பாத்திரம் இதயம் முரளி, அவரது மகன் அதர்வா நடிக்கும் இதயம் முரளி படத்திற்கு ரசிகர்கள் மத்தியில் பெரும் எதிர்ப்பார்ப்பு நிலவி வருகிறது.

இந்தப் படம் தொடர்பான அறிவிப்புகள் ரசிகர்கள் மத்தியில் நல்ல வரவேற்பை பெற்று வரும் நிலையில், படக்குழு சார்பில் மற்றொரு அப்டேட் வெளியிடப்பட்டுள்ளது. அதன்படி இதயம் முரளி திரைப்படத்தில் பிரபல நடிகர் பகத் பாசில் நடித்துள்ளதை படக்குழு தற்போது உறுதிப்படுத்தி இருக்கிறது. இந்தப் படம் வருகிற ஏப்ரல் அல்லது மே மாத வாக்கில் திரைக்கு வரும் என்று தெரிகிறது.



Happy Birthday
H.HARINI HARISHANKAR




Follow our WhatsApp Channel
Scan this QR code using the CAMERA to view or follow our Channel
PADMA DIGITAL BROADCAST
Tamilnadu Epaper
WhatsApp channel




Just499
TOURS & TRAVELS WEBSITE
We Provide Complete Tours & Travels Website Solution
ONLY Rs. 499
Website: just499.com
WhatsApp: 7789951009
Phone: 7789951009
Email: orderjust499@gmail.com




TAMIL TELECALLER JOB FOR
WORK FROM HOME
ALL OVER TAMILNADU
APPLY NOW
7789951009
PRINT MEDIA, DIGITAL MEDIA
SOCIAL MEDIA
DAILY & MONTHLY SALARY
SALARY STARING FROM
Rs. 10000/- onwards
Whatsapp: 7789951009




UNIVERSAL ENGINEERS CHENNAI PVT LTD
உடனடி வேலை வாய்ப்பு திங்கள் முதல் வெள்ளி வரை காலை 10.00 மணிமுதல் மாலை 3.00 மணிவரை நேரில் வரவும்
அலுமினிய வெல்டர் - 5 நபர்கள்
டிக் (TIG) வெல்டர் - 5 நபர்கள்
ஹெல்பர்கள் - 25 நபர்கள்
பெண்டிங் மிஷின் ஆப்பரேட்டர்
Press Brake,Laser ஆப்பரேட்டர்
Turret ஆப்பரேட்டர்
5 - 6 வருடம் அனுபவம் உள்ளவர்கள் தேவை.
No. 72, North Phase, Ambattur Industrial Estate,Chennai - 600098
hr.executive@universalengineers.in
Ph: 8925928971




இந்து சமய அறநிலையத்துறை
திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறு வட்டம், முனுகப்பட்டு கிராமம்
அருள்மிகு பச்சையம்மன் உடனுறை மன்னார்சாமி திருக்கோயில்
ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன நவகுண்டயாகம்
மஹா கும்பாபிஷேக பெருவிழா
அழைப்பிதழ்
அன்புடையீர், வணக்கம் !
நிகழும் சுபஸ்ரீ விசுவாவசு வருஷம் உத்தராயண புண்ணியகாலம் மாசி மாதம் 10-ஆம் நாள் (22-02-2026) ஞாயிற்றுக்கிழமை பஞ்சமி திதி, அஸ்வினி நட்சத்திரம் சித்தயோகம் கூடிய சுபயோக சுபதினத்தில் காலை 10.30 மணிக்குமேல் 11.30 மணிக்குள்ளாக ரிஷப லக்னத்தில் அருள்மிகு பச்சையம்மன் உடனுறை மன்னார்சாமி திருக்கோயில் மஹா கும்பாபிஷேகம் நடைபெற இருப்பதால் அனைத்து பக்தகோடிகளும், ஆன்றோர்களும், சான்றோர்களும் கலந்துகொண்டு எல்லாம் வல்ல அகிலாண்டகோடி பிரம்மாண்ட நாயகி அருள்மிகு பச்சையம்மன் மன்னார்சாமி அருளை பெற அன்புடன் வேண்டிக்கொள்கிறோம்.
நிகழ்ச்சி நிரல்
தமிழ் தேதி | ஆங்கில தேதி | நேரம் | நிகழ்ச்சி
மங்கள ஸ்ரீவிசுவாவசு வருடம் மாசி மாதம் 7-ஆம் நாள் | 19-02-2026 வியாழக்கிழமை | காலை 8.00 மணிக்கு | மங்கள இசை அனுக்ஞை விக்னேஸ்வர பூஜை, கோபூஜை, மஹா கணபதி ஹோமம், நவக்கிரக ஹோமம், மகாலஷ்மி ஹோமம், நட்சத்திர ஹோமம், பூர்ணாஹுதி உபசாரம், தீபாராதனை, பிரசாதம் வழங்குதல்.
மாலை 5.00 மணிக்கு | வாஸ்து சாந்தி, ரக்ஷோக்ன ஹோமம், பிரவேசபலி பூஜைகள்
மாசி மாதம் 8-ஆம் நாள் | 20-02-2026 வெள்ளிக்கிழமை | காலை 8.00 மணிக்கு | தீர்த்த சங்கிரணம், அக்னி சங்கிரணம், திசா ஹோமம், மூர்த்தி ஹோமம், அஸ்திர ஹோமம், மந்திர ஜபம், சம்கிதா ஹோமம், யாகசாலை அலங்காரம்
மாலை 5.00 மணிக்கு | மங்கள இசை, கணபதி பிரார்த்தனை, மிருத்சங்கிரணம், அங்குரார்பணம், பிரதான ஆச்சார்யர் ரக்ஷாபந்தனம், எஜமானர்கள் காப்பு கட்டுதல், விஷேசசந்தி, கும்பலங்காரம், கலாகர்ஷணம், முதல்கால யாகபூஜைகள் ஆரம்பம், நவகுண்ட பூஜைகள், சௌபாக்கிய திரவியங்கள் ஹோமங்கள் உபசாரம், தீபாராதனை, பிரசாதம் வழங்குதல்.
மாசி மாதம் 9-ஆம் நாள் | 21-02-2026 சனிக்கிழமை | காலை 8.30 மணிக்கு | மங்கள இசை, விஷேசசந்தி, கணபதி பிரார்த்தனை அங்குரபூஜை, இரண்டாம் கால யாகபூஜைகள் ஆரம்பம், மண்டப அர்ச்சனை வேதிகா உபசாரங்கள், அஷ்டபந்தனம் சாத்துதல், தீபாராதனை, பிரசாதம் வழங்குதல்.
மாலை 5.30 மணிக்கு | மங்கள இசை, விஷேசசந்தி, மூன்றாம் கால யாகபூஜைகள் ஆரம்பம், மண்டப அர்ச்சனை, வேதிகா அர்ச்சனை, நவகுண்ட யாகபூஜைகள், நாடிசந்தானம், தத்துவார்ச்சனை, ஸ்பர்சாஹுதி சௌபாக்கிய திரவியங்கள், ஹோமம் சோடச உபசாரங்கள், தீபாராதனை, பிரசாதம் வழங்குதல்.
மாசி மாதம் 10-ஆம் நாள் | 22-02-2026 ஞாயிற்றுக்கிழமை | காலை 7.30 மணிக்கு | மங்கள இசை, விஷேசசந்தி, கணபதி பிராத்தனை அங்குரபூஜை, நான்காம் கால யாகபூஜைகள் ஆரம்பம். அவபிரதயாகம், நவகுண்ட யாக பூஜைகள், மஹா பூர்ணாஹுதி, யாத்ராதன சங்கல்பம், மஹா தீபாராதனை.
காலை 10.30 மணிக்கு | கலசங்கள் புறப்பாடு
காலை 11.00 மணிக்கு | ராஜகோபுரம் மற்றும் அனைத்து விமானம் கும்பாபிஷேகம்
காலை 11.15 மணிக்கு | மூலவர் அருள்மிகு பச்சையம்மன் மன்னார்சாமி கும்பாபிஷேகம்
காலை 11.30 மணிக்கு | மஹா அபிஷேகம், அலங்காரம்
பகல் 12.00 மணிக்கு | சிறப்பு அன்னதானம்
மாலை 6.00 மணிக்கு | சுவாமி அம்பாள் திருக்கல்யாணம்
இரவு 8.00 மணிக்கு | சுவாமி அம்பாள் திருவீதிஉலா நடைபெறும்
இரவு 10.00 மணிக்கு | நாடகம் நடைபெறும்
இங்ஙனம்
திருக்கோயில் நிர்வாகம், திருப்பணி விழா குழுவினர்கள், திருக்கோயில் பணியாளர்கள், மற்றும் ஊர்பொதுமக்கள், முனுகப்பட்டு
ஸ்ரீ சௌந்தர் பிரஸ், வேலூர்-4. செல் : 9894584829




Vilambaram
WE HELP YOU TO BOOST YOUR BUSINESS
VISIT:VILAMBARAM.COM
CONTACT: 8122798599




WANTED
Job 1-SALES ENGINEER
Required Experience:
05-07 years in selling Acrylic Laminates (Decorative for Interiors) in Tamil Nadu
Job 1-SALES ENGINEER
Required Experience:
05-07 years in selling Metal Roofing for PEB Building in Tamil Nadu
ALP AEROFLEX INDIA PVT. LTD.
Contact details for Tamilnadu Location
Cell: 9884083322
Email: hari@alpoverseas.com




Wanted REPORTERS
சட்டமன்ற தொகுதி வாரியாக நிருபர்கள் தேவை
PRESS
TV NEWS
பேப்பர்பாய்
8122664699




தனியார் வாகன உதிரிபாகங்கள் உற்பத்தி செய்யும் நிறுவனத்தில் பணிபுரிய ஆட்கள் தேவை.
Quality Line Inspector
Fresher/Exp Male Only
Qualification - ITI/Diplomo/B.E
Final Quality Inspector
Fresher / Exp - Male/Female
Qualification: 10th/ 12th/ ITI
VMC Machine operator
Fresher/ EXP Male only
Qualif: 10th/12th/ITI/Diploma
Mr Prakesh : 8939 940 090
Mr.Neelavanan : 9884 001 253
SALARY BASED ON EXPERIENCE




அருள்மிகு ஸ்ரீ மாலையம்மன் சமேத அருள்மிகு சுப்பிரமணியர் துணை
அருள்மிகு திருச்செந்தூர் முருகர் துணை
ஸ்ரீ ஹரி ஜோதிட மையம்
ஜாதகம், திருமணப் பொருத்தம், ஜாமக்கோள், ஆரூடம் பார்க்கப்படும்.
தாம்பூல பிரசன்னம், சோழி பிரசன்னம், அஷ்ட மங்கல பிரசன்னம்
மேலும் திருமணம், புத்திர பாக்கியம், கல்வி, தொழில் ஆகியவற்றில் ஏற்பட்ட தடைகளுக்கு ஜோதிடரீதியான தீர்வு செய்யப்படும்.
ஜோதிட நிபுணர் இராஜபாளையம் இராமமூர்த்தி MA Astro
81899 08040 / 93425 03572
harisudhan1968@gmail.com






## லவ்வர்ஸ்டே!

கூப்பிடு தூரத்தில்தான்
வசிக்கின்றாள்...
ஆனாலும், பெயர் சொல்லி
அழைக்க முடியவில்லை...
பழையக்காதலியை!

ஏ.எம்.ஷெரீஃப்,
புதுக்கோட்டை.

## ஹைக்கூ:

**1. கவனம்:**
மிக கவனமாக
இருக்கிறேன்– தந்திர
மனிதர்களிடம் இருந்து
தந்திரமாக
காப்பாற்றிக்கொள்ள!!!!

**2.. உறக்கம்:**
நிம்மதியாக உறங்கினேன்–
கட்டாந்தரையில்!!!!

**3. ஊனம்:**
அடிக்கடி மௌனிக்கிறாயே–
எனக் கேட்க – வார்த்தைகள்
ஊனமாகியது!!!

**4. பேச்சு:**
அரசல் புரசலாக காதில்–
விழுந்தவை எல்லாம் – ஒரு
நாள் பெரிய பேச்சாக
மாறும்!!;

**5. அழகு:**
வசவு வார்த்தைகளை
கூறமுற்பட– முகம்

அழகாகிறது–
மனம்
கரியைப்பூசிக்
கொள்கிறது!!!
நன்றி

பானு ஸ்ரீ
பாண்டிச்சேரி

## இன்ப துன்பம் நடக்கும்

"நடந்ததை" நினைத்து
கவலைப்படுவது துன்பமே !

"நடக்கிறதையாவது"
அதன்போக்கில் போய்
வாழ்ந்தால் இன்பமே !

"நடக்கும்" என்ற

நம்பிக்கையில்
நகருங்கள்
"இன்பமோ"
"துன்பமோ"
இரண்டில்
ஒன்று வந்தே
தீரும் !

G.A.கோவிந்தராஜ்
(எ)சுரேஷ்குமார்
திருப்புவனம் புதூர்



முத்த யுத்தத்துக்கு
ஆயத்தமாய் இதயத்தை
ஊடுறுவும் மலர்க்
காதல்அம்பு.

விழி அம்பு ஆனதால்
வலிகளும்.. ஏக்கங்களும்.

பூஞ்சொற்கள் ஆனதால்
மலர்ச்சியுறும் முழுமை பெற்ற
சொல்லத் தெரியாத
ஆனந்தம்


காதல்
வேதத்தின்
சின்னமாயொரு
ஆதிகால
அரிச்சுவடி!

கீதா
கண்ணன்
ஸ்ரீரங்கம்



## எங்கே முடியுமோ.?

"வயசு முப்பத்தஞ்சு
தாண்டிடுச்சே..
இன்னும் கல்யாணமே
ஆகலியேன்னு கவலையா..
விட்டுத்தள்ளுங்க எங்க
திருமண ஒப்பந்த மையத்துல
பதிவு பண்ணிட்டு
பாருங்க.. கனவுல டூயட்
பாடுவீங்க" உற்சாகமாக
விளம்பரத்தில் பேசக்கூட
இன்றைய இளம்பெண்கள்
தயாரில்லை ... ஒட்டவைத்த
போலிப்புன்னகை யோடு...

ஓயாமல்
பேசுகிறாள்
'ஏஜ 'பெண்..
என்னடா
இது முதிர்
காளையர்
களுக்கு வந்த
சோதனை.!

க.குமாரகுரு,மயிலாடுதுறை



## விழிகள்:

விழிகள் நோக்குமோ
வெற்றிடம் நோக்கியே
மொழிகள் பேசுமோ
முன்னுரை ஆயிரம்
பழிகள் சொல்லுமோ
பார்க்காமல் போனதால்
வழிகள் பார்க்காமல்
வாடி நிற்குமோ!!
கொஞ்சிய காதலன்
கூடவே இல்லாததால்
அஞ்சனம் தீட்டிய
அந்தக் கண்கள்
வெஞ்சினம் காட்டுமோ
வேகம் கூட்டுமோ?

வைரமணி , சென்னை

## கற்றோர்க்கு...!

அறுசீர் மண்டிலம்.

கல்விக்கு எந்நாளும்
மதிப்பு கற்றாரைக்
கண்டாலே திகைப்பு
நல்வித்தாம் ஒழுக்கத்தைக்
கொடுக்கும் நல்லநல்ல
செய்திகளைப்படைக்கும்!
வெல்வதற்கு உதவிடுமே
கல்வி வீறுடனே
வாழ்ந்திடலாம் அள்ளி
சொல்லிடுமே உயர்வுதனைக்
கல்வி சோர்வைத்தான்
விரைந்தோட்டும் கல்வி!

செல்வமட்டும் போதாது
வாழ தேர்ந்தகல்வி
தேவையடா சூழ
நல்லவராய் மாற்றிடுமே
கல்வி நானிலத்தில்
உயர்வுதரும் அள்ளி!
பொல்லாரைத் திருத்திடுமே
கல்வி புகழ்வாசல்
சேர்த்திடுமே சொல்லி
இல்லார்க்கும் உதவிடுமே
கல்வி எங்கேதான்
போனாலும் நன்றே!

முனைவர்
இராம.வேதநாயகம்
திருவண்ணாமலை.

## உன் எண்ணம்போல் வாழ

மலரெண்டால் பூத்து
குலுங்கி கருகி போகும்...

மனிதன் உடல் வாழ்ந்து
மண்ணில் மறைந்து
போகும்...

கொட்டும் மழை நடிவே
பலத்த இடி வந்தால் மழை
கூட நின்று போகும்....

எறிகின்ற தீபம் என்னை
முடியும்போது பிரகாசமா
எறிந்து அனைந்து
போகும்....

கொடுத்து உதவி பார் உன்
ஆயுள் கூடி கொண்டே
போகும்...

கல் சிலைக்கு
ஊற்றுகின்ற பாலை ஏழை
குழந்தைகளுக்கு கொடுத்து
பார் அந்த உயிர்கள்வாழும்...

சாமியை மனதில் நேசி...
ஏழை மக்களை உயிராய்
சுவாசி...நீ பல ஆண்டு வாழ
கிடைக்கும் நல்லாசி....!!

பொன்.கருணா,நவிமும்பை



## அம்மா என்ற மூன்றெழுத்து

அம்மா உடலில் நம் தோற்றம்
அவளே உயிரைக் காக்கும்
பெட்டகம் உயிர்தரும்
தொப்புள் கொடியே
பிள்ளைக்கு உணவுக்குழலாம்
உறவுக்கும் அதுவே கட்டியம்
கூறும் !!

பால்நினைந்து ஊட்டுபவள்
அன்னை பாசமிகு
காட்டுபவளும் அவளே !!

வாலாட்டும் கன்றுமே
வாய்திறந்து
அம்மா என்றே கத்திடும் !!

தமிழச்சியின் குழந்தைகளும்
அம்மாவைத்தமிழிலே தான்
அழைக்கணும் தமிழ்மொழிச்

சொல்லிலே
தாயைப்
போற்றணும் !!

சண்முக
சுப்பிரமணியன்
திருநெல்வேலி




## டார்வினின் பரிணாமக். கொள்கை!

நேரிசை வெண்பா!

உயிரினத்தின் உன்னதத்
தோற்றமெனும் நூலை

நயன்மையாய்யாத்தாரே
நன்று... வியப்பான

செய்திகள் வீறுடன்
சீர்மையாய்க்காணுமே

பெய்திடுவோம்
டார்வின்தான் பீடு!

மனிதனின் முன்னோடி
மாண்பாம் குரங்கு

கனிவான கொள்கையைக்
கண்டார்.. அனைத்தும்

அறிவியலில் தானடங்கும்
அன்றேதான் சொன்னார்

திறமையாம்
டார்வினைத்
தேர்!

முனைவர்
இராம.
வேதநாயகம்
திருவண்ணாமலை.

## நிரந்தரமல்ல எதுவும் !'

நீ எனை விட்டு
அகன்றாலும் உன்
வாசம் என் மனதை
ஆக்கிரமித்துக்
கொண்டிருக்கிறது
உன் கயல் விழிகளில்
காணப்பட்ட காந்த
சக்தி இப்பொழுதும்
எனை ஈர்த்துக்
கொண்டிருக்கிறது
அன்னத்தையும்
தோற்கடிக்கும் உன்
ஒயிலான நடையழகு
இன்னமும் எனது
மனக்கண்ணில்
தோன்றி அலைக்கழிக்கிறது
எனை நெருங்கி
இருந்தபொழுது
எனது காதில் ஒலித்த
உன் இதயத்தின்
'லப் டப்' சட்டென
நின்று போனதே ஏன்
இவ்வளவு சீக்கிரம் உனது
விண்ணுகப் பயணம்
கண்ணே !

வி.கே.
லக்ஷ்மிநாராயணன்



## திருமெய்யம் தந்த தீரர் சத்தியமூர்த்தி.!

கோட்டை வாசலுக்குள் ஒரு கோடை இடியென குரல்தரவே
வந்தான்.! ஏழைக் குரலாகவே வந்தான்!

பெரிய வீதியிலே.. எளிய மனிதருக்கு உரிமைக் குரலாகவே
வந்தான்! அரிய குணத்தாலே நின்றான்!

ஊத்துக் கேணியென.. ஊற்றெடுத்த உயிர் நாட்டு
விடுதலைக்கே வந்தான்! வேட்டின் ஒலிமுழக்கம் தந்தான்!

கற்ற கல்வியினால் ஆங்கிலத்தை கொண்டு ஆங்கிலேயரை
வென்றான்! மேயராக அவன் நின்றான்!

சென்னை மாநகரின் தாகம் தீர்க்கஒரு.. பூண்டி நீர்தேக்கம்
தந்தான்! மெய்யன் அருளாலே வென்றான்!

காமராசர் என்னும் கர்ம வீரனுக்கு ஞான குருவடிவாய் நின்றான்!
காந்தி நெறித்தடத்தில் சென்றான்!

உய்ய வந்தவனாய் மெய்யம் வந்துதித்து அய்யன் பெற்றபுகழ்
சொல்ல.. தமிழில் வர்த்தைவர வில்லை!

வீரர் பொங்கியெழ.. நேரு உடன்நடந்த தீரர் சத்திய மூர்த்தி!

திரு மெய்யம் தந்த வரின் கீர்த்தி!

வாழி வாழி என் மண்ணின் மைந்தன்
புகழ் நினைவுநாளில் நாம் நினைப்போம்!
ஆழிக்கடல்முத்து.. தீரர் சத்திய மூர்த்தி
தடத்தில் நம் பாதை அமைப்போம்!

வே.கல்யாண்குமார்.

## நம்பிக்கை விதை

வாழ்வில்...

எல்லா விதைகளும்
மொட்டாய் மலராக
மலராது... சில உதிரும்,
முள்ளாய் உறுத்தும்.

எல்லா ஒளியும்
வெளிச்சமாய் நிலைக்காது
சில பாதைகள்
மூடுபனியில் மறையும்.

ஆனால்...

உறுத்தும் முட்கள்
மலர்களின் காவலன்

மறைந்த இருள்
விடியலின் முன்னுரை.

விழுந்த இடத்தில்
மண் தழுவும்
வெப்பமும் உண்டு

சோர்ந்த கண்களிலே
உறுதியான நம்பிக்கை
ஒளியும் உண்டு.

வாழ்வில் நாம் தேடும்
அமைதியை நமக்குள் தேடி...


நமக்குள் விதைக்கப்பட்ட
புதிய நம்பிக்கையை
நம்பி ஒரடி வைப்போம்
மீதியை வாழ்வே
வழிநடத்தும்...

நா.பத்மாவதி
கொரட்டூர்

# நூல் விமர்சனம்

நூலின் பெயர் :
இதயமொழியின் உதயராகம்
ஆசிரியர் : இர.மனோன்மணி
வெளியீடு : கவிக்குடில்
பக்கம் : 100 விலை : 120
தொடர்புக்கு : 8754879990






பெண்களிடம் கரண்டியைப் பிடிக்கிவிட்டு பேனாவை கொடுங்கள் என்றார் தந்தை பெரியார் அவர்கள் ஆம்,,, எத்தனை காலம்தான் கரண்டியே பிடித்து அடுப்பங்கரையில் ஆக்கிப்போடும் வேலை செய்வது,,,? ஏதாவது ஆக்கப்பூர்வமான வேலை செய்யலாமேயென்று தைக்கும் துணிகளையெல்லாம் அப்புறப்படுத்திவிட்டு கவிதை எழுத வந்துள்ளார் தையற்கலைஞர் மனோன்மணி இதய மொழியின் உதய ராகம் நூலின் ஆசிரியர்,

மனோண்மணி அவர்களின் தந்தையார் ஒரு பன்முக கலைஞர், தமிழக அரசின் கலை பண்பாட்டு விருது,அகவை முதிர்ந்த தமிழறிஞர் விருது போன்றவை பெற்றவர்,கவிதை,பாடல்கள்,சொற்பொழிவு,மேடைப் பேச்சு,என அனைத்து இலக்கிய பரிமாணங்களையும் கற்றவர், அவருக்கு பிறந்த இவர் சும்மா இருப்பாரா,,, நானும் யாருக்கும் சலைத்தவள் அல்ல என அந்த புலிக்கு பிறந்த பெண்புலி இக்கவிதை நூலை அழகான அவசியமான கவிதைகளோடு கொண்டு வந்துள்ளார், இதனால் அவரின் நீண்ட நாள் ஆசையும் அவர் தந்தையின் கனவும் நிறைவேறியுள்ளது, அவரின் அம்மாவும் மிகவும் மகிழ்ச்சி அடைவார்,

இந்நூலில் பல கவிதைகள் எளிமையாக கையாளப்பட்டு இருந்தாலும் வலிமையான கருத்துச் செரிவோடு இருப்பதை காணமுடிகிறது, இது முதல் புத்தகம்தான் ஆனால் முதல்தரமான புத்தகம் என்றால் அது மிகையாகாது, கவிதைகளை எதார்த்தமாக எழுதியுள்ளாரே தவிர வார்த்தை ஜாலம் செய்ய தெரியவில்லை அதே நேரம் வசீகரிக்கவும் தெரிய வேண்டும், அடுத்த நூலில் இன்னும் பல மடங்கு சிறப்பாக எழுதுவார் என்ற நம்பிக்கை உள்ளது எனக்கு, இதை அவரிடமே நான் சொல்லிவிட்டேன், ஆமாம் சொன்னால்தானே தெரியும்,

இக்கவிதைநூல் ஒரு தஞ்சாவூர் கதம்பம் போல் வசீகரிக்கிறது, தாய்பாசம்,தந்தை பாசம்,மகன் பாசம், மகள் பாசம், கணவர் நேசம், குழந்தைகள்,சமூகம்,என பலவற்றையும் கலந்து எழுதியுள்ளார், அதனாலென்ன எல்லோரும் வாசிக்கலாமே,

இந்நூலில் பல கவிதைகள் பேசும்படி உள்ளது, ரசிக்கும்படியும் உள்ளது "பொய் காதல் " என்ற கவிதையில்,,, முத்துமாலை வேண்டுமென்று கேட்டேன் உன் சிரிப்பே முத்துதான் என்றான் குழந்தை என்றேன் உடனே தாயாக்கி விட்டான் என பொய்காதலனை தோலுரித்து காட்டுகிறார்,இந்தக் காலம் அப்படிதானே உள்ளது பெண்கள் கவனமாக இருக்க வேண்டும் ஆண்களின் பொய் வார்த்தை நம்பாதீர்கள் என உசார் படுத்துகிறார்,

"பெண் உரிமை " என்ற கவிதையில்,,, சமையல் கலை வல்லுநர்கள் பெண்கள்தான் – ஆனால் அதில் குறைகளை கேட்காமல் வாழ்ந்ததில்லை என உண்மை நிலையைச்சொல்லி சாம்பார் சரியில்ல,பொரியல் சரியில்ல,உப்பு அதிகமா இருக்குயென குறைச்சொல்லும் ஆண்களுக்கு சவுக்கடி கொடுக்கிறார்,

மற்றொரு கவிதையில்,,, ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காணலாம் ஏழை சிரித்தால்தானே இறைவனை காணமுடியும் என எள்ளி நகையாடுகிறார் ஆனாலும் ஏழைகள் சிரிக்கதான் செய்கிறார்கள் இறைவனை எப்படியாவது கண்டுவிடலாமென்றுங்க கவிஞரே,,,

கொட்டிக்கிடக்கும் வார்த்தைகளை அழகாகக் கோர்த்து சரியான வடிவமைப்பில் தருவதே நல்ல கவிதையாக இருக்கும், பூக்களைத் தொடுக்கும் பெண்களுக்கு இதை சொல்லிக்கொடுக்கவா வேணும் , அந்த நுணுக்கம் கைக்கூட இன்னும் கொஞ்சம் வாசிப்பு அவசியமாகிறது கவிஞரே, தொடர்ந்து வாசியுங்கள், தொடர்ந்து எழுதுங்கள், தொடர்ந்து புத்தகம் வெளியிடுங்கள், இப்பிரபஞ்சம் நமக்கானது என்றாலும் நமக்கான வரலாற்றை நாம்தான் உருவாக்க வேண்டும், வரலாறு உங்களை பதிவு செய்ய இன்னும் பல புத்தகங்களை எழுதுங்கள் இச்சமூகம் பயனுறட்டும்,

எழுதுங்கள், எழுதுகிறேன், எழுதுவோம்,.

வாழ்த்துக்களோடு,,,,

நாகை ஆசைத்தம்பி
எழுத்தாளர் கோவை

## தமிழ் மொழிப் பற்று கொள் தமிழா!

தமிழ்மொழி பற்று கொள் உன்னை உயர்த்தும்
தமிழ்மொழிக்கு வாழ்நாளை நீட்டிக்கும் ஆற்றலுண்டு!

எந்த மொழியும் கற்றுக்கொள் தமிழ் மீது பற்றுக்கொள்
எந்த மொழியும் நமது தமிழ்மொழிக்கு ஈடாகாது!

ஒழுக்கம் கற்பிக்கும் உயர் தனிச் செம்மொழி
உயர்ந்த பண்பாடு பயிற்றுவிக்கும் பண்டைத் தமிழ்!

தமிழ்மொழிப்பற்று நெஞ்சத்தில் நீங்காது இருந்தால்
தமிழ்க்கொலையை என்றும் நீ அனுமதிக்க மாட்டாய்!

தமிழா நீ பேசுவது தமிழா? காசி ஆனந்தன் வரிகளை
தமிழா நீ நினைத்துப் பார்த்து நீக்கிடு தமிங்கிலம்!

பிறமொழி கலந்து பேசுவதும் எழுதுவதும் குற்றம்
பைந்தமிழைச் சிதைப்பது முறையோ? தகுமோ?

தமிழை தமிழாகப் பேசிட தமிழருக்குத் தெரியவில்லை
தமிழர் தவிர மற்றவர் தாய்மொழிப் பற்றுடன் உள்ளனர்

மலையாளியும் மலையாளியும் மலையாளத்தில் பேசுகின்றான்
மடையன் தமிழன் தான் ஆங்கிலத்தில் பேசுகின்றான்

ஆங்கிலத்தில் பேசுவது பெருமையென்று கருதுகின்றான்
ஆங்கிலத்திற்கும் மூத்த மொழி தமிழ் உணர மறுக்கிறான்!

உலகமொழி ஆங்கிலம் அல்ல தமிழ் என்பதை உணர்
உலகம் முழுவதும் ஒலிக்கும் மொழி தமிழ் உணர்!

வைரக்கல்லை வெறுங்கல் என்பது சரியா?
வளமான தமிழை மதிக்காமல் இருப்பது முறையா?

கூழாங்கல்லை வைரமென்று உரைப்பது பொய்யே
கூறுகெட்டதனமாக வடமொழியைக் கொண்டாடுவது பிழையே!

ஆங்கிலம் உள்பட அனைத்து மொழிகளுக்கும் சொற்களை
அள்ளி வழங்கிய ஒரே மொழி ஒப்பற்ற தமிழ்!

மொழி ஞாயிறு தேவநேயப் பாவாணர் சொன்ன ஆய்வை
மொழி ஆய்வாளர்கள் முன்மொழிகின்றனர் முதல்மொழி தமிழ்!

அமெரிக்காவின் ஆய்வாளர் உரைக்கின்றார் உணருங்கள்

அனைத்து மொழிகளுக்கும் முதல்மொழி
அன்னைத் தமிழ்மொழி!

அயலவர் உணர்ந்து உள்ளனர் தமிழின்
அருமையை அருமைத்தமிழா! தமிழ்மொழி ப்பற்று
கொள் உயர்வாய் நீ!

கவிஞர் இரா. இரவி.




## ஐந்தா.? ஆறா..?

காட்டு விலங்குகள்
காட்டிலே இருக்கட்டும்!
வீட்டு விலங்குகள்..
வீட்டிலே இருக்கட்டும்!

காட்டுக்கும் நாட்டுக்கும்
ஏனிந்த அலைச்சலோ?
வீட்டு விலங்குக்குள்
எதற்காகப் புகைச்சலோ

வீட்டிலே நாய் வளர்ப்பார்
நாய் போலவும் குரைப்பார்!
அண்டை வீட்டாரைக்
கண்டதுமே முறைப்பார்!

குட்டிப் பூனைகளை
குழந்தையென வளர்ப்பார்!
குடுப்ப உறவுகளை
எதிரிகளாய் நினைப்பார்!

ஆட்டை முன் கட்டி..
தழை இலைகள் கொடுப்பார்!
போட்டப் புழுக்கையென
பொறாமையில் தகிப்பார்.!

பசுமாட்டைக் கட்டிவத்து
பால்கறந்து குடிப்பார்!
திசைமாறி சண்டையிட்டு
தினம்பகையை வளர்ப்பார்!

எருமை மாடு காளை மாடு
இவர்களிடை உண்டு!
முட்டி மோதி தெருச்சண்டை
போடுவதும் உண்டு!

கோழி முட்டை மனசு..
குத்தித் திங்கும் பவிசு..
ஊழிக் காலம் முதலே
மனிதனுக்கும் இருக்கு!

கூண்டுக்கிளியின் தவிப்பு..
கோவில் புறாவின்
இருப்பு.. தோண்டும்
பெருச்சாலி மனிதனுக்குள்
உண்டு!

வீட்டு விலங்கு யாரு?
சிந்தித்து நீ பாரு.!
ஐந்தா.. ஆறா.. உயர்ந்தது
யாரு.. பதிலைக் கூறு!

**வே.கல்யாண்குமார்**



## பிப்ரவரி - 14

காதலி பெயரை நெஞ்சில்
பச்சை குத்திக் கொள்வதும்!

காதலி கையில் இருந்து
விழுந்த ஒற்றை
ரூபாய் நாணயத்தை
பத்திரப்படுத்திக்கொள்வதும்!

அவள் கூந்தலில் இருந்து
விழுந்த ஒற்றை ரோஜாவை
காத்து வைப்பதும் !

மாறிக்கொண்டே தான்
இருக்கிறது
பலருடைய
காதலிலும்....
ஒவ்வொரு
பிப்ரவரி
பதினான்கிலும்!



**எம்.பி. தினேஷ்.**
கோவை



## பிப்ரவரி 14

உன்னை யோசிக்கவும்
உன்னை நேசிக்கவும்
உன்னை வாசிக்கவும்
உன்னை யாசிக்கவும்..

பிறவிகள் ஏழு போதாது..
உறவுகள் உன்போல்
வேறேது..

உன்னை மீண்டும் மீண்டும்
எனக்குள் உயிர்ப்பித்தபடி
யிருக்கிறது என்னில்
வேர்விட்ட உன் விழுதுகள்..

உன் கனவுகள் கலையாதபடி
மெல்லிசையாய்
வருடிச்செல்கிறது
எனக்குள் வழக்கம்போல்
இந்த பிப்ரவரி 14..!

**ம.முத்துக்குமார்**
வே.காளியாபுரம்

## ஹைக்கூ

1.மாற்றுத்
திறனாளியானது.
பூக்களும் காம்பு
ஒடிந்து.

2.உழைத்து



உழைத்து தேய்ந்து
போனது ஆயுள் ரேகை.
3.கண் இல்லாதவருக்கு.
கண்ணாக உதவியது
புல்லாங்குழல்

**ஜயந்தி சிவக்குமார்**
திருச்சி.



## இளமை-முதுமை

காதல் அழகால்
மோகத்தால் வேகத்தால்
வருவதே – இளமை காதல் .

அழகின் அனுபவம்
ரசித்த ரசனை முத்தான
வாழ்க்கை வளர்கிறதே –
முதுமை காதல்!

நிரந்தரமான நிலையான
நிறைந்த காதல்–முதுமை
காதல்!

தள்ளாட்டம் வந்தாலும்
வெள்ளோட்ட காதல்!

நரை வந்தாலும்
கறையற்ற காதல்!

காலங்கள் கடந்தாலும்
கலையாத காதல் –முதுமை
காதல்!

பல் போனாலும் பாசம் போகா
பொறுப்பு காதல்!

முத்தான காதல்
முறிவில்லா காதல்
முத்திரை பதித்த காதல்
முதுமை காதல்!

கண்ணியமான கட்டுப்பாடான
கலப்படமற்ற – காதல்

புனிதமான போற்றுதலான
புதையல் காதலே
முதுமை காதல்!

கண்கள் நோக்கா
மனது நோக்கும்
மானசீக காதல்!

முதுமை காதலுக்கோர்
முதற் வணக்கத்தை
முழு மனதோடு
சொல்வோம்!போற்றுவோம்!!
வணங்குவோம்!!!



**பா.கலைமகள்,**
விழுப்புரம்.

## சொல்வது தெளிந்துசொல்!

நேரிசை ஆசிரியப்பா.

வாழ்வும் தாழ்வும்
வளமிகு சொல்லிலே
சூழ்நிலை அறிந்து
சொல்லுக சொல்லை!

ஏற்றம் இறக்கம்
எழிலாம் சொல்லிலே
போற்றும் வண்ணம்
பொலிவாய்ச் சொல்லுக!

நல்ல சொல்லே
நல்லறம் ஆகும்
சொல்லும் சொல்லைத்
தெளிந்தே சொல்லுக!

சொல்லும் சொல்லைச்
சுவையாய்ச் சொல்லுக
கொல்லும் சொல்லே
கூடவே கூடா!

ஒருசொல் கொல்லும்
ஒருசொல் வெல்லும்
அருமைச் சொல்லே
அழகுச் சொல்லாம்!

விரும்பும் சொல்லை
விரும்பிக் கரும்பாய்ச்
சொல்லுக கனிவு ததும்பவே!

**முனைவர்**
**இராம.வேதநாயகம்.**

பேருந்தில் பணிக்காக
பயணிக்கும்போது
பத்துநிமிட தூரத்தை
கடக்கவே சாப்பாட்டுப்பையை
உட்கார்ந்து இருக்கும்
சக பயணியிடம்
கொடுத்துவிட்டு
பாட்டுக்கேட்டுக்கொண்டே
பரவசமாய் பயணிக்கிறோம்,

பத்துமாதம் இறக்கி வைக்க
முடியாத சுமையை
சுகமாய் நினைத்தப்படி
சுமந்துக்கொண்டு உதிரத்தை
உணவாக்கி கொடுக்கும்
பெண்மையை
என்னவென்பது,,,

பெண்ணின் மறுப்பெயர்தான்
பிரம்மனோ,,,,?!

**நாகை ஆசைத்தம்பி**
கோவை



## நேசிக்க மறந்த நேரம்

இதயத்தில் விழுந்த
மழைத்துளியை.

இரு விழியை நனைக்கும்
பனித்துளியை.

மலை முகடுகளின்
நுட்பத்தை.

மாலை நேரத்து, வெப்பத்தை.

இலைகளோடு
இணைக்கும் காற்றே.

இளையோடி வரும் ஊற்றை.
அற்புதங்கள் படைத்தான்
ஆண்டவன்.

பொற்பாதங்களில்
சமர்பித்தான் மாயவன்.

மானுடம்,மறந்து மாண்டு
போகுது.

இயற்கையை நேசிக்க
நேரமின்றி,கடந்து போகுது.

பிழைகள் இன்றி,
பிரபஞ்சத்தை நேசிக்க பழகு.

பிரபஞ்சத்தை நேசித்து
மறைந்தால்
நீ தான்
மனிதனின்
அழகு.



**வீ.கருப்பையா**
**பாவை**
கட்டிக்குளம்



## காதலர்தினம்

சொர்க்கம் சுகமில்லை..
அமுதம் சுவையில்லை..

அலைகடல் ஓசையில்லை..
மலரொன்றும் வாசமில்லை..

உன்னோடு ஒப்பிடுவதற்கு
எதுவுமில்லை.. பிரம்மனை
மயக்கிய கனவு நீ..

கம்பனை இயக்கிய
கவிதை நீ.. சற்று
கலையாதிருக்கட்டும் முகில்..

உன்னைக்கண்டதும்
முகம்வாடக்கூடும் நிலா..

உலகம் உருண்டையென்று
பொய்யுரைக்கிறவர்கள்
உன் புகைப்படம்
அறியாதவராயிருக்கலாம்
ஒருவேளை..



இரவின்
விழிம்புவரை
விடியலை
வெறுக்கிறது
நீ
உலாப்போகும்
கனவுகள்..

காதலர் தினமென்று
அறிவிக்கப்படுகிறது
உனக்கான என்கவிதை
பிறந்த தினமொன்று..!

**ம.முத்துக்குமார்**
வே.காளியாபுரம்



## மௌன மொழியில் பேசினாயே

முத்தாரமாய் எனக்கு
முத்தாய் எனக்கு
முதல்வனாய் எனக்கு
கிட்டினாயே!

முதல் பார்வை
மௌனமாய் நோக்கி
முகத்தை ஏறெடுத்தாய்
நாணம் பரவி நரம்பெல்லாம்
ஓடி சிவந்ததே என்
சுந்தர முகம்!

மௌனம் எனக்கும்
மீண்டும்...

பவுர்ணமி ஒளியாய்
பகலில் நீ ஒளித்தாலும்
மௌன வார்த்தையே
மீண்டும்...மீண்டும்...

பலரின் பார்வை
பக்கமெல்லாம் இல்லத்தில்!

மொட்டாய் வியர்வை
மலர்ந்தாலும் மௌன
விழியால் உணர்த்தி
துடைத்தாய்!

என்னவனே எனக்கு
அகமெல்லாம் மகிழ்வு
அன்பானவனாய் நீ
கிட்டியமையால்....

முதல் உணவை
முத்தாய் சமைத்தேன்
மௌனமாய் ரசித்தாய்!

படைந்த பிரம்மனுக்கு
பாராட்டுக்கள் பலபல!

கற்புக்கு முதல்வனாய்
கணவனை கொடுத்தாயே
என்றே மௌனமாய்
முறையிட்டேன்...

**பா. கலைமகள்,**
விழுப்புரம்.

எண்ணக் கசடுகள்
வேரறுத்து

தமிழ் வண்ணங்குழைத்து
பாட்டிசைத்து

திண்ணமாய்
நின்னருள் கிட்டிட

அன்னமும் பாலும்
அமுதமென படைத்து

விண்ணகத்தாரும்
போற்றி மகிழ

உன்னைத் துதித்து
இசைத்துப் பாட

என்னை வழிநடத்து
என்னப்பனே

எதுகை மோனையுடன்
கவிபுனைந்து

அகமும் புறமும் மகிழ்ந்து
திளைத்து

அழகன் முருகன்
உனைப் பார்த்து

கன்னம் நிறைக்
கண்ணீரால் நின்
கால்களில்
வீழ்ந்துப்
பணிந்திடவே!



**வி.பிரபாவதி**
மடிப்பாக்கம்



## மனைவியெனும் தேவதை

கனவிடைத்தூரலாய் கசிந்து
இரவிடைச்சாரலாய் நனைந்து
உயிரிடைத்தூவலாய்
பொழிந்து துயரிடைமடியாய்
மலர்ந்து உறவிடை உலகாய்
விரிந்து உணர்விடை
அமுதாய் சுரந்து
இதயம்வரை என்னோடு
இணைந்து இறுதிவரை
துணையாய் மலர்ந்தாய்..

மண்ணகம் முழுதும்
உன்னோடு.. விண்ணகம்கூட
உன்னோடு..

அகலாத நிலை ஒன்று
உருவாக்கி..இறைவா..

என் தேவதையைவிட்டு
விலகாத வரமொன்று
தரவேண்டும்..!

**ம.முத்துக்குமார்**
வே.காளியாபுரம்



## மீண்டும் வானொலி கேட்போம்!

நேரிசை வெண்பா!

ஒலிபரப்புச்சேவையை
ஒண்மையா யெண்ணிக்

கலையாகக்காணலுடன்
கேட்டல். பலவுமே

வானொலியால் வண்ணமே
நேருமே நாளுமே

தேனொலியாய்க்
கேட்பமே தேர்ந்து!

பொழுதுபோக்கு மற்றும்
பொலிவான செய்தி

அழகுத்திரையிசை
அன்பாய்..எழிலுடன்

கூடிய நாடகங்கள்
கூர்மையுறுப்பட்டிமன்றம்

நாடியே கேட்காலாம் நாடு!

**முனைவர்**
**இராம.வேதநாயகம்**
திருவண்ணாமலை.

## "தீதும் நன்று பிறர் தர வாரா"

கணியன் பூங்குன்றனார்

நன்மையும் தீமையும் நமது
செயல்களால் விளைகின்றன !

அவை புறக்காரணிகளால்
வருவதில்லை !

நமக்கு ஏற்படும் நன்மையும்
தீமையும் பிறரால்
உண்டாவதில்லை !

அவை நம்முடைய
எண்ணங்கள் மற்றும்
செயல்களில் பிரதிபலிப்பே !

நாம் வாழ்க்கையில் நடக்கும்
இன்ப துன்பங்களுக்கு
மற்றவர்களை குறை
சொல்வது தவறு !

நம்முடைய வளர்ச்சிக்கும்
வீழ்ச்சிக்கும் நாமே பொறுப்பு !

"யாதும் ஊரே யாவரும்
கேளிர் "என்ற உலகளாவிய
சகோதரத்துவத்தை இப்பாடல்
இன்பம் வரும் போது துள்ளி
குதிக்காமலும் துன்பம்
வரும்போது துவண்டு
போகாமலும் இருக்க
வேண்டும் !

ஆற்றில் மிதக்கும் தெப்பம்
நீரோட்டத்தின் வழியே
செல்வது போல வாழ்க்கை
பயணம் இயற்கை நியதிப்படி
நகருகிறது !

அதை உணர்ந்தால்
எவரையும்
புகழவோ இகழவோ
வேண்டியதில்லை!

ஆறு ஒடுவது
போலத்தான் நம்
வாழ்க்கையும் !

அது இயற்கையின் நியதிப்படி
நடக்கிறது !

இன்பமும் துன்பமும்
வெளியிலிருந்து திணிக்க
படுபவை அல்ல !

அவை உனது முந்தைய
முடிவுகளின் அறுவடை !

நம் உயர்வுக்கும் தாழ்வுக்கும்
நாமே பொறுப்பு !

புறச் சூழலை விட நாம்
அக மனமே நம் வாழ்வை
தீர்மானிக்கிறது !

எளியோரை இகழாமலும்
அனைவரையும் சமமாக
மதிக்க வேண்டும் !

நாம் என்ன விதைக்கிறோமோ
அதையே அறுவடை
செய்கிறோம்!

சுய ஒழுக்கத்துடன் வாழ
வேண்டும் என்பதை இது
உணர்த்துகிறது!

சந்தன மரம் வளர வளர தான்
மணம் கொடுக்கும்!

நாற்றத்தை கொடுப்பதில்லை!

நறுமணத்தைதான்
கொடுக்கும்!

இன்பத்திற்கு பிறரையும்
துன்பத்திற்கு இறைவனையும்
பழிப்பதை தவிர்க்க
வேண்டும்!

எண்ணம் , சொல்,
செயல் இவைகளில்
சரியாக இருப்போம்!



**பெ.திருமுகம்**
மணமேல்குடி




## பிப்ரவரி 14

ரோஜாக்களை
சுமந்துகொண்டிருக்கிறது
என் கவிதைகள்..

கனவெங்கும்
விடியலைநோக்கி
காத்திருக்க..

உன் வீட்டு வாசல்
எழுதிக்கொண்டிருக்கிது
என் இருப்பை..

ஜன்னல் திறந்து காற்றை
கைதுசெய்..

அறைகளுக்குள்
படிந்துகிடக்கிறது
இரவெங்கும் உனக்கானதென்
கனவுகள்..!

**ம.முத்துக்குமார்**
வே.காளியாபுரம்

## சந்தோஷம்

உன் முன் எவ்வளவு பேர் இருந்தாலும்
நிதானமாக பயமில்லாமல் பேசக்கற்றுக்கொள்!

கீழே விழுந்து விட்டாயா நீயே எழுந்து நிற்க கற்றுக்கொள்
யாரையும் எதிர்பார்க்காதே !

தெரியாமல் தவறு செய்து விட்டாயா
ஒத்துக்கொள்ளும் தைரியத்தை வளர்த்துக்கொள் !

அடுத்தவர்கள் உன்னை விமர்சிக்கிறார்களா அப்படியானால் நீ
சாதித்துக் கொண்டிருக்கறாய் என்று அர்த்தம் !

யாரையும் ஏமாற்ற முயற்சிக்காதே
உன் வேலையை மட்டும் சிறப்பாய் செய்துவிடு!

உன்னை நம்பி யாரேனும் வந்தார்களா
அவர்களுக்கு வழிகாட்டியாக இரு !

கடவுளால் கொடுக்கப்பட்ட திறமையை பயன்படுத்திக் கொள்
மனிதரால் கொடுக்கப்படும் புகழை நன்றியுடன் ஏற்றுக்கொள்!

நம்பிக்கை துரோகத்தை ஒரு போதும் செய்யாதே
நமக்கு நாமே கொடுக்கும் அகம்பாவத்தை விட்டு விடு!



கோபுரத்தில் இருந்தாலும் குடிசையில்
இருந்தாலும் உன் மனதை பொறுத்து தான் உன்
சந்தோஷம் அமையும்!

பிறரை வாழ விடு நீயும் வாழ்ந்து விடு !
சந்தோஷம் என்றுமே உன்கையில் வென்றுவிடு!

**ம. இந்திராணி** , திருச்சி

## கெடுமதியாளர்

நோகாமல் சொத்து
குவிப்பான் அபாயகர ஊழல்
செய்திடுவான்

அயலானை நம்பி இறங்காதே
சிக்கிச் சின்னா பின்னமாவாய்

உடம்பை வில்லாய்
வளைத்திடுஓடியாடி
உழைத்துக்
களைத்திடு

ஆரோக்கியமாய்
வாழ்ந்திடுவாய்
சுவரின்றி சித்திரம் அமையாது

விவேகமாய் யோசித்து
முன்னேறு விநோதமான
கருத்தை முன்வை

சமூகத்தை ஈர்க்கும்
நன்னெறியை
பழக்கமாக்கி வாடிக்கை
ஆக்கிடு
உச்சத்தில் நிற்பது
நிச்சயம்



**பி. பழனி,** சென்னை.

முனீஸ்வரர் துணை
RG
கங்கோத்ரி எண்டர்பிரைசஸ்-ன்
BI NEW TEACHERS COLONY
பொன்னேரி அருகில் பழவேற்காட்டில்
RERA APPROVED
மனைகள் வழங்கப்படுகிறது.

GANGOTHARI ENTERPRISES
RG Rajendra Prasath
Proprietor
கங்கோதரி எண்டர்பிரைசஸ்
Buying & Selling
வீடு, மனை, வாங்க, விற்க இங்கு அணுகவும்.
97103 48377, 89254 08203
gangotharienterprises2018@gmail.com
No. 18, Dr. Radhakrishna Salai, Vivekananda Nagar, Kodungaiyur, Chennai-600 118.

Sri Manjal Mart
தரமான ஆன்மீக பூஜை பொருள்களை குறைந்த விலையில் நிறைவாக வாங்க
20% OFF
www.manjalmart.com
7789951009
order@manjalmart.com

ADVERTISE WITH US!
CONTACT US
9337501889

THINKING to BUY / SELL / RENT a PROPERTY
New / Resale... Residential / Commercial...
*Plots
*Flats
*House
*Villa
*Bungalows
*Farm Land
*Ware Houses
*Factory Sites
*Sheds
JOINT VENTURES INVITED
MK REAL ESTATE
Tell me your Budget We Show Your Home
Call:7871617005

Just499
Pick Any Website
Just ₹499 Only!
Affordable Website Solutions for Every Business
Matrimonial Website
Real Estate Website
E. Commerce Website
Restaurant Website
Shopping Website
News Website
MLM Binary Website
MLM Level Website
MLM Gaming Website
Call: 7789951009 | WhatsApp: 7789951009

WE'RE HIRING
TELECALLERS
SALARY STARTING FROM
RS.20000/- ONWARDS
+91 7871617005

Vilambaram
www.vilambaram.com
WE ARE Digital Marketing Agency
We are the
LEADS GENERATION FACTORY
For Your
REAL ESTATE BUSINESS
* Business Lead
* 100% Verified Lead
* Targeted Lead
GROW YOUR BUSINESS WITH US
for more details
+91 7789941009
+91 9337501889
vilambarampage@gmail.com
80 % OFF SPECIAL OFFER DISCOUNT
90 DAYS MONEY BACK GUARANTEE

just499
REAL ESTATE SOFTWARE
We Provide Complete Real Estate Software Solutions
ONLY Rs. 499
Website: just499.com
Phone: 7789951009
WhatsApp: 7789951009
Email: orderjust499@gmail.com

Just499
JOB WEBSITE SOFTWARE
We Provide Complete Job Portal Software Solution
ONLY Rs. 499
Website: just499.com
Phone: 7789951009
WhatsApp: 7789951009
Email: orderjust499@gmail.com

GREAT OPPORTUNITY
AT
ALL OVER TAMILNADU
Marketing Executive
SALARY Rs.15000/-
+ Incentive
+ Petrol Allowance
விளம்பரம்
vilambarampage@gmail.com
7789941009

Telecaller Job
Apply Today
Mobile Calling !!!!
Rs 250-Rs500 per day
Work From Home Jobs
Ananda Bhaskar
Rs 8000 - Rs 15000 per month
9337501889
7789941009

WANTED
experienced candidates in
AUTO CAD
Chennai / Coimbatore
minimum 3 years experience
Cell: 9363084990

ANY MLM PLAN
INR PLAN
RS.20000
CRYPTO PLAN
RS.30000
NO HIDDEN OR EXTRA CHARGES
SOURCE CODE AVAILABLE
CALL 9853719337 / 7436914247

WANTED
MARKETING HEAD
REAL ESTATE
Fixed Salary Rs.25000/-
& Above + INCENTIVE
(Monthly up to - 1.5 Lakhs)
Age: 25 to 40 Experienced Only
Office @ Anna Nagar
9790021367

WANTED
COLLECTION EXECUTIVES
TELECALLERS
FOR MNC BANK.
Sal.23,000/-
161, Bells Road, Chennai - 05.
Ct.: 98410 38488 / 93848 17349

ஐஸ் கடை
வேலைக்கு ஆட்கள் தேவை (பெண்கள்)
10.00 - 7.00 மணி வரை
சௌகார்பேட்டை
9829571998


999 SITE
ARE YOU
LOOKING FOR JOB
JOB
Websites
CONTACT/WHATSAPP-7789951009


உலகளவில் தமிழர்கள் எதிர்பார்க்கும் ஒரே தரமான நம்பர் 1 இ பேப்பர்
தமிழ்நாடு இ பேப்பர்.காம்
www.tamilnaduepaper.com
உள்ளூர் செய்திகள் முதல் வெளிநாட்டு செய்திகள் வரை துல்லியமாக தரும் ஒரே நாளிதழ்
ஆனந்த பாஸ்கர்
www.anandabhaskar.com
தினம் தோறும் உள்ளூர், உலக செய்திகள் வரை தரும் தரமான நாளிதழ்
பேப்பர்பாய்
www.paperboy.biz


ADVERTISE WITH US
CONTACT US
9438610756


Call- 9438610756, 9337501889
News Portal Website Development
Only
Rs. 499/-
Just 499
www.just499.com


சம்பிரதாய தாம்பூல பாக்கு!
பூஜைக்கு உகந்த பாக்கு
AJANTHA
TRADITIONAL THAMBULA BETEL NUTS
அஜந்தா பாக்கு
அனைவருக்கும் தீபாவளி நல்வாழ்த்துக்கள்!
அஜந்தா பாக்குடன் உங்கள் தீபாவளியை கொண்டாடுங்கள்!
RAVIKUMAR AND COMPANY


WE'RE HIRING!
A Passionate Content Creator
94386 10756


CREATE YOUR PROFILE WITH US
& SCALE YOUR CAREER
SEND YOUR CV AT -
MKPLACEMENT@GMAIL.COM
FIND AMAZING JOB OPPORTUNITIES WITH US!!


6380139263
9952007563
9940010279
GERMANSILVER.RR
RATNARAJSILVER.COM
RAJ&RAJ
GERMANSILVER /
POOJA ITEMS RETURNGIFTS/
WEDDING GIFTS /HOME NEEDS


S.R
Call Drivers
Travels
24 Hours
Man Power & All Vehicle Available
Prop. S.SRIRAM
Contact: 95513 81576 / 86086 22056
True Work is Our Capital
No.89/49,E.H.Road,Cornation Nagar,K.Pet,Ch-21.


ஸ்ரீ கிருஷ்ணர்
உபாசகர் பரிகார புகழ்
ஆன்மீக செம்மல் த.பிரகாஷ்
CONTACT US
9597887308, 63804 53463
EXPERT IN VEDIC ASTROLOGY
PREDICTION & SOLUTIONS
MONEY
LOVE
HEALTH
FAMILY
BUSINESS
CAREER
MARRIAGE


ST COURIER
The People's Choice
ISO 9001:2008 Certifed
DOMESTIC- INTERNATIONAL
Old No. 1/2, New No.3, Kesavan St.,
Tondiarpet, Chennai-600081.
Cell: 9176130601


Get Free Jobs Alert on Your
WhatsApp
Register Yourself on our
8122664699
WhatsApp Your Name, Age & Address on Above Number
Josh Jobs Team Give u Daily Update of Govt. as Well as Private Jobs


Euro Kids
Pre-School
Right Start, Flying Start!
Tondiarpet
9940661625
Introducing
HEUREKA
based on Harvard's Project Zero
Admissions Open
For AY 25-26
EuroTots | PlayGroup | Nursery | EuroJunior | EuroSenior
23+ Years of Experience
TUV Nord Safety Certified
1,600+ Pre-schools
No. 19/20, Kummalamman Koil Street, Tondiarpet, Chennai - 600 081


FINDING THE PERFECT HOUSE YOU CAN CALL HOME
PREMA ENTERPRISES
DO YOU WANT TO
BUY
OR
SELL
PROPERTY OR LAND?
+91 9884417843


ARG CONSTRUCTIONS
We Build Your
DREAM
HOME
Recently We Have Completed Over 50+ Big Projects
SERVICES WE OFFER
Residential Construction
Commercial Construction
Customer Satisfaction
Contact Us
9710348377


Just 499
Visite Our Website
JUST499.COM
All type Of your Website/App need at one place
Small Business website
E - commerce Website
Corporate Website
Enterprise website
Mobile App Development
contact us at
9337501889


just499®
MLM SOFTWARE
All Types of MLM Software Solutions Available
Binary
Unilevel
Matrix
Board
Generation
ROI / Investment
ONLY
Rs. 499
Website:
just499.com
Phone/WhatsApp:
7789951009
Email:
orderjust499@gmail.com

**ஆடிட்டிங் சர்வீஸ்**
GST, வருமானவரி (I.T)
குறைந்த செலவில்
தாக்கல் செய்ய
தொடர்பு கொள்ளவும்
73582 73545 / 94448 13400

**அடகு நகை மீட்டு மறு அடகு வைத்து**
G-Rs. 10000/- கடன் வழங்கப்படும்
அடகு நகை மீட்டு மார்க்கெட் விலையை விட அதிக விலைக்கு வாங்கப்படும்.
KRISH FINCORP
8838358029, 9840134150

**Landbazzar**
Wealth Creators
பகுதி நேர வேலைவாய்ப்பு
PART TIME JOB
SALARY
20,000/- Rs
NO SALES TARGET
- Retired person's / VRS
- Self Employee / Busniess Man
- Extra Income Needers / House wifes

5 APPOINTMENTS ONLY
97900 21367

**ஸ்ரீ கிருஷ்ணர் உபாசகர் பரிகார புகழ்**
ஆன்மீக செம்மல் த.பிரகாஷ்
CONTACT US
9597887308, 63804 53463
EXPERT IN VEDIC ASTROLOGY
- PREDICTION & SOLUTIONS
- MONEY
- LOVE
- HEALTH
- FAMILY
- BUSINESS
- CAREER
- MARRIAGE

**Low Cost Matrimony Website**
999 SITE

MATRIMONY
WEBSITE
RS. 999/-
Call/Whatsapp - +91 7789951009

**WANTED**
CNC & VMC OPERATOR, SETTER
LINE INSPECTOR
SHIFT SUPERVISOR
HI-TEK ENGINEERING INDUSTRIES
Survey No. 472/2A, SPH Road, Sengadu
Ayakolathur, Thiruvallur. - 602 105
99419 11817 / 99416 98979

**WANTED**
- MARKETING MANAGER
- ACCOUNTANT
- CNC LATHE MILLING OPERATOR & PROGRAMMER
- PLASMA & BENDING OPERATOR
- LATHE MILLING MACHINERY OPERATOR

AMBATTUR TAPSTIA,KATTUR
Contact: 95660 61750

**Looking for CCTV Network ENGINEERS & TECHNICIANS for a 2000 plus Camera - CCTV Project across Tamilnadu and Kerala.**
Apply with your Biodata to
8086660679
via whatsapp or Mail id:
jobs.groupdivine@gmail.com
We are also looking for SUB-CONTRACTORS
Send details to 8086660679
via whatsapp or Mail id:
info@groupdivine.in

- SECURITY - ESCORTS
- SECURITY SUPERVISOR
- SECURITY ASSISTANTS

In & around Chennai - Mamandur
Salary Rs. 19000/- onwards
Qual: Min. 10th / Age below 50 yrs.
Young, Energetic, Experienced
044-26452323/ 9884966085
SENTRYFORCE SECURITAS PVT LTD
No.24/27, Jade Terrace, Balfour Road Kilpauk, Ch - 10.

**PERAMBUR / MOOLAIKADI THORAIPAKKAM**
SG (Male)
Qul: 10th, Age blw 50yrs 8Hrs, Take Home Salary Rs. 18,500 (26 Days) with 4 Off. + Food.
Ct: 9884991302 / 9094783384
9884991728
Wanted FIELD OFFICER
மூலக்கடை. 7010477903

**PHARMACIST REQUIRED**
Diploma in Pharmacy with Tamilnadu Pharmacy Council Registration Certificate with 3 yrs exp.
Maya Nursing Home
Ashoknagar, Chennai
Call: 98413 83989

**ஆட்கள் தேவை**
மருத்துவமனையில் பராமரிப்பு வேலைக்கு
40 வயதுக்குள் உள்ளவர்கள் அணுகவும்
RK சிறப்பு மருத்துவமனை
93457 81110

அசோக்நகரில் உள்ள
**மாயா நர்சிங் ஹோம்க்கு**
அருகில் வசிக்கும்
**வார்டு பாய் ஆயாக்கள் தேவை**
சம்பளம் ரூ.18,000
ஆண் / பெண் • வயது: 35க்குள்
9361390688 / 9841383989

**MOUNT HOSPITAL**
@ Adambakkam & Thoraipakkam Req.
- HOSPITAL ADMIN
  with Insurance Experiance
- STAFF NURSES
- RECEPTIONIST
- LAB TECHNICIAN
- PHARMACIST
- DRIVERS

730 530 5231

அசோக்நகரில் உள்ள
**மாயா நர்சிங் ஹோம்க்கு**
அருகில் வசிக்கும்
**வார்டு பாய் ஆயாக்கள் தேவை**
சம்பளம் ரூ.18,000
ஆண் / பெண் • வயது: 35க்குள்
9361390688 / 9841383989

**POWERCARE SOLUTIONS PVT. LTD**
(Manufacturer of Diesel Generator)
Requires
BDM, AREA, SALES MGR
(Exp. min 3yrs.Good Sal + Inc)
Fresh/ Exp ITI/ DIP/ ENGG
(MECH, EEE)
Ct: 89259 93101, 91766 85440

கேரளாவில் உள்ள
பிரபல
ஹோட்டலுக்கு
அனுபவமுள்ள
**தோசை மாஸ்டர் & டீ மாஸ்டர் தேவை**
உணவு, தங்குமிடம் இலவசம்
விருப்பமுள்ளவர்கள்
ஆதார் கார்டு / அடையாள சான்றுடன் நேரில் வரவும்
8711 808080

சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம் மாவட்டங்களில்
**பூச்சி மருந்து அடிக்க ஆட்கள் தேவை.**
உணவு, தங்குமிடம் மற்றும் ESI, PF உண்டு
சம்பளம் அனுபவத்திற்கேற்ப
பள்ளி சான்றிதழ், 2 போட்டோ, ஆதார் எடுத்துவரவும்,
சிட்டி பெஸ்ட் கன்ட்ரோல் சர்வீஸஸ்
2/7, வேலாயுதம் காலனி, சாலிகிராமம்
Ct: 9994843057 / 9384725836

**SHANMUGA PRIYA**
TOURS & TRAVELS
Porur, Chennai
நிறுவனத்திற்கு அனுபவமுள்ள
TELE CALLERS
பெண்கள் தேவை
Salary: 15,000/- TO 20,000/-
99412 44226

**ST COURIER®**
The People's Choice
Domestic-International-Cargo-E commerce
சென்னை போரூரில் பணிபுரிய கீழ்கண்டவர்கள் தேவை
- நைட் / மார்னிங் - டியூட்டி
  Full / Part Time ஆட்கள் தேவை. (ஸ்கேனிங், லோடிங், அன்லோடிங்)
- வேன் டெலிவரி ஆட்கள்
  (குறிப்பு: பைக் தேவையில்லை)

தகுதி: 10 வது, 12 வது, டிகிரி.
சம்பளம்: Upto Rs. 20,000 + Perks
Ct: 99406 11849

**Aruvi SUPERMART**
Shop Smart, Shop Smiles.
ACCOUNTANT
STOCK INVENTORY
DELIVERY BOY
Min 3 yrs Experience
SF No. 138/9A2, Kundrathur Main Rd, Mangadu, Chennai-122.
9087411008, 9087982000

**Breaking News Card.com**
www.breakingnewscard.com
BREAKING NEWS
We Create Professional
Breaking News Cards
Daily 4 Cards Plus
get News Portal FREE
Call: 7789951009
₹999 ONLY



# பல்சுவை களஞ்சியம்



# மீம்ஸ்









## முகத்தில் உள்ள கரும்புள்ளிகள் மறைய..




முகப்பரு வந்தவுடன் அதை ஆரம்பத்திலேயே கிள்ளி எறிய வேண்டும் என்ற எண்ணத்துடன் பருவை கிள்ளி விடுகின்றனர். பரு சிதைந்து நாளடைவில் அதுவே கரும்புள்ளிகளாக மாறுகின்றது.அரிசி மாவை தண்ணீர் விட்டு கலக்கி முகத்தில் பூசி சிறிது நேரம் கழித்து கழுவி வர கரும்புள்ளிகள் மறையும். ரோஜா இதழ் மற்றும் பாதாம் பருப்பை அரைத்து முகத்தில் தேய்த்து, சிறிது நேரம் கழித்து கழுவி வர, கரும்புள்ளிகள் மறையும்.வெள்ளரிச்சாறு, புதினாச்சாறு, எலுமிச்சை பழச்சாறு ஆகியவைகளை சம அளவில் கலந்து முகத்திலுள்ள கரும்புள்ளிகளின் மீது தேய்த்து வந்தால் கரும்புள்ளிகள் போய்விடும்.ஜாதிக்காயை அரைத்து முகத்தில் தடவி 30 நிமிடம் கழித்து கழுவி வர கரும்புள்ளிகள் மறையும். இரண்டு டேபிள் ஸ்பூன் தயிரை, ஒரு டேபிள் ஸ்பூன் எலுமிச்சை சாற்றுடன் கலந்து, தடவி வந்தால், கரும்புள்ளிகள் போய்விடும். உருளைக்கிழங்கை வெட்டி கரும்புள்ளிகளின் மீது தேய்த்து வர கரும்புள்ளிகள் மறையும். மஞ்சளுடன் கருவேப்பிலை சாறு சேர்த்து முகத்தில் தடவி வர கரும்புள்ளிகள் மறையும்.கற்றாழை ஜெல்லை முகத்தில் நாள்தோறும் தடவி வந்தால் முகத்தில் உள்ள கரும்புள்ளிகள் மறைந்துவிடும். வெந்தயக் கீரையை நன்கு அரைத்து பேஸ்ட் செய்து முகத்தில் தடவி வந்தால், விரைவில் முகத்தில் இருக்கும் கரும்புள்ளிகள் நீங்கிவிடும்.

## எண்ணெய் பசை முகம்... பளிச்சென்று மாற... உங்களுக்கான டிப்ஸ்..!!



தயிர், கடலைமாவு, எலுமிச்சை சாறு ஆகியவற்றை கலந்து முகத்தில் பூசி சிறிதுநேரம் கழித்து கழுவினால் அதிகப்படியாக எண்ணெய் வழிவது குறைந்து முகம் பளபளக்கும்.வெள்ளரிக்காயை தினமும் காலையில் முகத்தில் தேய்த்து வர முகத்தில் அதிகமாக எண்ணெய் வழிவதை தவிர்க்கலாம்.தக்காளி பழச்சாற்றை முகத்தில் தடவி காய்ந்த பின், கழுவினால் எண்ணெய் வழிவது கட்டுப்படும். தக்காளியுடன் வெள்ளரிப்பழம் அல்லது ஓட்ஸ் சேர்த்து அரைத்து முகத்தில் பூசி 20 நிமிடங்கள் கழித்து கழுவலாம்.எண்ணெய் பசை சருமம் உள்ளவர்கள் அடிக்கடி முகம் கழுவ வேண்டும். முகத்தை கழுவ சோப்பிற்கு பதில் கடலைமாவை பயன்படுத்தலாம். இதனால் எண்ணெய் வழிவது குறைவதோடு, முகமும் பளபளப்பாக காட்சியளிக்கும். மோரை முகத்தில் தடவி சிறிது நேரம் கழித்து கழுவினால் எண்ணெய் வழிவது குறையும். சோளமாவுடன் தயிர் மற்றும் எலுமிச்சை சாறு கலந்து முகத்தில் பூசி சிறிது நேரம் கழித்து கழுவினால் முகத்தின் எண்ணெய் பசை நீங்கும்.சிறிது புதினா இலைகளை நீரில் போட்டு நன்கு கொதிக்க விட்டு, அந்நீரை குளிர வைத்து, பின் அதனை காட்டன் துணியைக் பயன்படுத்தி முகத்தைத் துடைக்கலாம். இதுவும் எண்ணெய் பசையைக் கட்டுப்படுத்தும்.ஐஸ் நீர் அல்லது ஐஸ் கட்டிகளைக் கொண்டு முகத்தை சிறிது நேரம் மசாஜ் செய்து வர, முகத்தில் உள்ள அழுக்குகள் நீக்கப்படுவதோடு சருமத்துளைகள் இறுக்கப்பட்டு, எண்ணெய் பசையைக் தடுக்கலாம்.வெள்ளரிச்சாற்றுடன் பால் பவுடர் கலந்து தடவினாலும் எண்ணெய் வழியாமல் முகம் பிரகாசமாக காணப்படும். கரும்புள்ளிகள் நீங்க குப்பைமேனி கீரையை எடுத்து அதனோடு மஞ்சள் சேர்த்து மை போல அரைத்து தேகத்தின் மீது தேய்த்து, சிறிது நேரம் கழித்து குளித்து வர வேண்டும். ஒரு மாதத்திற்கு இப்படி செய்து வந்தால் கரும்புள்ளிகள் மறையும், அழகு கூடும்.

## த்ரெட்டிங் செய்த பிறகு கடைப்பிடிக்க வேண்டிய வழிமுறைகள்..!

பெண்கள் முகத்தில் வளரும் தேவையற்ற முடிகளை நீக்குவதற்கும், தங்களை மேலும், அழகாக்கிக் கொள்ளவும் த்ரெட்டிங் செய்து கொள்வார்கள். சருமத்தில் வளரும் தேவையற்ற முடிகளை நீக்க வேக்சிங் இருந்தாலும், பெரும்பாலான பெண்கள் த்ரெட்டிங்கை தான் மேற்கொள்கிறார்கள். இதற்கு முதற்காரணம் வேக்சிங்கை விட த்ரெட்டிங் செய்வதால் வலி சற்று குறைவாக இருப்பது தான்.மேலும் த்ரெட்டிங் புருவங்களில் மட்டுமின்றி, சிலர் உதட்டிற்கு மேல் மற்றும் நெற்றியிலும் செய்வார்கள். த்ரெட்டிங் செய்த பின் சில விஷயங்களை கண்டிப்பாக பின்பற்ற வேண்டும். அப்போதுதான் த்ரெட்டிங் செய்த இடத்தில் பிம்பிள், புண் வருவதை தடுக்கலாம். இப்போது த்ரெட்டிங் செய்த பின் கடைப்பிடிக்க வேண்டிய சில முக்கியமான வழிமுறைகளைப் பார்க்கலாம். முதலில் த்ரெட்டிங் செய்வதற்கு முன்பாக, முகத்தை நீரினால் நன்கு சுத்தமாக கழுவிக் கொள்ள வேண்டும். குறிப்பாக சுடுநீரைப் பயன்படுத்துவது நல்லது. ஏனெனில் சுடுநீர் சருமத்தில் உள்ள அதிகப்படியான எண்ணெய் பசையை நீக்கிவிடுகிறது. பின்னர் முகத்தை நீரில் கழுவியப் பிறகு, சுத்தமான காட்டன் துணியால் முகத்தை துடைக்காமல், ஒற்றி எடுக்க வேண்டும். ஏனெனில் துடைத்தால், சருமம் பாதிக்கப்படக்கூடும்.பிறகு இயற்கையான டோனரைக் கொண்டு முகத்தைத் துடைக்க வேண்டும். அதிலும் சீமை சாமந்தி டீ அல்லது கற்றாழை ஜெல் கொண்டு துடைத்து, உலர விட வேண்டும். அதன் பிறகு அழகுக்கலை நிபுணரை த்ரெட்டிங் செய்ய அனுமதியுங்கள்.த்ரெட்டிங் செய்து முடித்த பின், மீண்டும் டோனரை தடவி, ஒரு ஐஸ் கட்டியால் த்ரெட்டிங் செய்த இடத்தை ஒத்தடம் கொடுக்க வேண்டும். இதனால் சருமத்துளைகள் மூடி பிம்பிள் வருவது தடுக்கப்படும். மேலும் உங்களுக்கு முகம் கழுவ வேண்டுமென்பது போல் தோன்றினால், ரோஸ் வாட்டரை பயன்படுத்த வேண்டும். இதனால் த்ரெட்டிங் மூலம் ஏற்பட்ட காயங்கள் மற்றும் பிம்பிள் வருவது தடுக்கப்படுகிறது. த்ரெட்டிங் செய்து முடித்த பின் 6 மணிநேரத்திற்கு த்ரெட்டிங் செய்த இடத்தைத் தொடக்கூடாது. அதைப்போல் க்ரீம்களையும் பயன்படுத்தக்கூடாது. அதுமட்டுமின்றி, குறைந்தது 12 மணிநேரத்திற்கு ஸ்கரப் செய்வதை கண்டிப்பாக தவிர்க்க வேண்டும்.

-A.s.Govinda rajan
Kodambakkam, Chennai





## விடுகதை



| | |
|---|---|
| வாயில் இருந்து நூல் போடுவான், மந்திரவாதி இல்லை; கிளைக்கு கிளை தாவுவான் ஆனால் குரங்கு இல்லை; வலை விரித்து பதுங்கி இருப்பான் ஆனால் வேடன் இல்லை அவன் யார்? | சிலந்தி |
| நீளவால் குதிரையின் வால் ஓடஓடக் குறையும் அது என்ன? | தையல் ஊசியும் நூலும் |
| எவர் கையிலும் சிக்காத கல், எங்கும் விற்காத கல் அது என்ன? | விக்கல் |
| கண்ணால் பார்க்கலாம் கையால் பிடிக்கமுடியாது அது என்ன? | நிழல் |
| செய்தி வரும் பின்னே மணி ஓசை வரும் முன்னே அவன் யார்? | தொலைபேசி |
| அள்ள முடியும் ஆனால் கிள்ள முடியாது அது என்ன? | தண்ணீர் |



## ஜோக்ஸ்

காவலர் 1: நமது அரசியார் அரண்மனை வாசலில் வந்து நிற்கிறாங்களே! ஏன்?
காவலர் 2: போர்களத்திலிருந்து நமது அரசர் ஓடி வரும் அந்த கண்கொள்ளா காட்சியை கண்டு ரசிக்கத்தான்.
நாஞ்சில் சு. நாகராஜன்

ஒருவர் : டி. வி. யில் பேட்டி கொடுக்கும் அந்த டாக்டரை போலி என்கிறாயே! ஏன்?



அடுத்தவர்: கொசு கடிச்சாலும் தொப்பிளை சுற்றி மூணு ஊசி போடச் சொல்றாரே!

ஜோக்ஸ் பகுதிக்கு
இளைஞன் : டாக்டர், உங்க கிளினிக்கை அண்ணாந்து பார்த்தா எனக்கு தலை சுத்துகிறது.
டாக்டர் : எதற்கு அண்ணாந்து பார்க்கிறீங்க?
இளைஞன் : உங்க கிளினிக்கின் மூன்றாவது மாடியில்தான் என் லவ்வர் வீடு இருக்குது டாக்டர்.

# வாழ்வுதரும் ஆரோக்கியம்



## 8 மணி நேரம் தூங்கிய பிறகும் சோர்வாக உணர்கிறீர்களா?

தூக்கம் என்பது வெறும் ஓய்வு மட்டுமல்ல, அது உடலின் ஒரு அத்தியாவசிய செயல்முறையாகும். தூக்கத்தை ஓய்வு நேரமாக நாம் நினைக்கிறோம், ஆனால் இந்த நேரத்திலும் கூட, உடல் மிகவும் சுறுசுறுப்பாக இருக்கும். தூக்கத்தின் போது, உடல் ஆற்றலைச் சேமிக்கிறது, செல்களை சரிசெய்கிறது, மூளை நினைவுகளை ஒழுங்கமைக்கிறது. அதனால்தான் தூக்கம் ஆரோக்கியத்திற்கு மிகவும் அவசியம்.

எட்டு மணி நேரம் முழுமையாகத் தூங்கியும், சோர்வாக, தலைச்சுற்றலாக, சோம்பலாக உணர்ந்தால், அது வெறும் தூக்கமின்மை மட்டும் காரணம் இல்லை என்கிறார்கள் மருத்துவர்கள்.

**8 மணி நேரம் தூங்கிய பிறகும் ஏன் சோர்வாக இருக்கிறீர்கள்?**

இன்றைய வேகமான வாழ்க்கையில், தூக்கமின்மை ஒரு பொதுவான பிரச்சனையாகிவிட்டது. ஆனால் ஆச்சரியமான விஷயம் என்னவென்றால், பலர் 8 மணிநேரம் முழுமையாக தூங்கிய பிறகும் காலையில் சோர்வாக உணர்கிறார்கள். கண்கள் திறந்தாலும், மனம் கனமாகவே இருக்கும், உடல் சோம்பலாகவே இருக்கும், நாளின் தொடக்கமே பாரமாகத் தெரிகிறது. பெரும்பாலும் மக்கள் இதை மன அழுத்தம் அல்லது வேலை அழுத்தம் என கருதுகிறார்கள். ஆனால் உண்மையான காரணம் வேறு ஒன்று. இதற்கு மிகப்பெரிய காரணம் தூக்கக் கோளாறு. இதன் பொருள் நீங்கள் இரவில் பல முறை எழுந்தாலும், அதை நீங்கள் உணரவில்லை. இதன் காரணமாக, தூக்கம் முழுமையாகத் தெரிகிறது, ஆனால் உண்மையில் அதன் தரம் மோசமாக உள்ளது.

**மோசமான தூக்கத்தின் அறிகுறிகள்**

தூக்கம் மோசமாக இருப்பதற்கான சில அறிகுறிகள் சோர்வாக எழுந்திருத்தல், பகலில் மூளை மூடுபனி, மதியம் திடீரென சக்தி குறைந்து போதல், சாதாரணமாக உணர காஃபின் தேவைப்படுதல் ஆகியவை அடங்கும். இவை அனைத்தும் உங்கள் தூக்கம் போதுமான அளவு ஆழமாக இல்லை என்பதைக் குறிக்கிறது.

**தூக்கத்தைக் கெடுக்கும் பழக்கங்கள்**

இரவு நேர காஃபின், மது, கனமான உணவு மற்றும் படுக்கையில் உங்கள் தொலைபேசியைப் பயன்படுத்துதல் ஆகியவை தூக்கத்தின் மிகப்பெரிய எதிரிகள் என்று மருத்துவர்கள் கூறுகின்றனர். பிரகாசமான விளக்குகள் மற்றும் ஸ்க்ரோலிங் ஆகியவை மூளையை தொடர்ந்து சுறுசுறுப்பாக வைத்திருக்கின்றன, ஆழ்ந்த தூக்கத்தைத் தடுக்கின்றன.

**இரவில் தாமதமாக சாப்பிடுவதால் ஏற்படும் விளைவுகள்**

படுக்கைக்குச் செல்வதற்கு முன் ஒரு கனமான இரவு உணவு செரிமானத்தை சுறுசுறுப்பாக வைத்திருக்கும். இது உடல் முழுமையாக ஓய்வெடுப்பதைத் தடுக்கிறது, இதனால் அடிக்கடி தூக்கக் கோளாறுகள் ஏற்படுகின்றன. இதன் விளைவாக, காலையில் நீங்கள் சோர்வாகவும் சோம்பலாகவும் உணர்கிறீர்கள்.

**சிறந்த தூக்கத்திற்கு மருத்துவரின் ஆலோசனை**

படுக்கைக்கு 8 மணி நேரத்திற்கு முன்பு காஃபின் பயன்பாட்டைக் குறைத்தல், படுக்கைக்கு 3 மணி நேரத்திற்கு முன்பு இரவு உணவு உட்கொள்வது, மது அருந்துவதைக் கட்டுப்படுத்துதல் மற்றும் படுக்கையறையை குளிர்ச்சியாகவும் இருட்டாகவும் வைத்திருப்பது ஆகியவை அடங்கும்.

**தொலைபேசியிலிருந்து தூரம் அவசியம்.**

உங்கள் தொலைபேசியை படுக்கைக்கு எடுத்துச் செல்வது தூக்கத்தின் தரத்திற்கு மிகப்பெரிய தீங்குகளில் ஒன்றாகும். திரைகளில் இருந்து வெளிப்படும் நீல ஒளி தூக்கத்திற்கு அவசியமான மெலடோனின் என்ற ஹார்மோனை அடக்குகிறது.

**மருத்துவரை எப்போது பார்க்க வேண்டும்?**

நல்ல பழக்கவழக்கங்கள் இருந்தபோதிலும் சோர்வு தொடர்ந்தால், அது தூக்கத்தில் மூச்சுத்திணறல், ஓய்வற்ற கால் நோய்க்குறி, மன அழுத்தம், மருந்துகள் அல்லது இரும்புச்சத்து குறைபாடு காரணமாக இருக்கலாம். இதுபோன்ற சந்தர்ப்பங்களில், மேலும் குறிப்பிட்ட தகவலுக்கு நீங்கள் மருத்துவரை அணுகலாம்.



## நீரிழிவு நோயாளிகளுக்கு வரப்பிரசாதமாகும் பன்னீர் நெல்லிக்காய்: நன்மைகள் பல!



நெல்லிக்காயில் நூற்றுக்கணக்கான வகைகள் இருக்கின்றன. அவற்றுள் ஒன்று பன்னீர் நெல்லிக்காய், மினி ஆப்பிள் போன்ற தோற்றத்தில் காட்சியளிக்கும் இது பெல் ஆப்பிள், வேக்ஸ் ஆப்பிள், ஜாவா ஆப்பிள், ரோஸ் ஆப்பிள், லவ் ஆப்பிள், வாட்டர் ஆப்பிள் என பல்வேறு பெயர்களில் அழைக்கப்படுகிறது. இது பில்லாந்தேசி குடும்பத்தை சேர்ந்தது. இதன் விதைகள் கரும்பழுப்பு நிறத்தில் காட்சியளிக்கும். தமிழகத்தில் கொடைக்கானல், ஊட்டி உள்ளிட்ட மலை பிரதேசங்களில் அதிகம் விளைகிறது.

**ஊட்டச்சத்து:**

இந்த நெல்லிக்காயில் நார்ச்சத்து வைட்டமின்கள் ஏ, பி1, சி, ஈ மற்றும் கனிமங்கள், ஆன்டி ஆக்சிடென்டுகள், இரும்பு, கால்சியம், பாஸ்பரஸ் நிறைந்துள்ளது.

நன்மைகள்:

* ரத்த சர்க்கரை அளவைக் கட்டுப்படுத்தும். அதனால் நீரிழிவு நோயாளிகளுக்கு ஏற்றது.
* கண் பார்வையை மேம்படுத்தும்.
* சளி இருமலை குறைக்கும்.
* முடி வளர்ச்சிக்கு உதவும்.
* கெட்ட கொழுப்பை குறைக்க உதவும்.
* நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும்.

எப்படி சாப்பிடலாம்?

பன்னீர் நெல்லிக்காயை தேன் அல்லது பன்னீருடன் கலந்து சாப்பிடலாம். ஊறுகாயாக தயாரித்தும் ருசிக்கலாம். பன்னீர் நெல்லிக்காயை தொடர்ந்து சாப்பிடும் பழக்கத்தை பின்பற்றுவது உடல் எடையை கட்டுப்படுத்தி, நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கச் செய்யும்.

## கொழுப்பு சேர்வதை குறைக்க...









உடல் உழைப்பின்றி இருக்கையில் அமர்ந்து பகல் முழுவதும் வேலை பார்ப்பவர்கள் உணவைக் குறைக்க வேண்டும்.

உடல் உழைப்பு இல்லாததால் உண்ணும் உணவானது உடலில் கசடுகளாகத் தங்கி துன்பம் விளைவிக்கும். அதனால் நாள் முழுதும் அமர்ந்து வேலை செய்பவர்கள் எளிதில் செரிக்கக் கூடிய காய்கறிகள், பழங்கள் மற்றும் ஒரு கப் அளவான சாதம் எடுத்துக் கொண்டு அரை வயிற்றுக்குச் சாப்பிட்டு கால் வயிற்றுக்கு நீர் குடித்தாலே சரியானது.

இது மேலும் இவர்கள் கொழுப்பு சார்ந்த எண்ணெய் பொருட்கள், பால், தயிர், வெண்ணெய், நெய், தேங்காய் போன்றவற்றில் தயாரான உணவுப் பொருட்களைக் குறைத்தால் வீணாக உடலில் கூடும் கொழுப்புகளைக் குறைத்து ஆரோக்கியமாக வாழலாம்.

## ஊறவைத்த தானியங்களின் நன்மைகள்



குயினோவா அல்லது தினை போன்ற முழு தானியங்களை ஊற வைத்து சாப்பிடுவது ஊட்டச்சத்து எதிர்ப்பு பொருட்களை நீக்கி உடல் ஊட்டச்சத்துக்களை உறிஞ்ச அனுமதிப்பதோடு மென்மையாகவும், ஜீரணிக்க எளிதாகவும் ஆக்கும் என்பதால் சாப்பிடுவதற்கு முன்பு முழு தானியங்களை ஊற வைக்க வேண்டும்.

முழு தானியங்கள் ஊற வைத்து சாப்பிடுவதால், ஏராளமான ஊட்டச்சத்துக்கள் கிடைக்கும் என்பதால் எண்ணெயில் வறுக்க கூடாது. முழு தானியங்களை ஊற வைக்காமல் சாப்பிடுவது செரிமான கோளாறுகளை ஏற்படுத்தும் என்பது குறிப்பிடத்தக்கது.

நட்ஸ் மற்றும் விதைகள் கொட்டைகள் மற்றும் பாதாம் போன்றவற்றை ஊற வைப்பது அவற்றில் உள்ள பைடிக் அமிலத்தைக் குறைத்து நொதிகளை செயல்படுத்துவதோடு, எளிதாக ஜீரணிக்கச் செய்து, அவற்றின் ஊட்டச்சத்துக்கள் கெட்டுப்போகாமல் பாதுகாக்கிறது. ஊற வைத்த பாதாம், பச்சை கொட்டைகள் மற்றும் விதைகளுடன் ஒப்பிடும் போது ஜீரணிக்க எளிதாக இருப்பதால், நட்ஸ் மற்றும் விதைகள் கொட்டைகளை ஊற வைத்தே சாப்பிட்டு பழகுங்கள்.

## ரத்த அழுத்தம், நீரிழிவு நோயை கட்டுப்படுத்தும் வெண்டைக்காய்

அதிக நார்ச்சத்து இருப்பதால் எடை குறைக்க உதவுகிறது.

இதய ஆரோக்கியத்தை ஆதரிக்கும் அதே வேளையில் ரத்த அழுத்தத்தை பராமரிக்க உதவுகிறது.

வெண்டைக்காய் சாப்பிடுவதால் ரத்த அழுத்தம், சர்க்கரை நோயாளிகளுக்கு மிகப்பெரிய பயனுள்ளதாக நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

வெண்டைக்காய் ஏ பிரிவு ரத்த சர்க்கரையை ஒழுங்குபடுத்துகிறது

இது டைப் 2 நீரிழிவு நோய்க்கு சிறந்தது. செரிமானம், நீரேற்றம் மற்றும் வளர்சிதை மாற்றத்தை ஆதரிக்கிறது.

இதில் அதிக நார்ச்சத்து இருப்பதால் எடை குறைக்க உதவுகிறது.

இதய ஆரோக்கியத்தை ஆதரிக்கும் அதே வேளையில் ரத்த அழுத்தத்தை பராமரிக்க உதவுகிறது. இது வயிற்றுப் புண்களைக் குணப்படுத்துகிறது.

நீரழிவு நோயாளிகள் 8 வாரங்களுக்கு ஒவ்வொரு 6 மணி நேரத்திற்கும் 1000 மைக்ரோகிராம் வெண்டைக்காயை உட்கொள்வது சர்க்கரை குறைப்பில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தும் என்று ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

இதையும் படியுங்கள்: ஒற்றை தலைவலி ஏற்படுவதை தவிர்க்கும் வழிகள்...

வெண்டைக்காயை காய்கறி உணவாகச் சாப்பிடுவதோடு மட்டுமல்லாமல், வெண்டைக்காய் தண்ணீரைக் குடிக்கலாம்.

2அல்லது 3 வெண்டைக்காய்களை எடுத்து, அவற்றை நன்கு கழுவி, முனைகளை வெட்டி, சிறிய பிளவுகளை உருவாக்குங்கள்.

அவற்றை தண்ணீரில் இரவு முழுவதும் ஊறவைத்து, தண்ணீரை வடிகட்டி, காலையில் வெறும் வயிற்றில் குடிக்கலாம்.

நார்ச்சத்து நிறைந்த இந்த பானம் செரிமானத்தை மெதுவாக்குகிறது. சர்க்கரை அதிகரிப்பதைத் தடுக்கிறது மற்றும் குடல் ஆரோக்கியத்தை ஆதரிக்கிறது.

இருப்பினும், சில சந்தர்ப்பங்களில், அதிகப்படியான நார்ச்சத்து வீக்கம் அல்லது லேசான வயிற்று அசவுகரியத்தை ஏற்படுத்தக்கூடும்,

வெண்டைக்காய் நீர் வளர்சிதை மாற்றத்தையும் மேம்படுத்துகிறது. மன அழுத்தம் மற்றும் தூக்கமின்மை போன்ற பிரச்சனைகள் தீரும், அதே நேரத்தில் வலிமை இயற்கையாகவே அதிகரிக்கும்," என்று இருதயநோய் நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.



தமிழ்நாடு இ பேப்பர்.காம்

இந்த பகுதியில் உங்கள் படைப்புக்கள் வரவேற்கிறோம்
whatsapp No
8122664699

## மருதுசேனை கட்சி அதிமுகவுக்கு ஆதரவு



அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமியை மருதுசேனை கட்சித் தலைவர் ஆதிநாராயணத் தேவர் சந்தித்து, 2026 சட்டசபைத்தேர்தலில் அதிமுகவுக்கு ஆதரவு அளித்தார்.

### இணைப்பு சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்



பெரம்பலூரில் மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் மூலம் 27 பயனாளிகளுக்குரூ.26.62 லட்சம் மதிப்பிலான இணைப்பு சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்களை கலெக்டர் மிருணாளினி முன்னலையில் அமைச்சர் சிவசங்கர் வழங்கினார்.

## திமுக அரசைக் கண்டித்து ஆர்ப்பாட்டம்



கரூரில் 125 நாள் வேலை உறுதித் திட்டத்தை சீர்குலைக்க முயல்வதாகக் கூறி திமுக அரசைக் கண்டித்து, முன்னாள் அமைச்சர் எம்.ஆர் விஜயபாஸ்கர் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடந்தது.



மதுரை புறநகர் கிழக்கு மாவட்டம் சார்பில், ஊராட்சி ஒன்றிய அலுவலகம் முன் ராஜன்செல்லப்பா எம்எல்ஏ தலைமையில் நேற்று அதிமுகவினர் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

## வாய் மூடி உண்ணாவிரதம்



கோவையில் நேற்று 11வது நாள் போராட்டத்தில், அங்கன்வாடி சத்துணவு ஊழியர்கள் வாய் மூடி உண்ணாவிரதம் இருந்தனர்.

## ர வுசு மணி

இயற்கையை
அழித்து
கொண்டு
இருக்கும் மனித
இனம் தன்
மரணத்தை
இயற்கை
மரணம்
என
சொல்றாங்களே



ராஜகோபாலன் .J
பெங்களூரு

### ஸ்ரீசத்குரு சாய்பாபா தியான ஆலயத்தில் சிறப்பு ஆரத்தி



மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி தென்பாதியில் அமைந்துள்ள ஸ்ரீசத்குரு சாய்பாபா தியான ஆலயத்தில் வியாழக்கிழமை சிறப்பு ஆரத்தி மற்றும் அலங்காரம் நடைபெற்றது.

## 300 கர்ப்பிணிகளுக்கு சீர்வரிசை



பணகுடியில் நேற்று நடந்த சமுதாய வளைகாப்பு விழாவில் 300 கர்ப்பிணிகளுக்கு சீர்வரிசை பொருட்களை சபாநாயகர் அப்பாவு வழங்கினார். டிஆர்ஓ துரை அருகில் உள்ளார்.

## மொழிப்போர் தியாகி ஆ.சின்னசாமி குடும்பத்தாருக்கு பொன்னாடை



அரியலூர் கீழப்பழுவூரில் மொழிப்போர் தியாகி ஆ.சின்னசாமி அரங்கத்தை முதலவர் ஸ்டாலின் காணொளி காட்சி வாயிலாக திறந்து வைத்த நிலையில், அவரது குடும்பத்தாருக்கு அமைச்சர் சிவசங்கர் பொன்னாடை அணிவித்து சிறப்பு செய்தார்.

### பொதுமக்களுக்கு இனிப்பு



பெண்களுக்கு நேற்று ரூ.5,000 பணம் வரவு வைக்கப்பட்டதை தொடர்ந்து தூத்துக்குடியில் அமைச்சர்கீதாஜீவன் பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கினார்.

### வளர்ச்சிப் பணி



ஆவடி மாநகராட்சி பகுதியில் ரூ.6.74 கோடி மதிப்பிலான வளர்ச்சிப் பணிகளை அமைச்சர் நாசர் நேற்று துவக்கி வைத்தார்.

## பாம்பாறு அணையில் இருந்து தண்ணீர் திறப்பு



கிருஷ்ணகிரியில் விவசாயத்துக்காக பாம்பாறு அணையில் இருந்து நேற்று மதியழகன் எம்எல்ஏ, டிஆர்ஓ சாதனைக்குறள் அகியோர் தண்ணீர் திறந்து வைத்தனர்.

### பஸ்களில் பயணிகளுக்கு இனிப்பு



மகளிருக்கு உரிமைதொகை ரூ.5000 வழங்கியதையடுத்து நாகர்கோவிலில் நேற்று திமுக மகளிர் அணி செயலாளர் ஹெலன்டேவிட்சன், பஸ்களில் பயணிகளுக்கு இனிப்பு வழங்கினார்.

### திருத்தேர் திருப்பணி செய்யும் பணி



பழவூர், அருள்மிகு நாறும்பூத நாத சுவாமி திருக்கோவிலில், ரூபாய் 50 லட்சத்தில் புதிதாக திருத்தேர் திருப்பணி செய்யும் பணியினை சபாநாயகர் அப்பாவு துவக்கி வைத்தார்.

### மாணவ, மாணவிகளுக்கு விலையில்லா மடிக்கணினி



வடக்கன்குளம் THE INDIAN பாலிடெக்னிக் கல்லூரியில் 198 மாணவ, மாணவிகளுக்கு விலையில்லா மடிக்கணினிகளை சபாநாயகர் அப்பாவு வழங்கினார்.

### வியாபாரிகள் கஞ்சி காய்ச்சி போராட்டம்



கன்னியம்பலம் கல்மண்டபத்தில் கடைகளை அகற்றக் கூடாது என கோரி கன்னியாகுமரியில் நேற்று வியாபாரிகள் கஞ்சி காய்ச்சி போராட்டம் நடத்தினர்.

## 19 வது பட்டமளிப்பு விழா



கோவை நேரு விமானவியல், பயன்பாட்டு அறிவியல் கல்லூரியில் 19 வது பட்டமளிப்பு விழா நடந்தது.

## புத்தக வெளியீடு



பிரம்மசாரி அருண் ஆரியவீர் எழுதிய நான் ஏன் கிறிஸ்துவ மதத்தை விட்டு வெளியேறினேன் என்ற புத்தகத்தின் தமிழாக்கத்தை இந்து மக்கள் கட்சி திலக சிவக்குமார் எழுதிய பதிப்பை பாஜக தலைவர் நயினார்நாகேந்திரன் வெளியிட்டார். இந்து மக்கள் கட்சி தலைவர் அர்ஜுன் சம்பத், வக்கீல் ராதாகிருஷ்ணன் உடன் இருந்தனர்.

### திமுக அரசை கண்டித்து ஆர்ப்பாட்டம்



ஸ்ரீவைகுண்டத்தில் முன்னாள் அமைச்சர் சண்முகநாதன் தலைமையில் அதிமுக கூட்டணி கட்சியினர் நேற்று திமுக அரசை கண்டித்து ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

## ஒப்பாரி போராட்டம்



தென்காசியில் சத்துணவு, அங்கன்வாடி ஊழியர்கள் கோரிக்கைகளை வலியுறுத்தி நேற்று ஒப்பாரி போராட்டம் நடத்தினர்.

### பொதுமக்களுக்கு அமைச்சர் நாசர் இனிப்பு



கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின் கீழ் 1.31 கோடி பெண்களின் வங்கி கணக்கில் ரூ.5,000 நேற்று வரவு வைத்த, மகிழ்ச்சியை கொண்டாடும் வகையில், ஆவடியில் பொதுமக்களுக்கு அமைச்சர் நாசர் இனிப்புகளை வழங்கினார்.

## பொருநை இலக்கியத் திருவிழா





தென்காசியில் மாவட்ட நிர்வாகம், பொதுநூலகம் சார்பில் பொருநை இலக்கியத் திருவிழாவை கலெக்டர் கமல்கிஷோர் துவக்கி வைத்தார்.

# சுற்றுலா: உலகப் புகழ் மாமல்லபுத்தில் அவசியம் கண்டு ரசிக்க வேண்டிய 10 அரிய இடங்கள்!

தமிழ்நாட்டில் செங்கற்பட்டு மாவட்டத்தில் அமைந்த மாமல்லபுரம் உலகப் புகழ் பெற்ற சுற்றுலா தலமாகும். ஆறாம் நூற்றாண்டில் முதலாம் மகேந்திரவர்ம பல்லவன் மற்றும் அவரைத் தொடர்ந்து ஆட்சிக்குவந்த முதலாம் நரசிம்மவர்ம பல்லவன் ஆகியோர் மாமல்லபுரத்தில் குன்றுகளைக் குடைந்து குடைவரைக் கோயில்களையும் திறந்தவெளியில் அமைந்த பாறைகளில் புடைப்புச் சிற்பத்தொகுதிகளையும் அமைத்தும் மாபெரும் சாதனை படைத்தனர். இனி, மாமல்லபுரத்தில் நாம் காண வேண்டிய வியக்க வைக்கும் சிற்பங்களைப் பற்றி இந்தப் பதிவில் தெரிந்து கொள்ளுவோம்.



1. வெண்ணை உருண்டைக் கல் (BUTTER BALL): ஒரு குன்றின் சரிவில் இந்த பெரிய கல்லானது தன்னைத்தானே சமநிலைப்படுத்திக் கொண்டு சுமார் 1300 ஆண்டுகளாக நிலைத்து நிற்கும் அதிசயத்தைக் காணலாம். இந்த கல்லானது ஆறு மீட்டர் உயரமும் (19.6 அடி) ஐந்து மீட்டர் அகலமும் (16.4 அடி) சுமார் 250 டன் எடையும் கொண்டது.

2. அர்ஜுனன் தபசு சிற்பங்கள்: அர்ஜுனன் தபசு சிற்பங்கள் 96 அடி நீளமும் 43 அடி உயரமும் உடைய இருபெரிய பாறைகளில் பலவிதமான உருவங்களுடன் வடிக்கப்பட்டுள்ளன. சுமார் நூற்றி ஐம்பதுக்கும் மேற்பட்ட கலைச் சிற்பங்கள் அடங்கியது இந்த அர்ஜுனன் தபசு சிற்பத் தொகுதி.

3.ராயர் கோபுரம்:பல்லவர்களுக்குப் பிந்தைய விஜயநகரப் பேரரசர்களின் காலத்தில் தொடங்கப்பட்ட இந்த கலைக்கோயிலானது ஏதோ சில காரணங்களால் முற்று பெறாமல் போயிற்று. விஜயநகரப் பேரரசர்களின் காலத்தில் கட்டப்பட்டதால் இதற்கு ராயர் கோபுரம் என்ற பெயர் வழங்கலாயிற்று.

4. கிருஷ்ண மண்டபம்: அர்ஜுனன் தபசு பாறைச் சிற்பத்துக்கு அருகில் அமைந்துள்ள கிருஷ்ண மண்டபத்திற்குள் கோவர்த்தன சிற்பத் தொகுதி காணப்படுகிறது. பல்லவர் காலத்தில் செதுக்கப்படும்போது இந்தச் சிற்பமும் வெளிப்புறப் புடைப்புச் சிற்பமாகத்தான் இருந்ததாகவும் பிற்காலத்தில் விஜயநகர ஆட்சியின்போது இதன்மீது மண்டபம் ஒன்று கட்டப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

5. மகிஷாசுரமர்த்தினி மண்டபம்: கலங்கரை விளக்கத்துக்குச் செல்லும் வழியில் குன்றின் மீது மகிஷாசுரமர்த்தினி மண்டபம் உள்ளது. இந்த மண்டபத்தின் சுவர்களில் மகாவிஷ்ணு பாம்புப் படுக்கையில் பள்ளி கொண்டிருக்க, மது, கைடபன் என்று இரு அரக்கர்கள் அவரைத் தாக்க வரும் காட்சியைக் காணலாம்.

6. வராக மண்டபம்: வராக மண்டபத்தில் நான்கு சிற்பத் தொகுதிகள் காணப்படுகின்றன. மகாவிஷ்ணு, வராக அவதாரம் எடுத்து பூமா தேவியைக் காப்பாற்றி மேலே கொண்டு வருவது முக்கியமான சிற்பத் தொகுதியாகும்.

7. பஞ்ச பாண்டவ ரதங்கள்: முதலாம் நரசிம்மவர்மன் என்னும் மாமல்லனால் தெற்கிலிருந்து வடக்காக சரிந்த சிறு குன்றிலிருந்து செதுக்கப்பட்ட இந்த ஐந்து சிற்ப ரதங்கள் பஞ்சபாண்டவ இரதங்கள் என்று அழைக்கப்படுகின்றன. இந்த ரதங்களுக்கு முன்புறமாக சிம்மமும், பக்கவாட்டில் யானையும் நந்தியும் செதுக்கப்பட்டுள்ளன.




8. கடற்கரைக் கோயில்: இரண்டாம் நரசிம்மவர்மன் எனப்படும் இராஜசிம்மன் என்பவரால் இந்த கடற்கரைக் கோயில் கட்டப்பட்டது. இந்த கோயில் கி.பி.700 முதல் கி.பி.728 காலத்தில் கட்டப்பட்டதாகத் தெரிகிறது. ஒரு பெரிய விமானம் மற்றொரு சிறிய விமானம் இரண்டு அழகிய கருவறை விமானங்களுடன் காட்சியளிக்கிறது.

9. புலிக்குகை: புலிக்குகை எனும் பல்லவர் கால கலைச்சிற்பத் தொகுதிகள் சாளுவன்குப்பம் என்ற இடத்தில் கடற்கரையினை ஒட்டி அமைந்துள்ளது. ஒரு குன்று போன்ற அமைப்பினைக் குடைந்து இந்த குடைவரை உருவாக்கப்பட்டுள்ளது. இதன் மையத்தில் தரையிலிருந்து சுமார் இரண்டு மீட்டர் உயரத்தில் மேடை காணப்படுகிறது. மேடையை அடைய படிகள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த குடைவரை முற்றுபெறாத ஒரு குடைவரையாகவே காட்சி தருகிறது. இந்த குடைவரையின் முகப்பில் பதினொரு யாளித் தலைகள் அரை வட்ட அமைப்பில் செதுக்கப்பட்டுள்ளன.

10. கலங்கரை விளக்கம்: தற்போது மாமல்லபுரத்தில் அமைந்துள்ள கலங்கரை விளக்கம் 1887ல் அமைக்கப்பட்டது. சுழல் விளக்கினைக் கொண்ட இந்த கலங்கரை விளக்கம் 1904ம் ஆண்டில் பயன்பாட்டிற்கு வந்தது. இதற்கு அருகில் கி.பி.640ம் ஆண்டில் மகேந்திர பல்லவரால் கட்டப்பட்ட பழைமையான கலங்கரை விளக்கம் உள்ளது. இது நினைவுச் சின்னமாக பராமரிக்கப்பட்டு வருகிறது.

## வேலைவாய்ப்பு கார்னர்

### இந்திய அஞ்சல் துறையில் 28,740 காலியிடங்களுக்கு விண்ணப்பங்கள் வரவேற்பு!

மத்திய தகவல் தொடர்பு அமைச்சகத்தின் கீழ் செயல்பட்டு வரும் இந்திய அஞ்சல் துறையில் காலியாக உள்ள 28,740 பணியிடங்களை தேர்வுகள் எதுவுமின்றி நேரடியாக தேர்வு செய்யப்படுவதற்கான வேலைவாய்ப்பு அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. இதற்கு தகுதியானவர்களிடம் இருந்து வரும் 14 ஆம் தேதிக்குள் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

பத்தாம் வகுப்பு முடித்தவர்களுக்கான எழுத்துத் தேர்வுகள் எதுவுமின்றி தேர்வு செய்யப்படும் மத்திய அரசு வேலைக்கான சிறந்த வாய்ப்பை தகுதியானவர்கள் பயன்படுத்தி பலன் பெறலாம்.

பணி மற்றும் காலியிடங்கள் விவரம்:

மொத்த காலிப் பணியிடங்கள் : 28,740

பணி: BRANCH POSTMASTER (BPM)

சம்பளம்: மாதம் ரூ. 12,000 - ரூ.29,380

பணி: ASSISTANT BRANCH POSTMASTER (ABPM)

பணி: DAK SEVAK

சம்பளம்: மாதம் ரூ. 10,000 - ரூ.24,470

தகுதி: பத்தாம் வகுப்பு தேர்ச்சியிடன் விண்ணப்பிக்கும் மாநிலத்தின் உள்ளூர் மொழி எழுத, பேச தெரிந்திருக்க வேண்டும். கூடுதல் தகுதியாக, கணினியில் பணிபுரியும் திறன் மற்றும் சைக்கிள் ஓட்டத் தெரிந்திருக்க வேண்டும்.

வயது வரம்பு: குறைந்தபட்சம் 18 முதல் அதிகபட்சம் 40 வயதிற்குள் இருக்க வேண்டும். எஸ்சி,எஸ்டி பிரிவினருக்கு 5 ஆண்டுகளும், ஓபிசி பிரிவினருக்கு 3 ஆண்டுகளும் வயது வரம்பில் தளர்வு வழங்கப்படும்.

தேர்வு செய்யப்படும் முறை: விண்ணப்பதாரர்கள் பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வில் பெற்ற மதிப்பெண்களின் அடிப்படையில் தகுதியானவர்கள் தேர்வு செய்யப்படுவர். இந்த பணியிடங்களுக்கு எழுத்துத் தேர்வோ, நேர்முகத் தேர்வோ கிடையாது.

விண்ணப்பிக்கும் முறை: https://indiapost.gov.in அல்லது https://indiapostgdsonline.gov.in என்ற அதிகாரப்பூர்வ இணையதளத்தின் மூலம் ஆன்லைனில் விண்ணப்பிக்க வேண்டும்.

ஆன்லைனில் விண்ணப்பிப்பதற்கான கடைசி நாள்: 14.2.2026

## ராமேசுவரம் ராமநாதசுவாமி கோவில் உள்பட 12 கோவில்களில் மகா சிவராத்திரி பெருவிழா

**சென்னை, பிப்.14:**

இந்து சமய அறநிலையத்துறை நிர்வாகக் கட்டுப்பாட்டிலுள்ள 12 கோயில்கள் சார்பில் இந்தாண்டு மகாசிவராத்திரி பெருவிழா ஆன்மிக சொற்பொழிவுகள் மற்றும் கலை நிகழ்ச்சிகளுடன் 15ந் தேதி அன்று வெகு சிறப்பாக கொண்டாடப்படவுள்ளது என அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு தெரிவித்துள்ளார்.

இந்த அறிவிப்பினை செயல்படுத்திடும் வகையில் ராமேசுவரம் ராமநாதசுவாமி கோயில், விருத்தாச்சலம் விருத்தகிரீசுவரர் கோயில், திருநாகேசுவரம் நாகநாதசுவாமி திருக்கோயில் ஆகிய 3 கோயில்களுடன் ஏற்கனவே மகாசிவராத்திரி விழா நடத்தப்பட்டு வரும் 9 கோயில்களையும் சேர்த்து மொத்தம் 12 கோயில்கள் சார்பில் 15ந் தேதி ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணி முதல் 16ந் தேதி திங்கட்கிழமை காலை 6 மணி வரை மகாசிவராத்திரி பெருவிழா ஆன்மிக சொற்பொழிவுகள் மற்றும் கலை நிகழ்ச்சிகளுடன் சிறப்பாகக் கொண்டாடப்பட உள்ளது. கடந்தாண்டு 9 திருக்கோயில்கள் சார்பில் மகாசிவராத்திரி பெருவிழாவும், கடந்த 3 ஆண்டுகளாக சென்னை, மயிலாப்பூரில் நவராத்திரி பெருவிழாவும் பக்தர்கள் பங்கேற்புடன் விமரிசையாக நடத்தப்பட்டு வருகிறது. இவ்வாண்டு கூடுதலாக, ராமநாதபுரம் மாவட்டம், ராமேசுவரம் ராமநாதசுவாமி கோயில், கடலூர் மாவட்டம், விருத்தாச்சலம் விருத்தகிரீசுவரர் கோயில், தஞ்சாவூர் மாவட்டம், திருநாகேசுவரம் நாகநாதசுவாமி திருக்கோயில் ஆகிய 3 கோயில்கள் சார்பில் மகாசிவராத்திரி விழா நடத்தப்படும்" என சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்டது.

இவ்வாறு அமைச்சர் பி.கே.சேகர்பாபு தெரிவித்துள்ளார்.

## என்.எல்.சி. ஒப்பந்த முறைகேடு புகார்: சி.பி.ஐ. விசாரணை நடத்த ஐகோர்ட் உத்தரவு

**சென்னை, பிப். 14:**

என்.எல்.சி. நிறுவனத்தில் பல்வேறு பணிகளுக்கு ஒப்பந்தங்கள் வழங்கியதில் சுமார் ரூ.442 கோடிக்கு முறைகேடு நடந்ததாக கூறி கடலூரைச் சேர்ந்த மணிகண்டன் என்பவர் சி.பி.ஐ.யிடம் புகார் அளித்திருந்தார். இந்நிலையில், தனது புகார் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்றும், தனது புகார் தொடர்பாக வழக்குப்பதிவு செய்து சி.பி.ஐ.க்கு உத்தரவிட வேண்டும் எனவும் கோரி சென்னை ஐகோர்ட்டில் வழக்கு தாக்கல் செய்திருந்தார். இந்த வழக்கு நீதிபதி நிர்மல்குமார் முன்பு இன்று விசாரணைக்கு வந்தபோது, சி.பி.ஐ. தரப்பில், "புகார்தாரர் தனது புகார் தொடர்பாக முழுமையான ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை. அவரை விசாரணைக்கு அழைத்தும் அவர் ஆஜராகவில்லை" என தெரிவிக்கப்பட்டது. இதனை பதிவுசெய்து கொண்ட நீதிபதி, புகாரில் உள்ள குற்றச்சாட்டுகள் குறித்து முகாந்திரம் இல்லாமல் நேரடியாக வழக்குப்பதிவு செய்ய முடியாது என்று கூறி, என்.எல்.சி. உயர் அதிகாரிகளுக்கு எதிரான புகார்களுக்கு ஆதாரங்களை சமர்ப்பிக்க மனுதாரர் தரப்பிற்கு உத்தரவிட்டார். மேலும், அந்த ஆதாரங்களின் அடிப்படையில் விசாரணை நடத்தி சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டும் என சி.பி.ஐ.க்கு உத்தரவிட்டு நீதிபதி வழக்கை முடித்து வைத்தார்.

## தி.மு.க. ஆட்சி மீண்டும் வந்தால்தான் தமிழ்நாட்டின் வளர்ச்சி தொடரும், சுயமரியாதை காப்பாற்றப்படும்: ஸ்டாலின் பேச்சு

**செங்கல்பட்டு, பிப்.14:**

தி.மு.க. ஆட்சி மீண்டும் வந்தால்தான் தமிழ்நாட்டின் வளர்ச்சி தொடரும், சுயமரியாதை காப்பாற்றப்படும் என்று வாக்குச்சாவடி குழுவினருக்கான பயிற்சி மாநாட்டில் முதலமைச்சர் ஸ்டாலின் பேசினார்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் நேற்று திருவிடந்தையில் நடைபெற்ற 'என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி சென்னை, விழுப்புரம் மண்டல வாக்குச்சாவடிக் குழுவினருக்கான பயிற்சி மாநாட்டில் கலந்துகொண்டு பேசினார். அப்போது அவர் பேசியதாவது:

தமிழ்நாடு முழுவதும் அனைத்து பூத்திலும் 100 வாக்காளர்களுக்கு ஒரு உறுப்பினர் வீதம், ஒவ்வொரு பூத்திலும் சராசரியாக 10 வாக்குச்சாவடி குழு உறுப்பினர்களை நாம் நியமித்திருக்கிறோம். மைக்ரோ மேனேஜ்மெண்ட்-ஆக இருந்தாலும் சரி, மேக்ரோ மேனேஜ்மெண்ட்-ஆக இருந்தாலும் சரி, தேர்தல் களத்தில் தி.மு.க.தான் ஹீரோ.

இந்தியாவில் வேறு எந்தக் கட்சிக்கும் இல்லாத கட்டமைப்பு நம்மிடம் இருக்கிறது. தமிழ்நாட்டில் உள்ள மொத்த பூத்களின் எண்ணிக்கை 75 ஆயிரம். ஒவ்வொரு பூத்திற்கும் நாம் செட் பண்ணியிருக்கும் 'மினிமம் டார்கெட்' எவ்வளவு தெரியுமா? 350 வாக்குகள். இந்த டார்கெட்டை நாம் அச்சீவ் செய்தாலே, 2 கோடியே 60 லட்சம் வாக்குகளுக்கு மேல் நாம் வாங்கிவிடலாம்.

இந்தத் தேர்தலில் நாம் கட்டாயம் 2 கோடியே 50 லட்சம் வாக்குகளுக்குக் குறையாமல் வாங்கியாக வேண்டும் என்று சொல்லிருந்தேன். இதை சாத்தியப்படுத்திக் காட்டுவது உங்களின் பொறுப்பு.

ஏற்கனவே 'ஓரணியில் தமிழ்நாடு' பரப்புரை மூலமாக, 1 கோடியே 14 லட்சம் குடும்பங்கள் நம் கழகத்துடன் இணைந்திருக்கிறார்கள். இதில், ஒரு வாக்குகூட மிஸ் ஆகாமல், உதயசூரியனுக்கும் - நம்முடைய கூட்டணிக் கட்சி சின்னங்களுக்கும் விழ வேண்டும். ஓரணியில் தமிழ்நாடு மட்டுமல்லாமல், எஸ்.ஐ.ஆர். பட்டியல் திருத்தம் மூலமாகவும் ஏற்கனவே 2, 3 முறை, தமிழ்நாட்டின் ஒவ்வொரு வீட்டையும் நாம் நேரில் சந்தித்து ஆதரவு திரட்டி இருக்கிறோம்.

அடுத்ததாக, 'ஸ்டாலின் மகளிர் படை'யில் இருக்கும் மகளிரணியினர் வீடு வீடாகப் பிரசாரத்தைத் தொடங்கப் போகிறார்கள். உங்கள் உழைப்பில்தான் நாம் ஏழாவது முறையாக ஆட்சிக்கு வரப்போகிறோம். ஆளுங்கட்சிக்கு எதிரான மனநிலை, எங்குமே இல்லாத நிலைதான் இன்றைக்கு இருக்கிறது. இவ்வாறு மு.க.ஸ்டாலின் பேசினார்.

## அ.தி.மு.க. தி.மு.க. என இரு தரப்பிலும் பேச்சு வார்த்தையா?: பிரேமலதா விளக்கம்

**சென்னை, பிப்.14:**

தமிழகத்தில் சட்டசபை தேர்தல் விரைவில் அறிவிக்கப்படவுள்ள நிலையில் கூட்டணி பேச்சுவார்த்தைகள் இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளன. தி.மு.க. கூட்டணி, அ.தி.மு.க. பா.ஜ.க. கூட்டணி, விஜய்யின் தவெக, சீமானின் நாம் தமிழர் என 4 முனைப் போட்டி நிலவுகிறது. தே.மு.தி.க.வும் ராமதாசின் பா.ம.க.வும், ஓபிஎஸ் அணியும் இன்னும் கூட்டணி குறித்து அறிவிக்கவில்லை.

இந்த நிலையில் அண்ணா தி.மு.க. பா.ஜ.க. கூட்டணியில் இணைய தே.மு.தி.க. பேச்சுவார்த்தை நடத்துவதாக அண்ணா தி.மு.க.வின் முன்னாள் அமைச்சர் திண்டுக்கல் சீனிவாசன் கூறினார். திமுக கூட்டணியில் இணையவும் தே.மு.தி.க. பேச்சுவார்த்தை நடத்துவதாகவும் தகவல்கள் வெளியாகின.

இதனிடையே கட்சியில் சீட்டு கேட்பதென்றால் 2 கூட்டணிகளிலும் பேசக்கூடாது. அங்கேயும், இங்கேயும் பேசுவது சரியாகாது, நியாயமும் இல்லை என்று தி.மு.க. தேர்தல் பணிக்குழு தலைவரும், அமைச்சருமான ராஜகண்ணப்பன் கூறினார்.

இந்த நிலையில் இதுபற்றிய செய்தியாளர்களின் கேள்விக்கு தே.மு.தி.க. பொதுச்செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் பதில் அளித்தார்.

சென்னை கோயம்பேட்டில் உள்ள தே.மு.தி.க. தலைமை அலுவலகத்தில் 25-ம் ஆண்டு கொடி நாளை ஒட்டி பிரேமலதா விஜயகாந்த் கட்சிக்கொடியை ஏற்றி வைத்து கூறியதாவது:

அண்ணா தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி, தமிழக பா.ஜ.க. தலைவர் நயினார் நாகேந்திரன், அமைச்சர் எ.வ. வேலு ஆகியோர் இதற்கு பதில் அளித்திருக்கிறார்கள். இரு கட்சிகளுடன் கூட்டணி பேச்சுவார்த்தை நடப்பதாக வெளியான தகவல் தவறானது. கூட்டணி குறித்த அறிவிப்பை தே.மு.தி.க. உரிய நேரத்தில் அறிவிக்கும். கூட்டணி குறித்து எங்களிடம் திரும்பத் திரும்ப கேட்காதீர்கள்.

எங்களை கேட்க வேண்டிய நிர்வாகிகள் மற்றும் தொண்டர்களே கேட்காமல் அமைதியாக, நம்பிக்கையாக இருக்கிறார்கள். கூல்-ஆ இருங்க.. ஹாப்பியா இருங்க. நேரம் வரட்டும் என்று பிரேமலதா கூறினார்.

## மாற்றுத்திறனாளிகள் 154 பேருக்கு ரூ.58 லட்சத்தில் நலத்திட்ட உதவிகள்

**சேலம், பிப்.14:**

சேலம் அஸ்தம்பட்டி சிஎஸ்ஐ பாலர் ஞான இல்லத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலெக்டர் இரா. பிருந்தாதேவி 154 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.58.13 லட்சம் மதிப்பிலான உதவி உபகரணங்களை வழங்கினார்.

தமிழ்நாடு அரசு மாற்றுத்திறனாளிகளின் முன்னேற்றத்திற்காக பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. அதன் ஒரு பகுதியாக இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனத்தின் சமூக பொறுப்புணர்வு திட்டத்தின் மூலம் இந்த உதவி வழங்கப்பட்டது.

மொத்தம் ரூ.58.13 லட்சம் மதிப்பில் 278 உதவி உபகரணங்கள் 154 பேருக்கு வழங்கப்பட்டன. இதில் முதுகுத் தண்டுவடம் பாதிக்கப்பட்டவர்களுக்கு பேட்டரியால் இயங்கும் சக்கர நாற்காலிகள், மூன்று சக்கர நாற்காலிகள், காதொலிக்கருவிகள், ஊன்றுகோல்கள், கைபேசிகள் உள்ளிட்ட உபகரணங்கள் அடங்கும்.

நிகழ்ச்சியில் இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனத்தின் துணை பொது மேலாளர் ஆர். பிந்து, மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் செண்பகவள்ளி மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## கிருஷ்ணகிரியில் ஊரக வாழ்வாதார இயக்க அலுவலகத்தில் காலி பணியிடம்: விண்ணப்பிக்க பிப்ரவரி 20 கடைசிநாள்

TAMIL NADU RURAL DEVELOPMENT AND PANCHAYAT RAJ DEPARTMENT

**கிருஷ்ணகிரி, பிப்.14:**

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ் மாவட்ட இயக்க மேலாண்மை அலுவலகத்தில் காலி யாக உள்ள வட்டார ஒருங்கிணைப்பாளர் பணியிடங்களுக்கு தகுதி யானவர்கள் பிப்ரவரி 20க்குள் விண்ணப்பிக்கலாம் என கலெக்டர் தினேஷ்குமார் தெரிவித்துள்ளார்.

மொத்தம் 10 வட்டாரங்களில் 20 பணியிடங்கள் நிரப்பப்பட உள்ளன. பர்கூர் 1, ஓசூர் 3, காவேரிப்பட்டிணம் 2, கெலமங்கலம் 2, கிருஷ்ணகிரி 1, தளி 4, ஊத்தங்கரை 2, வேப்பனப்பள்ளி 1, சூளகிரி 2, மத்தூர் 2 ஆகிய வட்டாரங்களில் காலிப்பணியிடங்கள் உள்ளன. இப்பணியிடங்கள் வட்டார அளவிலான கூட்டமைப்புகள் மூலம் வெளிச்சேவை முறையில் 11 மாத ஒப்பந்த அடிப்படையில் நிரப்பப்படுகின்றன.

ஏதாவது ஒரு பிரிவில் இளங்கலைப் பட்டம் பெற்றிருக்க வேண்டும். மூன்று மாத கணினி பயிற்சி சான்றிதழ் அவசியம். 30 வயதிற்கு உட்பட்டவராக இருக்க வேண்டும். ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு அல்லது சுயஉதவிக்குழுவில் குறைந்தது ஐந்து ஆண்டுகள் உறுப்பினராக அனுபவம் பெற்றிருக்க வேண்டும். சம்பந்தப்பட்ட வட்டாரத்தில் வசிப்பவராக இருக்க வேண்டும்.

வாழ்ந்து காட்டுவோம் திட்டம் அல்லது தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் உள்ளிட்ட திட்டங்களில் பணிநீக்கம் செய்யப் பட்டவர்கள் விண்ணப்பிக்க தகுதியற்றவர்கள்.

விண்ணப்பங்கள் சம்பந்தப்பட்ட வட்டார அளவிலான கூட்டமைப் பிற்கு பிப்ரவரி 20 மாலை 5 மணி வரை நேரடியாக ஒப்படைக்கப்பட வேண்டும். தாமதமாக வரும் விண்ணப்பங்கள் ஏற்கப்படமாட்டாது. மேலும் விவரங்களுக்கு ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை வளாகம் (மகளிர் திட்டம்), அறை எண் 11, தரைத்தளம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், கிருஷ்ணகிரி 635115 என்ற முகவரியில் தொடர்புகொள்ளலாம்.

# மகளிர் உரிமைத்தொகை ரூ.5 ஆயிரம் வழங்க அரசு ஒதுக்கிய தொகை தெரியுமா?








**சென்னை, பிப்.14:**

கடந்த 2021-ம் ஆண்டு சட்டசபை தேர்தலில் திமுக வெற்றி பெற்று ஆட்சி அமைக்க காரணமாக இருந்த தேர்தல் வாக்குறுதி, "அனைத்து குடும்ப தலைவிகளுக்கும் மாதந்தோறும் ரூ.1,000 மகளிர் உரிமைத்தொகை வழங்கப்படும்" என்பதுதான். ஆனால், ஆட்சிக்கு வந்தவுடன் இந்த வாக்குறுதி நிறைவேற்றப்படவில்லை. 2023-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 15-ந்தேதி அண்ணா பிறந்தநாளில்தான் இந்த திட்டம் தொடங்கப்பட்டது.

மொத்தம் 1 கோடியே 13 லட்சம் பெண்கள் பயனாளிகளாக கண்டறியப்பட்டு, அவர்களது வங்கிக் கணக்குகளில் மாதந்தோறும் ரூ.1,000 உரிமைத்தொகை வரவு வைக்கப்பட்டு வந்தது. கடந்த ஆண்டு இந்த திட்டம் விரிவுபடுத்தப்பட்டு, 1 கோடியே 31 லட்சம் பெண்கள் பயன்பெறும் வகையில் மாற்றியமைக்கப்பட்டது.

இம்மாதம் மகளிர் உரிமைத்தொகை 15-ந்தேதிதான் விடுவிக்கப்பட வேண்டும். ஆனால், இன்று காலை யாரும் எதிர்பாராத வகையில், மகளிர் உரிமைத்தொகை பெறும் பெண்கள் இன்ப அதிர்ச்சி அடையும் வகையில் அவர்களுடைய வங்கிக் கணக்கில் ரூ.5 ஆயிரம் பணம் வரவு வைக்கப்பட்டது. செல்போனில் வந்த குறுஞ்செய்தியை பார்த்து, பலரால் நம்பவே முடியவில்லை.

இந்த நேரத்தில், முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலினும் வீடியோ ஒன்றை வெளியிட்டு, ரூ.5 ஆயிரம் பணம் வரவு வைக்கப்பட்டதை உறுதிப்படுத்தினார். தேர்தல் நேரத்தில் மகளிர் உரிமைத்தொகை வழங்குவதை தடுக்க எதிர்க்கட்சிகள் முயற்சி செய்வதால், முன்கூட்டியே ரூ.3 ஆயிரம் வழங்கப்பட்டதாக அவர் தெரிவித்தார். மேலும், கோடை கால சிறப்பு தொகையாக ரூ.2 ஆயிரம் சேர்த்து வழங்கப்பட்டதாகவும் அவர் கூறினார். ஆனால், எதிர்க்கட்சிகளோ, தேர்தல் நேரத்தை மனதில் வைத்தே இதுபோன்று தி.மு.க. அரசு நடந்து கொண்டதாக குற்றம்சாட்டின. எது எப்படியோ, மகளிர் உரிமைத்தொகை பெறும் பெண்களுக்கு ஜாக்பாட் அடித்துவிட்டது. இதற்கு, அரசு ஒதுக்கிய நிதி எவ்வளவு தெரியுமா? ரூ.6,550 கோடி.

# விளையாட்டு செய்திகள்

## ரூ. 10 லட்சம் செலுத்த கிரிக்கெட் வீரர் தோனிக்கு ஐகோர்ட் உத்தரவு!

**சென்னை, பிப்.14:**

ஓய்வுபெற்ற ஐ.பி.எஸ். அதிகாரி சம்பத்குமாருக்கு எதிராக தொடர்ந்த வழக்கில் தொடர்புடைய சிடி-யை எழுத்து வடிவமாக்குவதற்கான கட்டணமாக, 10 லட்சம் ரூபாயை, மார்ச் 12-ம் தேதிக்குள் செலுத்தும்படி, கிரிக்கெட் வீரர் மகேந்திர சிங் தோனிக்கு சென்னை ஐகோர்ட் உத்தரவிட்டுள்ளது.

கடந்த 2013-ம் ஆண்டு ஐ.பி.எல். கிரிக்கெட் சூதாட்டத்தில், சென்னை அணி வீரர் மகேந்திர சிங் தோனிக்கும் தொடர்பு இருப்பதாக, ஓய்வுபெற்ற ஐ.பி.எஸ். அதிகாரி சம்பத்குமார், தனியார் தொலைக்காட்சி விவாத நிகழ்ச்சியில் தெரிவித்திருந்தார். இது தனது நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்தியதாக கூறி, நூறு கோடி ரூபாய் மான நஷ்டஈடு கோரி சம்பத்குமாருக்கு எதிராக தோனி சென்னை ஐகோர்ட்டில் மனுத்தாக்கல் செய்திருந்தார். கடந்த 2014-ம் ஆண்டு தாக்கல் செய்யப்பட்ட இந்த வழக்கில் தொடர்புடைய சிடி-யை எழுத்து வடிவமாக்க உயர்நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது. அதற்கான கட்டணத்தை செலுத்த வேண்டும் எனவும் நிபந்தனை விதிக்கப்பட்டிருந்தது. இந்த வழக்கை விசாரித்த நீதிபதி ஆர்.என்.மஞ்சுளா, வழக்கு தொடர்பான சிடி-யை எழுத்துவடிவமாக்க மொழிபெயர்ப்பாளரும், தட்டச்சரும் முழு நேரத்தை ஒதுக்க வேண்டியுள்ளது. இதற்கு மூன்று முதல் நான்கு மாதங்களாகும். மொழியாக்கம் செய்யப்படும் ஆவணங்களை நகல் எடுக்க கூடுதல் செலவினம் ஏற்படுகிறது எனக் குறிப்பிட்டுள்ளார். இதனால், மொழியாக்கத்துக்கான கட்டணமாக 10 லட்சம் ரூபாயை தலைமை நீதிபதி நிவாரண நிதிக்கு மார்ச் 12-ம் தேதிக்குள் செலுத்த வேண்டும் என மனுதாரரான தோனிக்கு உத்தரவிட்ட நீதிபதி, மொழியாக்க பணிகளை மார்ச் 3-வது வாரத்துக்குள் முடிக்க வேண்டும் என மொழிபெயர்ப்பாளர், தட்டச்சருக்கு உத்தரவிட்டு, விசாரணையை மார்ச் 12-ம் தேதிக்கு தள்ளி வைத்துள்ளார்.

## வெங்கடேஸ்வரா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியின் 23 மாணவர்களுக்கு மாவட்ட தேக்வாண்டோ தகுதிப்பட்டை

**புதுக்கோட்டை, பிப். 14:**

புதுக்கோட்டை மாவட்ட அம்மெச்சூர் தேக்வாண்டோ சங்கம், மாவட்ட அளவில் 15- வது தேக்வாண்டோ தகுதிப்பட்டை வழங்கும் விழாவினை, பெருங்கொண்டான் விடுதி தெய்வத்திரு சீனு சின்னப்பா மணிமண்டபத்தில் நடத்தியது. இந்த நிகழ்வில், 20-க்கும் மேற்பட்ட அரசு மற்றும் தனியார் பள்ளிகளிலிருந்து 400- க்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்டனர்.

23 மாணவர்களுக்கு தகுதிப்பட்டை: திருக்கோகர்ணம் ஸ்ரீ வெங்கடேஸ்வரா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி மாணவர்கள் 23- பேர், தேக்வாண்டோ தகுதிப்பட்டை தேர்வில் தேர்ச்சி பெற்று தகுதிப்பட்டை பெற்றனர். இந்த பயிற்சியின் சிறப்புத் தேர்வாளராக கன்னியாகுமரியைச் சேரந்த ஜெயசீலன், மாவட்ட தேக்வாண்டோ சங்கத்தின் செயலாளர் சேது கார்த்திகேயன் ஆகியோர் தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கு தகுதிப்பட்டை வழங்கினர். தேக்வாண்டோ தகுதிப் பட்டை தேர்வில் வெற்றிபெற்று மஞ்சள் தகுதிப்பட்டை பெற்ற ஸ்ரீ வெங்கடேஸ்வரா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி மாணவர்களை பள்ளியின் இயக்குனர் ரா.சுதர்சன் பாராட்டி வாழ்த்துகளைத் தெரிவித்தார்.

# பெங்களூரில் கொடூர விபத்து! வாகனங்கள் ஒன்றன் மீது ஒன்று மோதி 7 பேர் பலி



**பெங்களூரு, பிப்.14:**

பெங்களூரில் இன்று அதிகாலை வேகமாக வந்த வாகனங்கள் ஒன்றன் மீது ஒன்று மோதிய விபத்தில் 7 பேர் பலியானதாகத் தகவல்கள தெரிவிக்கின்றன.

டொப்பாஸ்பெட் - ஹோஸ்கோட் நகர வட்டச் சாலையில் இரண்டு சொகுசு கார்கள், டிரக் மற்றும் மோட்டார் சைக்கிள்கள் ஒன்று மீது ஒன்று அடுத்தடுத்து மோதியதில் வாகனங்களில் இருந்த 7 பேர் பலியாகியுள்ளனர்.

வெள்ளிக்கிழமை காலை 5.15 மணிக்கு இந்த சம்பவம் நடந்துள்ளது. விபத்தில் சிக்கியவர்கள் அருகில் உள்ள மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஹோஸ்கோடேவிலிருந்து தேவனஹல்லி நோக்கிச் சென்று கொண்டிருந்த வாகனங்கள்தான் இந்த விபத்தில் சிக்கியிருக்கின்றன. முதலில் சொகுசு கார் ஒன்று அதிவேகமாகச் சென்று மோட்டார் சைக்கிள் மீது மோதி பிறகு டிரக் மீது மோதியிருக்கிறது.

இதில், மோட்டார் சைக்கிளில் வந்த 26 வயது ககன் என்பவர் மரணமடைந்தார். தனியார் நிறுவனத்தில் பணியாற்றி வந்த அவர், இரவுப் பணி முடிந்து வீடு திரும்பும்போது விபத்தில் சிக்கி பலியானார். சொகுசு காரில் வந்த ஆறு பேரும் கல்லூரி மாணவர்கள் என்றும், பொழுதுபோக்குக்காக காரில் வந்த போது விபத்தில் சிக்கி சம்பவ இடத்திலேயே பலியாகியிருப்பதும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. சொகுசு கார், எந்த விதமான வாகனம் என்பதைக் கண்டுபிடிக்க முடியாத அளவுக்கு உருகுலைந்து நிற்கிறது.

கார் மோதிய வேகத்தில் டிரக்கின் பின்பக்க டயர் தனியாக உடைந்து அடுத்தப் பக்கத்தில் இருந்த சாலையில் விழுந்துள்ளது. இந்த டயர் மோதியதில், மற்றொரு கார் ஒன்றும் விபத்தில் சிக்கியது.

விபத்தில் சிக்கிய வாகனங்களால் அப்பகுதியில் போக்குவரத்து கடுமையாக பாதிக்கப்பட்டது. கிரேன்கள் வந்து வாகனங்களை அப்புறப்படுத்திய பிறகே ஓரளவுக்கு நிலைமை சீரானது.

# வளர்ப்பு நாய்களுக்கு உரிமம் பெறாதோரின் வீடுகளுக்குச் சென்று அபராதம் விதிக்கப்படும் : கால்நடை பராமரிப்பு அலுவலர் எச்சரிக்கை



**சென்னை, பிப்.14:**

சென்னை மாநகராட்சியில் வளர்ப்பு நாய்களுக்கு உரிமம் பெறாதோரின் வீடுகளுக்குச் சென்று அபராதம் விதிக்கும் நடவடிக்கை ஓரிரு வாரங்களில் தொடங்கவுள்ளது என கால்நடை பிரிவு அலுவலா கமால் உசேன் தெரிவித்தாா்.

இது குறித்து அவா் சென்னை மாநகராட்சி அலுவலகத்தில் செய்தியாளா்களிடம் வியாழக்கிழமை கூறியதாவது:

சென்னை மாநகராட்சியில் மொத்தம் 1.80 லட்சம் தெரு நாய்கள் இருப்பதாக கடந்த 2024- ஆம் ஆண்டில் கணக்கெடுக்கப்பட்டது. அவற்றில் 1.47 லட்சம் தெரு நாய்களுக்கு ரேபீஸ் தடுப்பூசி செலுத்தப்பட்டது. அவற்றில் 16,611 தெரு நாய்களுக்கு தடுப்பூசியுடன், கருத்தடை சிகிச்சையும் அளிக்கப்பட்டு, கண்காணிக்க 'மைக்ரோ சிப்' பொருத்தப்பட்டுள்ளது. எஞ்சிய 33,000 தெரு நாய்களைக் கண்டறிந்து தடுப்பூசி செலுத்துவதில் நடைமுறைச் சிக்கல்கள் உள்ளன.

வீடு வீடாக சென்று அபராதம்...

சென்னை மாநகராட்சியில் சுமாா் 1 லட்சத்துக்கும் மேற்பட்ட வளா்ப்பு நாய்கள் உள்ளதாக தெரியவந்துள்ளது. ஆனால், தற்போது வரையில் 74,000 வளா்ப்பு நாய்களுக்கு மட்டுமே அவற்றின் உரிமையாளா்கள் உரிமம், தடுப்பூசி மற்றும் மைக்ரோ சிப் பொருத்தி உள்ளனா்.

வளா்ப்பு நாய்களுக்கு உரிமம் பெறாத மற்றும் அவற்றை நடை பயிற்சிக்கு அழைத்து வரும்போது வாய்க்கவசம், சங்கிலி உள்ளிட்டவை இல்லாத நிலையில் 611 பேருக்கு கடந்த 2 மாதங்களில் அபராதம் விதிக்கப்பட்டுள்ளன. அத்துடன் ஓரிரு வாரங்களில் வளா்ப்பு நாய்கள் உள்ள வீடுதோறும் சென்று அவற்றுக்கு உரிமம் பெறாதவா்களுக்கு தலா ரூ.5,000 அபராதம் விதிக்கப்படவுள்ளது.

மாடுகளுக்கு மைக்ரோ சிப்...

சென்னையில் கால்நடைகளுக்கு உரிமம் பெற்று, மைக்ரோ சிப் பொருத்தும் நடவடிக்கைகள் தொடா்பாக இரு பெரிய கால்நடை வளா்ப்போா சங்கங்கள் மூலம் அவற்றின் உறுப்பினா்களுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. சில நாள்களில் கால்நடைகள் பாதுகாப்பு மையத்தில் உள்ள மாடுகளுக்கு உரிமம் வழங்கி, மைக்ரோ சிப் பொருத்தப்படும். அதன்பிறகு அபராதம் உள்ளிட்ட நடவடிக்கைகள் செயல்படுத்தப்படும் என்றாா்.

# வயது வந்தோருக்கான டயப்பர்களுக்கு ஜி.எஸ்.டியிலிருந்து விலக்களிக்க முடியுமா?: முடிவெடுக்க டில்லி உயர்நீதிமன்றம் உத்தரவு

**புதுடெல்லி, பிப்.14:**

டில்லி உயா் நீதிமன்றம், வயது வந்தோருக்கான டயப்பா்களை ஜிஎஸ்டியிலிருந்து விலக்குவது குறித்து ஆறு மாதங்களுக்குள் முடிவு செய்யுமாறு மத்திய அரசுக்கும் ஜிஎஸ்டி கவுன்சிலுக்கும் உத்தரவிட்டது.

இந்த தயாரிப்பின் அத்தியாவசிய பங்கை எடுத்துரைக்கும் இரண்டு மாற்றுத்திறனாளிகள் தாக்கல் செய்த மனுவைத் தொடா்ந்து, இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது

நீதிபதிகள் நிதின் வாசுடியோ சாம்ப்ரே மற்றும் அஜய் திக்பால் ஆகியோா் பிப்ரவரி 11, 2026 அன்று மாற்றுத்திறனாளி மனுதாராகளான ஸ்வா்ணலதா ஜே மற்றும் டி.எஸ். குருபிரசாத் ஆகியோரின் மனுவை விசாரித்து இந்த உத்தரவை பிறப்பித்தனா.

வயது வந்தோருக்கான டயப்பாகள் ஊனமுற்றோா, முதியவாகள் மற்றும் நாள்பட்ட நோய்வாய்ப்பட்டவாகள் மத்தியில் சுகாதாரத்திற்கு இன்றியமையாதவை என்றும், ஆனால் அவற்றிற்கு 5 வரி விதிக்கப்படுவதாகவும் அவாகள் வாதிட்டனா

மனுதாராகள் சாா்பாக மூத்த வழக்குரைஞா ஷைல் ட்ரெஹான் ஆஜராகி, வயது வந்தோருக்கான டயப்பாகளைப் பயன்படுத்துபவா்கள் மிகவும் பாதிக்கப்படக்கூடியவாகள் என்றும், அரசாங்கமும் ஜிஎஸ்டி கவுன்சிலும் இந்த தயாரிப்புக்கு வரியிலிருந்து விலக்கு அளிப்பது குறித்து பரிசீலிக்க வேண்டும் என்றும் கூறினாா.

மேலும், வயது வந்தோருக்கான டயப்பாகளுக்கு ஜிஎஸ்டி விலக்கு மறுப்பதும், அதே நேரத்தில் சானிட்டரி நாப்கின்கள் மற்றும் பல மருந்துகள் மற்றும் கருத்தடை சாதனங்களுக்கு விலக்கு அளிப்பதும், அரசியலமைப்பின் பிரிவுகள் 14, 19 மற்றும் 21 மற்றும் 2016 மாற்றுத்திறனாளிகள் உரிமைகள் சட்டத்தின் விதிகளை மீறுவதாக மனுவில் வாதிடப்பட்டுள்ளது.

இருப்பினும், ஜிஎஸ்டி கவுன்சில் சாா்பாக ஆஜரான வழக்குரைஞா, பொருட்களுக்கு வரி விதிப்பது அல்லது விலக்கு அளிப்பது ஒரு கொள்கை முடிவு என்று கூறினாா. அனைத்து மாநிலங்களின் பிரதிநிதிகளையும் கொண்ட கவுன்சிலால் இந்த முடிவு எடுக்கப்படுகிறது என்றும் அவா கூறினாா. இது ஒருதலைப்பட்சமான முடிவு அல்ல என்று அவா மேலும் கூறினாா.

சிறிது நேரம் வழக்கை விசாரித்த பிறகு, மனுதாராகள் அரசாங்கத்திற்கும், ஜிஎஸ்டி கவுன்சிலுக்கும் இது தொடா்பாக மனு அளித்துள்ளனா, ஆனால் அது குறித்து இன்னும் எந்த முடிவும் எடுக்கப்படவில்லை என்று நீதிமன்றம் குறிப்பிட்டது.

எனவே, ஆறு மாதங்களுக்குள் இது குறித்து முடிவெடுக்குமாறு நீதிமன்றம் பிரதிவாதிகளான மத்திய அரசுக்கும் ஜிஎஸ்டி கவுன்சிலுக்கும் உத்தரவிட்டது

மனுதாராகள் சாா்பில் செப்டம்பா 2025 ல் கொடுக்கப்பட்ட மனுவை கருத்தில் கொண்டு ஆகஸ்ட் 2026 க்குள் ஒரு முடிவை எடுக்குமாறு மத்திய அரசுக்கும் ஜிஎஸ்டி கவுன்சிலுக்கும் தில்லி உயா்நீதிமன்றம் உத்தரவிட்டது .

# க்ரைம் கார்னர்

## மங்களூருவில் 9 இளம்பெண்களை திருமணம் செய்து ஏமாற்றிய 'கல்யாண மன்னன்" கைது

**பெங்களூரு, பிப்.14:**

கர்நாடக மாநிலம் மங்களூரு தாலுகா காவூரை சேர்ந்த இளம்பெண் ஒருவர் காவூர் போலீசில் புகார் அளித்தார். அதில், திருமண இணையதளம் (மேட்ரிமோனி) மூலம் சுஷாந்த் பூஜாரி (வயது 32) என்பவரின் அறிமுகம் எனக்கு கிடைத்தது. அவர் என்னை திருமணம் செய்து கொள்வதாக ஆசை வார்த்தைகள் கூறி, என்னிடம் பல லட்சம் ரூபாய் வாங்கினார். ஆனால் அதன்பிறகு என்னுடன் பழகுவதை நிறுத்தி விட்டார். அவர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என கூறியிருந்தார். அதன்பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வந்தனர். இந்த நிலையில் பெண்ணை திருமணம் செய்து ஏமாற்றியதாக சுஷாந்த் பூஜாரியை போலீசார் கைது செய்தனர். இதையடுத்து போலீசார் அவரை கோர்ட்டில் ஆஜர்படுத்தி காவலில் எடுத்து விசாரித்தனர். அப்போது அவரிடம் நடத்திய விசாரணையில், திடுக்கிடும் தகவல்கள் வெளியாகி உள்ளது. சுஷாந்த் பூஜாரி, மங்களூருவை சேர்ந்த 2 பெண்கள், பெங்களூருவை சேர்ந்த 2 பெண்கள், மும்பையை சேர்ந்த 2 பெண்கள் உள்பட மொத்தம் 9 பேரை திருமணம் செய்து நகை-பணத்தை மோசடி செய்தது தெரியவந்தது.

## திருவான்மியூர் கொலை வழக்கு: கீழமை நீதிமன்ற உத்தரவை ரத்து செய்தது ஐகோர்ட்

**சென்னை, பிப்.14:**

கடந்த 2010-ம் ஆண்டு ஜூன் 14-ம் தேதி, திருவான்மியூரை சேர்ந்த எழுமலை என்பவர் தனது வீட்டின் முன் நின்றிருந்தபோது, முன்விரோதம் காரணமாக ஒரு கும்பலால் சரமாரியாக வெட்டிக்கொலை செய்யப்பட்டார். இது தொடர்பாக 16 பேர் மீது போலீசார் வழக்குப்பதிவு செய்தனர். இதில் இருவர் வழக்கு விசாரணை நடத்துக்கொண்டு இருந்தபோதே உயிரிழந்துவிட்டனர். மீதம் இருந்த 14 பேர் மீது தொடர்ந்து விசாரணை நடைபெற்றது. கடந்த 2017-ம் ஆண்டு இந்த வழக்கை விசாரித்த விசாரணை நீதிமன்றம், போதிய ஆதாரங்கள் இல்லை எனக் கூறி மீதம் இருந்த 14 பேரையும் விடுதலை செய்துள்ளது. இந்த தீர்ப்பை எதிர்த்து தமிழக அரசு தரப்பில், உயர் நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப்பட்டது. இந்த வழக்கை நீதிபதிகள் பி.வேல்முருகன், எம்.ஜோதிராமன் ஆகியோர் அடங்கிய அமர்வில் விசாரணைக்கு வந்தது. அப்போது அரசு கூடுதல் குற்றவியல் வழக்கறிஞர் ஏ.தாமோதரன் ஆஜராகி குற்றச்சாட்டை ஆதாரப் பூர்வமாக நிரூபித்தார்.

அதையடுத்து, இந்த வழக்கின் சாட்சிகளையும் தடயங்களையும் மீண்டும் மறு ஆய்வு செய்த நீதிபதிகள், கொலையை நேரில் பார்த்த பலியான எழுமலையின் மனைவி மற்றும் பிள்ளைகளின் வாக்குமூலங்கள் மிகவும் நம்பகத் தன்மையுடன் இருப்பதாக சுட்டிக்காட்டினர். சிறிய முரண்பாடுகளை காரணம் காட்டி, திட்டமிட்டு கொலை செய்த கும்பலை விடுவிக்க முடியாது என்று கூறி, விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்பை ரத்து செய்த சென்னை உயர் நீதிமன்றம், வழக்கில் தொடர்புடைய 9 பேரை குற்றவாளியாக அறிவித்து உத்தரவிட்டுள்ளது.

## பாங்காக்-சென்னை விமானத்தில் 31 வன விலங்குகள் கடத்தல் - ஒருவர் கைது

**சென்னை, பிப்.14:**

மீனம்பாக்கத்தில் உள்ள சர்வதேச விமான நிலையத்திற்கு சென்னை விமான நிலையத்தில் பாங்காக்கில் இருந்து விமானத்தில் வந்திறங்கிய பயணிகளிடம் விமான நிலைய அதிகாரிகள் சோதனை மேற்கொண்டனர். அப்போது சந்தேகத்திற்கு இடமான வகையில் நடந்து கொண்ட ஒரு பயணியை சுங்கத்துறை அதிகாரிகள் தனியாக அழைத்துத்தீவிர சோதனை நடத்தினர். அப்போது அவரது பையில் மின்சாதன பொருட்களின் கீழ் மறைத்து வைக்கப்பட்டிருந்த பெட்டிகளில் அரிய வகை ஆமைகள், பாம்புகள், பல்லிகள் உள்ளிட்ட 31 வன விலங்குகள் உயிருடன் இருந்ததை கண்டுபிடிக்கப்பட்டது. அவை அழிந்து வரும் உயிரினங்கள் என்பது உறுதி செய்யப்பட்ட நிலையில், அவற்றை அதிகாரிகள் மீண்டும் தாய்லாந்திற்கு அனுப்பி வைத்தனர்.

# வணிகச் செய்திகள்

## மன்னா சத்து மாவு: உலகம் முழுவதும் ரிலையன்ஸ் விநியோக திட்டம்

**பெங்களூரு, பிப்.14:**

ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட்டின் எப்.எம்சிஜி பிரிவான ரிலையன்ஸ் கன்ஸ்யூமர் ப்ராடக்ட்ஸ் லிமிடெட், தமிழ்நாட்டின் முன்னணி சுகாதார உணவு தயாரிப்பாளரான சதர்ன் ஹெல்த் ஃபுட்ஸ் பிரைவேட் லிமிடெட்டை கையகப்படுத்தியுள்ளது. அதன் முதன்மை பிராண்டான மன்னாவால் பிரதிநிதித்துவப் படுத்தப்படும் இந்த நிறுவனம் , இரண்டு தசாப்தங்களுக்கும் மேலாக பரந்த அளவிலான ஆரோக்கியமான உணவுகளின் முன்னணி உற்பத்தியாளராக உள்ளது.

மன்னாவை சேர்ப்பது, வளர்ந்து வரும் சிறுதானிய உணவுப் பிரிவில் வலுவான வணிகத்தை உருவாக்குவதன் மூலம், உதயம், இன்டிபென்டன்ஸ் மற்றும் SIL போன்ற பிராண்டுகளை உள்ளடக்கியது. 'ரிலையன்ஸ் கன்ஸ்யூமர்' நிறுவனத்தின் மலிவு விலையில் உலகளாவிய தரத்தை' வழங்குவது நோக்கம்.

நிறுவனத்தின் இயக்குநர் டி.கிருஷ்ணகுமார் கூறுகையில், "மன்னா தமிழ் நாட்டின் ஆரோக்கியத்தை மையமாகக் கொண்ட உணவுச்சந்தையில் மிகவும் நம்பகமான பெயர்களில் ஒன்றாகும். அண்டை மாநிலங்களில் குறிப்பிடத்தக்க இருப்பைக் கொண்டுள்ளது. இது தினை சார்ந்த ஸ்டேபிள்ஸ் மற்றும் கலவைகள், பானங்கள் மற்றும் குழந்தை உணவு போன்ற ஆரோக்கியமான சலுகைகளுக்கு பெயர் பெற்றது. நிறுவனத்தின் சத்தான உணவுகளை வழங்க உதவும் என்றார்.

# எப்ஸ்டீன் தொடர்புக்காக ஹர்தீப் பூரி பதவி விலக வலியுறுத்தி காங். எம்.பி.க்கள் ஆர்ப்பாட்டம்

**புதுடெல்லி, பிப்.14:**




நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடரின் 12-ம் நாளான இன்று நாடாளுமன்ற வளாகத்தில் காங்கிரஸ் எம்பிக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். ஜெஃப்ரி எப்ஸ்டீனுடன் மத்திய பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சர் ஹர்தீப் சிங் பூரிக்கு தொடர்பு இருந்ததாக மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி நேற்று செய்தியாளர்களிடம் கூறி இருந்த நிலையில், இன்று இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

அமெரிக்காவின் நியூயார்க் நகரை சேர்ந்த பிரபல தொழிலதிபர் ஜெப்ரி எப்ஸ்டீன். புளோரிடா மாகாணம், பாம் பீச் பகுதியில் இருந்த அவருக்குச் சொந்தமான பண்ணை வீடுகளில் சிறுமிகள் பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டதாக கடந்த 2005-ம் ஆண்டில் புகார்கள் எழுந்தன.

இதுதொடர்பான வழக்கில் ஜெஃப்ரிக்கு 13 மாதங்கள் சிறை தண்டனை விதிக்கப்பட்டது. சிறையில் இருந்து அவர் வெளியே வந்த பிறகும் சிறுமிகளை கடத்தி பாலியல் தொழிலில் ஈடுபடுத்திய வழக்கில் கடந்த 2019-ம் ஆண்டு ஜூலையில் அவர் மீண்டும் கைது செய்யப்பட்டார். கடந்த 2019 ஆகஸ்ட் 10-ம் தேதி மான் ஹாட்டன் சிறையில் அவர் தற்கொலை செய்து கொண்டார்.

அமெரிக்க அதிபர் ட்ரம்ப், பல்வேறு உலக நாடுகளின் தலைவர்கள், அமெரிக்காவின் முன்னணி தொழிலதிபர்களுக்கு எப்ஸ்டீனுடன் நெருங்கிய தொடர்பு இருந்ததாகக் கூறப்படுகிறது. இவை தொடர்பான ஆவணங்கள், புகைப்படங்கள், வீடியோக்கள் வெளியாகி அதிர்வலைகளை ஏற்படுத்தி வருகின்றன.

இந்நிலையில், ஜெஃப்ரி எப்ஸ்டீன் தொடர்பான கோப்புகளில் ஹர்தீப் சிங் பூரியின் பெயர் இடம் பெற்றுள்ளதாக ராகுல் காந்தி நேற்று குற்றம் சாட்டியிருந்தார். நாடாளுமன்ற வளாகத்தில் செய்தியாளர்களிடம் பேசிய ராகுல் காந்தி, "எப்ஸ்டீன் கோப்புகளில் ஹர்தீப் சிங் பூரி, அனில் அம்பானி ஆகியோரின் பெயர்கள் உள்ளன. இது தொடர்பாக என்னிடம் உள்ள தரவுகளை நான் அங்கீகரிக்கிறேன்" என தெரிவித்திருந்தார்.

இதற்குப் பதிலளித்த அமைச்சர் ஹர்தீப் சிங் பூரி, "நான் சர்வதேச அமைதி நிறுவனத்தில் பணியாற்றியபோது, அதன் தலைவர் டெர்ஜே ரோட்-லார்சன் மூலம் எப்ஸ்டீனை சந்தித்தேன். ஒட்டுமொத்தமாக 3 அல்லது அதிகபட்சம் 4 முறை மட்டுமே அவரைச் சந்தித்துள்ளேன். அதுவும் ஒரு தூதுக்குழுவின் ஒரு பகுதியாகவே அந்த சந்திப்புகள் நடைபெற்றன. அவரது குற்றச் செயல்களுக்கும் எனக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. ராகுல் காந்தியின் குற்றச்சாட்டுக்கள் கோமாளித்தனத்தின் உச்சம். அவரது கருத்துக்கள் பொழுதுபோக்கு அம்சங்களைப் போன்றவை. ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்களை முன்வைப்பது அவரது வாடிக்கை. என்று தெரிவித்தார்.

# டில்லி மாநகராட்சி எம்டிஎஸ் ஊழியர்களுக்கு சம ஊதியம் அறிவிப்பு: பட்ஜெட்டில் ரூ.50 கோடி ஒதுக்கீடு

**புதுடெல்லி, பிப்.14:**

டில்லி மாநகராட்சி ஊழியர்களின் நீண்டகால கோரிக்கையை நிவர்த்தி செய்யும் வகையில், எம்டிஎஸ் பிரிவின் கீழ் உள்ள அனைத்து ஊழியர்களுக்கும் சம ஊதியம் வழங்குவதாக தில்லி அரசு அறிவித்துள்ளது.

இந்த முடிவு, சுமார் 4,000 ஊழியர்களுக்கு பயனளிக்கும் என்றும் இதற்காக மாநகராட்சி பட்ஜெட்டில் ரூ.50 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது என்றும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

செய்தியாளர்கள் சந்திப்பில் இந்த அறிவிப்பை வெளியிட்ட மாநகராட்சி மேயர் ராஜா இக்பால் சிங் கூறுகையில், 'சம ஊதியம் என்பது பல ஆண்டுகளாக எம்டிஎஸ் ஊழியர்களால் தொடர்ந்து எழுப்பப்படும் கோரிக்கையாகும். இப்போது, அவர்களுக்கு அளித்த வாக்குறுதியை பாஜக அரசு நிறைவேற்றியுள்ளது. இது மாநகராட்சி ஊழியர்கள் மீதான பாஜகவின் அர்ப்பணிப்பு மற்றும் உணர்திறனை பிரதிபலிக்கிறது. முந்தைய அரசு உத்தரவாதங்களை மட்டுமே வழங்கி வந்த நிலையில் பாஜக அரசு அதை செயல்படுத்தி காட்டியுள்ளது' என தெரிவித்தார்.

# பட்ஜெட் மீதான விவாதத்தில் நிர்மலா சீதாராமன் உரைக்கு பிரதமர் மோடி பாராட்டு



**புதுடெல்லி, பிப்.14:**

மக்களவையில் பட்ஜெட் மீதான விவாதத்தில் மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் பதில் உரையாற்றினார்.

அதைப் பாராட்டி எக்ஸ் தளத்தில் பிரதமர் மோடி கூறியிருப்பதாவது:

"நாட்டின் பொருளாதார மாற்றத்துக்கு இந்தாண்டு பட்ஜெட் எவ்வாறு தனது பங்களிப்பை அளிக்கும் என்பதை மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் விரிவாக விளக்கினார். விரைவான சீர்திருத்தங்கள், குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு ஆதரவு, திறன்மேம்பாடு, அடுத்த தலைமுறை கட்டமைபுக்கான நடவடிக்கைகள், சுகாதாரத்துறை மேம்பாட்டுக்கான முயற்சிகள், கல்வி மற்றும் இதர துறை நடவடிக்கைகளை அவர் எடுத்துரைத்தார். முதலீட்டு செலவினம் ரூ.17.1 லட்சம் கோடியாக உயர்ந்துள்ளது. இது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (ஜிடிபி) 4.4 சதவீதம் என்றும் நிதியமைச்சர் தெரிவித்துள்ளார். இவ்வாறு பிரதமர் மோடி கூறியுள்ளார்.

# "மத்திய அமைச்சர் கிரண் ரிஜிஜு கூறுவது பொய்" காங். பொதுச் செயலர் பிரியங்கா காந்தி மறுப்பு

**புதுடெல்லி, பிப்.14:**



நாடாளுமன்றத்தில் நடந்ததாக மத்திய அமைச்சர் கிரண் ரிஜிஜு கூறுவது பொய் என்று காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலர் பிரியங்கா காந்தி மறுப்பு தெரிவித்துள்ளார்.

கடந்த பிப்ரவரி 4ம் தேதி மக்களவையில் பிரதமரை சூழ்ந்து கொண்டு காங்கிரஸ் எம்.பி.க்கள் தாக்க திட்டமிட்டனர் என்று சபாநாயகர் ஓம் பிர்லா தெரிவித்திருந்தார். இந்நிலையில் மக்களவையில் காங்கிரஸ் பெண் எம்.பி.க்கள் நடத்திய ஆர்ப்பாட்டம் மற்றும் அவைத் தலைவர் ஓம் பிர்லா அறைக்குள் சென்று வாக்குவாதம் செய்தது ஆகிய வீடியோக்களை மத்திய நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் கிரண் ரிஜிஜு வெளியிட்டுள்ளார். மேலும், 20-க்கும் மேற்பட்ட காங்கிரஸ் எம்.பி.க்கள் மக்களவை சபாநாயகர் ஓம் பிர்லாவின் அறைக்குள் நுழைந்து அவரை அவதூறாகப் பேசி மிரட்டியதாக கிரண் ரிஜிஜு குற்றம்சாட்டியுள்ளார்.

இதுகுறித்து பிரியங்கா காந்தி நேற்று கூறியதாவது: சபாநாயகர் ஓம் பிர்லா அறைக்குள் சென்ற நாங்கள் யாரையும் திட்டவில்லை. 2 எம்.பி.க்கள் மட்டும் கிளர்ந்தெழுந்தனர். அவர்கள் அதை வெளிப்படுத்தினர். நான் அவர்களை ஊக்குவித்ததாக மத்திய அமைச்சர் கிரண் ரிஜிஜு கூறுகிறார். இது முழுக்க முழுக்க பொய். நான் அமைதியாக அமர்ந்திருந்தேன். இறுதியில், நான் சில விஷயங்களை அமைதியாகச் சொன்னேன். மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்திக்கு எதிராக வழக்குகள் தொடருதல் உள்ளிட்ட அனைத்தையும் அவர்கள் செய்வார்கள். ஆனால் எதுவும் ராகுல் காந்தியை பாதிக்க போவதில்லை. இவ்வாறு பிரியங்கா காந்தி கூறினார்.

இதேபோல இசையை ஒலிக்கும் சாலைகள் ஹங்கேரி, ஜப்பான், தென்கொரியா மற்றும் ஐக்கிய அரபு அமீரகம் ஆகிய நாடுகளில் அமைக்கப்பட்டுள்ளது. இந்தியாவில் இதுவே முதல் பரிசோதனை முயற்சி ஆகும்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பிற மொழிகளையும் கற்றுக்கொள்ள வேண்டும்: வெங்கைய நாயுடு

**புதுடெல்லி, பிப்.14:**

மாணவர்கள் தாய்மொழியுடன் பிற மொழிகளையும் ஆர்வத்துடன் கற்றுக்கொள்ளவேண்டும் என முன்னாள் குடியரசு துணைத் தலைவர் வெங்கைய நாயுடு வலியுறுத்தினார்.

சென்னையை அடுத்த காட்டாங்கொளத்தூர் எஸ்ஆர்எம் கலை அறிவியல் கல்லூரியின் 28-ஆவது பட்டமளிப்பு விழா வியாழக்கிழமை நடைபெற்றது. பல்கலைக்கழக வேந்தர் டி.ஆர்.பாரிவேந்தர் தலைமையில் நடைபெற்ற விழாவில் 1,070 பேருக்குப் பட்டம் வழங்கப்பட்டன.

இதில், சிறப்பு அழைப்பாளராகப் பங்கேற்ற முன்னாள் குடியரசு துணைத் தலைவர் வெங்கைய நாயுடு, மாணவர்களுக்குப் பட்டங்களை வழங்கி பேசியதாவது:

ஹிந்திதிணிக்கப்படக்கூடாதுஎன்பதில்நான்உறுதியாக இருக்கிறேன். எனினும் ஹிந்தியை முழுமையாகவும் எதிர்க்கக் கூடாது. நாட்டின் பல்வேறு பகுதிகளில் பணிபுரிய விரும்பினால் ஹிந்தி மொழி அவசியமாகும். அதேபோல், சர்வதேச இணைப்பு மொழியான ஆங்கிலத்தையும் மாணவர்கள் கற்றுக்கொள்ள வேண்டும். தாய்மொழியில் பேசுவதைப் பெருமையாகக் கருதுங்கள். வேலைக்காக வெளிநாடுகளுக்குச் சென்றாலும், மீண்டும் உங்கள் தாய்நாட்டுக்குத் திரும்பிவந்து சேவை செய்யுங்கள். உங்களுக்கு வாழ்வு அளித்த சமூகத்துக்கு மீண்டும் எதையாவது திருப்பித் தாருங்கள். புதிய தொழில்நுட்பங்களைக் கற்று கொண்டு சவால்களை எதிர்கொள்ளும் வகையில் மாணவர்கள் தங்களின் திறமைகளை மேம்படுத்திக் கொள்ள வேண்டும் என்றார் அவர். இந்த நிகழ்வில் எஸ்ஆர்எம் கல்விக் குழுமத் தலைவர் ரவி பச்சமுத்து, தாளாளர் ஹரிணி ரவி முதல்வர் ஆர். வாசுதேவராஜ் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

# சபரிமலை தங்கம் திருட்டு வழக்கு: புதிய 'சாம்பிள்' திரட்டிய எஸ்ஐடி



**பத்தனம்திட்டா, பிப்.14:**

சபரிமலை ஐயப்பன் கோயிலில் தங்கத் தகடுகளில் தங்கம் திருடு போன வழக்கை கேரள குற்றப்பிரிவு ஏடிஜிபி தலைமையிலான சிறப்பு புலனாய்வுக் குழு (எஸ்ஐடி) விசாரித்து வருகிறது.

இந்த வழக்கில் முக்கிய குற்றவாளியாக கருதப்படும் தொழிலதிபர் உன்னி கிருஷ்ணன் போத்தி உள்ளிட்டோர் கைது செய்யப்பட்டனர். இந்நிலையில், உயர் நீதிமன்றம் அளித்த உத்தரவின்படி எஸ்.பி. எஸ்.சசிதரன் தலைமையிலான எஸ்ஐடி குழுவினர் நேற்று சபரிமலைக்கு சென்றனர். கோயில் நடை மாலை 5 மணிக்கு திறக்கப்பட்டது. பல்வேறு பூஜைகளுக்குப் பிறகு கோயில் மூடப்பட்ட பின்னர் புதிய மாதிரிகளை எஸ்ஐடி சேகரித்தது.

அந்த மாதிரிகள் அறிவியல் ஆய்வுக்கு உட்படுத்தப்படும். அதன் பின்னர் பிப்ரவரி 19ம் தேதி நீதிமன்றத்தில் எஸ்ஐடி அறிக்கை தாக்கல் செய்யும்.

# ஜெகன் ஆட்சியில் பல கோயில்களுக்கு கலப்பட நெய் விநியோகம்: சிறப்பு புலனாய்வுக் குழு விசாரணை அறிக்கையில் தகவல்

**ஏலூரு, பிப்.14:**



ஆந்திராவில் கடந்த 2022-ம் ஆண்டு முதல் 2024-ம் ஆண்டு வரை ஜெகன் மோகன் ரெட்டியின் ஆட்சிக் காலத்தில் திருப்பதி ஏழுமலையான் கோயிலுக்கு கலப்பட நெய் விநியோகம் செய்தது உறுதியானது.

இந்நிலையில், காணிப்பாக்கம் வரசித்தி விநாயகர் கோயில், ஸ்ரீகாளஹஸ்தி சிவன் கோயில், ஸ்ரீசைலம் மல்லிகார்ஜுனர் கோயில் மற்றும் ஏலூரில் உள்ள சின்ன திருப்பதி என்றழைக்கப்படும் துவாரகா திருமலை கோயிலிலும் பிரசாதங்களில் இதே கலப்பட நெய் உபயோகப்படுத்தப்பட்டதாக சிபிஐ சிறப்பு புலனாய்வுக் குழு அளித்துள்ள அறிக்கையில் வெட்ட வெளிச்சமாகி உள்ளது.

போலே பாபா பால் நிறுவனம் திருப்பதியில் உள்ள விநாயகா ஏஜென்சிஸ், சுமதி டிரேடர்ஸ் ஆகிய 2 நிறுவனங்களில் இருந்து ரசாயனங்கள் வாங்கி, அதனை நெய் போன்ற திரவத்தில் கலந்தது அம்பலமாகி உள்ளது. இந்த 2 ஏஜென்சிகள் மீது குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த நெய் போன்ற ரசாயனம் கலந்த திரவத்தை திருப்பதி ஏழுமலையான் கோயிலுக்கு மட்டுமல்லாது, ஆந்திராவில் உள்ள பல முக்கிய கோயில்களுக்கும் சுமதி டிரேடர்ஸ் மற்றும் விநாயகா ஏஜென்சிஸ் மூலமாக வாங்கிச் சென்று கடந்த 2022-ம் ஆண்டு முதல் 2024-ம் ஆண்டு வரை விநியோகம் செய்யப்பட்டுள்ளது என சிறப்பு புலனாய்வுக் குழு தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இதனால் தற்போது பக்தர்கள் தங்களின் கோபத்தை சமூக வலைதளம் மூலம் வெளிப்படுத்தி வருகின்றனர். இதற்கு காரணமாக இருந்தவர்கள் கண்டிப்பாக தண்டிக்கப்பட வேண்டும் என்றும் அவர்கள் கருத்து தெரிவித்து வருகின்றனர்.

# தேர்தல் பணிகளுக்கு உதவி: நேபாளத்துக்கு 270 வாகனங்களை பரிசளித்த இந்தியா

**புதுடெல்லி, பிப்.14:**

தேர்தல் தொடர்பான பணிகளுக்கு உதவி செய்யும் நோக்கில், நேபாளத்துக்கு 3-ஆவது கட்டமாக இந்தியா 270 வாகனங்களை பரிசாக அளித்துள்ளது.

நேபாளத் தலைநகர் காத்மாண்டில் உள்ள அந்நாட்டின் உள்துறை அமைச்சகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், 50 லாரிகள் உள்ளிட்ட 270 வாகனங்களை நேபாள உள்துறை அமைச்சர் ஓம் பிரகாஷ் ஆர்யலிடம் அந்நாட்டுக்கான இந்தியத் தூதர் நவீன் ஸ்ரீவாஸ்தவா வழங்கினார்.

அடுத்த மாதம் 5-ஆம் தேதி நேபாளத்தில் பொதுத் தேர்தல் நடைபெறவுள்ளது. இந்தத் தேர்தலில் உதவி செய்யும்படி இந்தியாவிடம் நேபாளம் கோரிக்கை விடுத்திருந்தது. இதையேற்று இந்தியா உதவிகளை செய்து வருகிறது. ஏற்கெனவே 310 வாகனங்கள் மற்றும் சில சாதனங்களை 2 கட்டங்களாக நேபாளத்திடம் இந்தியா கடந்த ஜனவரி மாதம் அளித்தது. இதையடுத்து 3-ஆவது கட்ட உதவியாக தற்போது 270 வாகனங்களை இந்தியா வழங்கியுள்ளது. இந்த உதவிக்காக இந்திய அரசுக்கு நேபாள உள்துறை அமைச்சர் ஆர்யல் நன்றி தெரிவித்து கொண்டுள்ளார்.

# பவானாவில் 17 வயது சிறுவன் கத்தியால் குத்திக் கொலை: 7 பேர் கைது

**புதுடெல்லி, பிப்.14:**

வெளிப்புற வடக்கு டில்லியின் பவானா பகுதியில் 17 வயது சிறுவன் கத்தியால் குத்திக் கொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து 4 சிறார்கள் உள்பட 7 பேர் கைது செய்யப்பட்டதாக காவல் துறையினர் வியாழக்கிழமை தெரிவித்தனர்.

இது தொடர்பாக காவல் துறையினர் மேலும் கூறியதாவது: இந்த சம்பவம் தொடர்பாக புதன்கிழமை இரவு 9:36 மணிக்கு தகவல் வந்தது. ஜேஜே காலனியைச் சேர்ந்த சலீம் என்பவர் கத்திக் குத்துக் காயங்களுடன் உயிரிழந்த நிலையில் கொண்டு வரப்பட்டதாக மருத்துவமனையில் இருந்து தகவல் தெரிவிக்கப்பட்டது.

முன் பகை காரணமாக அன்று இரவு 8:30 மணியளவில் சிலர் அவரை தாக்கியதாகக் கூறப்பட்டது. இது தொடர்பாக நரேலா தொழிற்துறை பகுதி காவல் நிலையத்தில் வழக்குப் பதிவு செய்யப்பட்டது. சிசிடிவி காட்சிகளை ஆய்வு செய்து குற்றஞ்சாட்டப்பட்ட நபர்கள் அடையாளம் காணப்பட்டனர். இதையடுத்து, ஜேஜே காலனியைச் சேர்ந்த சலின் (21), சாஹில் (20), ஃபஹத் (18) ஆகியோர் கைது செய்யப்பட்டனர். மேலும் 4 சிறார்கள் இந்த வழக்கில் கைது செய்யப்பட்டனர். குற்றத்தில் பயன்படுத்தப்பட்ட 4 கத்திகள் பறிமுதல் செய்யப்பட்டது. முகமது ஃபரூக் என்பவருக்கு இந்த வழக்கில் உள்ள தொடர்பு இருப்பதாக சந்தேகிக்கப்படுகிறது.

# நாடு திரும்பினால் மட்டுமே விஜய் மல்லையா மனு விசாரிக்கப்படும்: மும்பை ஐகோர்ட்டு

**மும்பை, பிப்.14:**



ரூ.9 ஆயிரம் கோடி வங்கி கடன் மோசடி வழக்கை தொடர்ந்து, பிரபல தொழில் அதிபர் விஜய் மல்லையா இங்கிலாந்துக்கு தப்பி ஓடினார்.

வெளிநாட்டில் உள்ள அவரை மும்பை சிறப்பு நீதிமன்றம் கடந்த 2019-ல் தப்பியோடிய பொருளாதார குற்றவாளி என அறிவித்தது. இதை எதிர்த்து அவர் மும்பை உயர்நீதிமன்றத்தில் மனு ஒன்றை தாக்கல் செய்தார். அந்த மனுவில், தன்னை தப்பியோடிய பொருளாதார குற்றவாளி என அறிவித்ததை ரத்து செய்ய வேண்டும் என கூறியிருந்தார். மேலும் 2018-ம் ஆண்டு சட்டத்தின் செல்லுபடித்தன்மை குறித்தும் கேள்வி எழுப்பியிருந்தார்.

இந்த மனு மீதான விசாரணை தலைமை நீதிபதி ஸ்ரீசந்திரசேகர் மற்றும் நீதிபதி கவுதம் அன்காட் அடங்கிய அமர்வு முன் நடைபெற்று வருகிறது. கடந்த டிசம்பர் மாதம் நடைபெற்ற விசாரணையின் போது, விஜய் மல்லையா இந்திய நீதிமன்ற வரம்புக்குள் வந்தால் மட்டுமே அவரது மனுவை விசாரிக்க முடியும் என நீதிபதிகள் கூறி விசாரணையை ஒத்திவைத்திருந்தனர்.

இந்த நிலையில் நேற்று நடைபெற்ற விசாரணையின் போது நீதிபதிகள் மீண்டும் அதையே உறுதிப்படுத்தினர்.

இது தொடர்பாக தலைமை நீதிபதி ஸ்ரீசந்திரசேகர் மற்றும் நீதிபதி கவுதம் அன்காட் கூறியதாவது:

"விஜய்மல்லையா கண்டிப்பாக நாடு திரும்ப வேண்டும். அவர் நாடு திரும்பாவிட்டால் இந்த மனுவை விசாரிக்க மாட்டோம். நீங்கள் நீதிமன்ற நடவடிக்கையை தவிர்க்கிறீர்கள்.

வேண்டுமென்றே நீதிமன்ற விசாரணையை புறக்கணித்து விட்டு நிவாரணம் கோர முடியாது. இந்த மனுவை நாங்கள் தள்ளுபடி செய்யவில்லை. உங்களுக்கு மீண்டும் ஒரு வாய்ப்பு வழங்குகிறோம். விஜய் மல்லையா இந்தியாவுக்கு வருகிறாரா? இல்லையா? என்பது குறித்து தெளிவாக எங்களிடம் பிரமாணப் பத்திரம் தாக்கல் செய்ய வேண்டும்."இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர். இந்த மனு மீதான விசாரணையை வரும் 18ஆம் தேதிக்கு நீதிபதிகள் ஒத்திவைத்தனர்.

# வங்கதேசத்தில் ஆட்சியைக் கைப்பற்றியது கலீதா ஜியாவின் பிஎன்பி! பிரதமராகும் தாரிக் ரஹ்மான்!



**டாக்கா, பிப்.14:**

வங்கதேசத்தின் 13-ஆவது நாடாளுமன்றத் தேர்தலில் முன்னாள் பிரதமர் கலீதா ஜியாவின் மகன் தாரிக் ரஹ்மான் தலைமையிலான வங்கதேச தேசியவாதக் கட்சி (பிஎன்பி) ஆட்சியைக் கைப்பற்றியுள்ளது.

ஆட்சி அமைப்பதற்கு தேவையான பெரும்பான்மையை பிஎன்பி பெற்றிருக்கும் நிலையில், தொடர்ந்து ஒருசில தொகுதிகளில் வாக்கு எண்ணிக்கை நடைபெற்று வருகின்றன. ஷேக் ஹசீனா ஆட்சிக் கவிழ்ந்து, முகமது யூனுஸ் தலைமையிலான இடைக்கால அரசு பொறுப்பேற்ற 18 மாதங்களுக்குப் பிறகு பொதுத்தேர்தல் வியாழக்கிழமை நடத்தப்பட்டது.

ஷேக் ஹசீனாவின் அவாமி லீக் கட்சிக்குத் தடை விதிக்கப்பட்டுள்ள நிலையில், பிஎன்பி மற்றும் அதன் முன்னாள் கூட்டாளியான ஜமாத்-ஏ-இஸ்லாமி இடையே நேரடிப் போட்டி நிலவியது. 300 தொகுதிகளைக் கொண்ட வங்கதேச நாடாளுமன்றத்தில், வேட்பாளர் ஒருவரின் மறைவு காரணமாக ஒரு தொகுதியில் தேர்தல் ரத்து செய்யப்பட்டது.

மீதமுள்ள 299 தொகுதிகளில் நேற்று வாக்குப்பதிவு நடைபெற்ற நிலையில், மாலை 4.30 மணிமுதல் வாக்கு எண்ணிக்கை தொடங்கப்பட்டது.

தொடக்கம் முதலே பிஎன்பி கட்சி ஆதிக்கம் செலுத்தி வந்த நிலையில், மொத்தம் 212 தொகுதிகளில் தற்போது வரை வெற்றி பெற்றுள்ளது. எதிர்க்கட்சியான ஜமாத்-ஏ-இஸ்லாமி 70 தொகுதிகளில் வெற்றி பெற்றுள்ளது.

பிஎன்பி தலைவர் தாரிக் ரஹ்மான் போட்டியிட்ட டாக்கா மற்றும் போக்ரா ஆகிய இரு தொகுதிகளிலும் வெற்றி பெற்றுள்ளார். ஆட்சி அமைக்க தனிப்பெரும்பான்மையை பிஎன்பி பெற்றிருக்கும் நிலையில், தாரிக் ரஹ்மான் பிரதமராக பதவியேற்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதனிடையே, தேர்தலுக்கு ஒத்துழைப்பு அளித்த நாட்டு மக்களுக்கு வங்கதேச இடைக்கால அரசின் தலைவர் முகமது யூனுஸ் நன்றி தெரிவித்துள்ளார்.

# மக்கள் போராட்டத்தில் ஒடுக்குமுறை: ஈரான் அதிபர் பகிரங்க மன்னிப்பு



**துபை, பிப். 14:**

ஈரானில் 1979-இல் நடைபெற்ற இஸ்லாமியப் புரட்சியின் 47-ஆவது ஆண்டு விழாவையொட்டி உரையாற்றிய அந்நாட்டு அதிபர் மசூத் பெசஷ்கியான், அரசுக்கு எதிராக நடந்த போராட்டங்களின்போது பாதுகாப்புப் படையினரின் நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்ட மக்களிடம் பகிரங்கமாக மன்னிப்புக் கோரினார். அவர் ஆற்றிய உரை: நாடு தழுவிய போராட்டங்களை ஒடுக்கும்போது ஏற்பட்ட வன்முறைகளால் மக்கள் பெருமளவு துயரத்தைச் சந்தித்தனர். பாதிக்கப்பட்ட அனைத்து மக்களிடமும் நாங்கள் மன்னிப்புக் கோருகிறோம்.

மக்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்வதும், அவர்களின் நலனைப் பாதுகாப்பதும் எங்களின் கடமையாகும். ஈரான் அரசு ஒருபோதும் தனது சொந்த மக்களுக்கு எதிரான மோதலை விரும்பவில்லை. ஈரான் உள்நாட்டுப் போராட்டங்கள் குறித்த அமெரிக்கா போன்ற நாடுகளின் கருத்துகள், வெறும் 'மேற்கத்தியப் பிரசாரம்' மட்டுமே. அதில் உண்மையில்லை. ஈரான் மீதான அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகளின் தேவையற்ற சந்தேகத்தினால், அணுசக்தி குறைப்பு தொடர்பான பேச்சுவார்த்தைகள் தாமதமாகி வருகின்றன. அணு ஆயுதங்களைத் தயாரிக்கும் நோக்கம் ஈரானுக்கு எப்போதும் இல்லை என்றார்.

# 'இந்தியாவுக்கு நன்றி... இரு தரப்பு உறவு வலுப்படும்' - பிஎன்பி நம்பிக்கை

**டாக்கா, பிப்.14:**

வங்கதேச தேர்தல் முடிவுகளை அங்கீகரித்ததற்காகவும், தாரிக் ரஹ்மானுக்கு வாழ்த்து தெரிவித்ததற்காகவும் பிரதமர் நரேந்திர மோடிக்கு நன்றி தெரிவிப்பதாக வங்கதேச தேசியவாத கட்சி தெரிவித்துள்ளது.

வங்கதேச நாடாளு மன்றத்துக்கு நேற்று நடைபெற்ற பொதுத் தேர்தலில், 59.44 சதவீத வாக்குகள் பதிவாகின. இதையடுத்து, வாக்கு எண்ணும் பணி தொடங்கப்பட்டது. மொத்தமுள்ள 299 இடங்களில், வங்கதேச தேசியவாத கட்சி (பிஎன்பி) தலைமையிலான கூட்டணி 212 இடங்களில் வெற்றி பெறும் நிலையில் உள்ளது.



ஜமாத் இ இஸ்லாமி தலைமையிலான கூட்டணி 70 இடங்களில் வெற்றி பெறும் நிலையில் உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. பிஎன்பி 181 இடங்களில் வெற்றி பெற்றுள்ளதாகவும், ஜமாத் இ இஸ்லாமி 61 இடங்களில் வெற்றி பெற்றுள்ளதாகவும் அந்நாட்டின் தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது. மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையுடன் வெற்றி பெற்றுள்ள பிஎன்பி கட்சியின் தலைவர் தாரிக் ரஹ்மானுக்கு வாழ்த்துகள் குவிந்து வருகின்றன. வங்கதேசத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் தொண்டர்கள், டாக்காவில் உள்ள பிஎன்பி தலைமையகத்தில் குவிந்த வண்ணம் உள்ளனர்.

தேர்தல் முடிவுகளை அடுத்து பிரதமர் நரேந்திர மோடி, தாரிக் ரஹ்மானுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்ட எக்ஸ் பதிவில், "வங்கதேச நாடாளுமன்றத் தேர்தலில் தீர்க்கமான வெற்றியை நோக்கி மக்களை அழைத்துச் சென்ற தாரிக் ரஹ்மானுக்கு எனது மனமார்ந்த வாழ்த்துகளை தெரிவித்துக்கொள்கிறேன். இந்த வெற்றி, வங்கதேச மக்கள் உங்கள் தலைமை மீது வைத்திருக்கும் நம்பிக்கையைக் காட்டுகிறது.

ஜனநாயக, முற்போக்கான, அனைவரையும் உள்ளடக்கிய வாங்கதேசத்துக்கு இந்தியா தொடர்ந்து ஆதரவு அளிக்கும். நமது பன்முக உறவுகளை வலுப்படுத்தவும், நமது பொதுவான வளர்ச்சி இலக்குகளை முன்னேற்றவும் உங்களுடன் இணைந்து பணியாற்றுவதை நான் எதிர்நோக்குகிறேன்" என தெரிவித்துள்ளார்.

# 'அதிபர் ஜின் பிங்கை சந்திக்கவுள்ளேன்'.. சீன பயணத்தை உறுதிசெய்த டிரம்ப்!

**வாஷிங்டன், பிப்.14:**

அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் வருகிற ஏப்ரல் மாதம் சீன அதிபர் ஷி ஜின் பிங்கை சந்திக்கவுள்ளதை உறுதிப்படுத்தியுள்ளார். இந்தச் சந்திப்பில் வாஷிங்டன் - பெய்ஜிங் இடையே நட்புறவை மீண்டும் வலுப்படுத்தியுள்ளது.

சீன அதிபர் ஷி ஜின்பிங்கை சந்திப்பதற்காக அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் வரும் ஏப்ரல் மாதம் பெய்ஜிங் செல்வதாகத் தகவல் வெளியாகியிருந்தது.

மேலும், நிகழாண்டில் (2026) சீன அதிபர் ஜின்பிங் அமெரிக்காவுக்கு அரசு முறைப் பயணம் மேற்கொள்வார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த பிப். 4 ஆம் தேதி சீன அதிபர் ஜின் பிங்குடன் செல்போன் வாயிலாக டிரம்ப் உரையாடினார். அந்த



உரையாடலின்போது, சீனா வருமாறு அதிபர் டிரம்ப் மற்றும் அவரது மனைவிக்கு அதிபர் ஜின்பிங் அழைப்பு விடுத்ததாகக் கூறப்படுகிறது. அதனடிப்படையிலேயே டிரம்ப் பயணம் மேற்கொள்ள விருக்கிறார்.

இதுகுறித்து தனது ட்ரூத் சோஷியல் பக்கத்தில் அமெரிக்க அதிபர் டிரம்ப் பதிவு ஒன்றையும் வெளியிட்டுள்ளார்.

அந்தப் பதிவில், "நான் ஏப்ரல் மாதம் அதிபர் ஜி ஜின்பிங்கை சந்திக்கப் போகிறேன். அவர் இந்த ஆண்டின் பிற்பகுதியில் அவர் அமெரிக்கா வருவார். அதை நான் ஆவலுடன் வரவேற்க காத்திருக்கிறேன்.

சீனாவுடனான எங்கள் உறவு இப்போது மிகவும் நன்றாக உள்ளது" என்றும் பதிவிட்டுள்ளார்.

# வடகொரியாவின் அடுத்த வாரிசாக மகள்! அதிகாரப்பூர்வ அறிவிப்பு விரைவில்?

**வடகொரியா, பிப்.14:**

வடகொரிய அதிபர் கிம் ஜாங் உன்னின் மகள் கிம் ஜு ஏ, அந்த நாட்டின் அடுத்த அரசியல் வாரிசாக விரைவில் அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட வாய்ப்புள்ளதாக தென்கொரிய உளவு அமைப்பான என்ஐஎஸ் தெரிவித்துள்ளது.

தென்கொரிய நாடாளு மன்றக் குழுவிடம் என்ஐஎஸ் தாக்கல்செய்த அறிக்கையின்படி, சுமார் 13 வயதாகும் கிம் ஜு ஏ அடுத்த அரசியல் வாரிசு ஆவதற்கான பயிற்சிகளை ஏற்கெனவே முடித்துவிட்டதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

2022-ஆம் ஆண்டு முதல் தனது தந்தையுடன் இணைந்து ஏவுகணைச் சோதனைகள் மற்றும் ராணுவ அணிவகுப்புகளில் அவா் பங்கேற்று வருகிறாா். சமீபத்திய சீன பயணத்தில் உலக நாடுகளின் கவனத்தை பெரிதும் ஈா்த்தாா்.

வடகொரியாவின் மிக முக்கியமான அரசியல் நிகழ்வான தொழிலாளா் கட்சி மாநாடு இம்மாத இறுதியில் நடைபெறுகிறது.



இந்த மாநாட்டில் கிம் ஜு ஏவுக்குக் கட்சியின் முக்கியப் பொறுப்புகள் வழங்கப்படலாம் அல்லது அவாதான் அடுத்த அதிபா் என்பதற்கான மறைமுக அறிவிப்புகள் வெளியாகலாம் என்று எதிா்பாா்க்கப்படுகிறது.

ஆணாதிக்கம் நிறைந்த வடகொரிய அரசியலில், ஒரு பெண் தலைமையை ஏற்று நடத்த முடியுமா என்ற சந்தேகம் தொடக்கத்தில் இருந்தது. ஆனால், தற்போது ராணுவம் மற்றும் கொள்கை சாா்ந்த முடிவுகளில் தனது மகளின் ஆலோசனைகளை அதிபா் கிம் ஜாங் உன் கேட்க தொடங்கியுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தந்தை மறைவால், கிம் ஜாங் உன் தனது 26-ஆவது வயதில் அவசர கதியில் பதவிக்கு வந்த நிலையில், தனது மகளை மிக இளம் வயதிலேயே மக்கள் முன்னிலையில் அறிமுகப்படுத்தி, அடுத்த தலைமுறை ஆட்சிக்கான அடித்தளத்தை இப்போதே அவா் பலப்படுத்தி வருகிறாா்.

# இந்திய வர்த்தக ஒப்பந்தம் வரலாற்றுச் சிறப்புமிக்கது: அமெரிக்க அதிபர் டிரம்ப்

**வாஷிங்டன், பிப்.14:**

இந்தியாவுடனான வர்த்தக ஒப்பந்தம் வரலாற்றுச் சிறப்புமிக்கது என்று அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் தெரிவித்தார். இதன்மூலம் இந்தியாவுக்கு நிலக்கரி ஏற்றுமதி செய்வது மிகப்பெரிய அளவில் அதிகரிக்கும் என்றும் அவர் கூறினார்.

அமெரிக்காவில் புதன்கிழமை நடைபெற்ற 'சாம்பியன் ஆஃப் கோல்' நிகழ்ச்சியில் பங்கேற்ற அவர் பேசியதாவது:

எங்களுடைய ஆட்சியில் அமெரிக்கா மிகப்பெரிய எரிசக்தி ஏற்றுமதியாளராக உருவெடுத்துள்ளது. கடந்த சில மாதங்களில் ஜப்பான், தென்கொரியா, இந்தியாவுடன் வரலாற்றுச் சிறப்புமிக்க வர்த்தக ஒப்பந்தங்களை இறுதி செய்துள்ளோம். இது அமெரிக்காவின் ஏற்றுமதியைப் பல மடங்கு அதிகரிக்க உதவும். முக்கியமாக நிலக்கரியை நாம் இப்போதும் உலகம் முழுவதும் ஏற்றுமதி செய்கிறோம். உலகின் எந்த நாட்டிலும் இல்லாத தரமான நிலக்கரியை அமெரிக்கா வழங்குகிறது. இந்தியாவுடன் நாம் மேற்கொள்ளும் வர்த்தக ஒப்பந்தம் மிகப்பெரிய திருப்புமுனையாகும். இதன்மூலம் அமெரிக்காவின் எரிசக்தித் துறை புதிய இடத்தில் தடம் பதிக்கவுள்ளது. உலகின் முதன்மையான எரிசக்தி உற்பத்தியாளராகவும், ஏற்றுமதியாளராகவும் அமெரிக்கா உருவாகி வருகிறது. அமெரிக்கா மிகப்பெரிய மாற்றங்களைச் சந்தித்து வருகிறது. வழக்கம்போல உள்நாட்டுத் தேவைகளை மட்டும் கருத்தில்கொண்டு அமெரிக்கா இனி செயல்படாது. சர்வதேச அளவில் அதிக பொருள்கள் அமெரிக்காவில் இருந்து ஏற்றுமதி செய்யப்படும் என்றார்.

# எங்கள் சேவையை முழுவதுமாக முடக்க ரஷ்யா முயற்சி: வாட்ஸ்அப் குற்றச்சாட்டு

**சான் பிரான்சிஸ்கோ, பிப்.14:**

தங்கள் செயலியின் சேவையை முழுவதுமாக முடக்கும் முயற்சியை ரஷ்யா மேற்கொண்டதாக மெட்டா நிறுவனத்தின் வாட்ஸ்அப் குற்றச்சாட்டு வைத்துள்ளது. இதன் பின்னணி குறித்து பார்ப்போம்.

மெட்டா நிறுவனத்தின் வாட்ஸ்அப் மெசஞ்சரை உலக அளவில் சுமார் 300 கோடிக்கும் மேற்பட்ட பயனர்கள் பயன்படுத்தி வருகின்றனர். டெக்ஸ்ட் மெசேஜ், போட்டோ, வீடியோ, ஆடியோ மற்றும் அழைப்புகளை மேற்கொள்ள பயன்படுத்தப்பட்டு வருகிறது இந்தத் தளம். பள்ளிக்கூடம் தொடங்கி அலுவலகம் வரையில் இப்போது குழுக்களாக ஒருவருக்கு ஒருவர், ஒருவருக்கு பலர் என இதன் மூலம் தகவல்களை பரிமாறிக் கொண்டு வருகின்றனர்.

உள்நாட்டு ஆன்லைன் சேவைகளை ரஷ்ய மக்கள் பயன்படுத்துவதை வலியுறுத்தும் விதமாக அந்நாட்டு அரசு நகர்வுகளை மேற்கொண்டுள்ளது. குறிப்பாக ஆன்லைன் தள சேவை நிறுவனங்கள் தங்கள் மக்களின் தரவுகள் உள்நாட்டில் சேமிக்கப்பட்ட வேண்டும் என்பது உட்பட பல்வேறு சட்ட விதிகளை பின்பற்ற வேண்டும் என தெரிவித்துள்ளது. இந்தச் சூழலில் ரஷ்யா மீது வாட்ஸ்அப் தளம் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளது. வாட்ஸ்அப் தளத்தை முழுவதுமாக முடக்கும் முயற்சியை ரஷ்யா மேற்கொண்டது. இதன் மூலம் அரசின் 'மேக்ஸ்' என செயலியை பயன்படுத்த ரஷ்ய மக்களுக்கு அழுத்தம் கொடுத்துள்ளது. இதனால், 100 மில்லியன் பயனர்களை பாதுகாப்பான கம்யூனிகேஷன் தளத்தில் இருந்து பின்வாங்கச் செய்யும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. பயனர்களை இணைப்பில் வைக்க அனைத்து முயற்சிகளையும் நாங்கள் மேற்கொள்வோம் என வாட்ஸ்அப் தெரிவித்துள்ளது.

முன்னதாக, கடந்த 10-ம் தேதி அன்று தங்கள் நாட்டின் சட்ட விதிகளுக்கு இணங்காத டெலிகிராம் தளத்தை படிப்படியாக தடை செய்யும் முயற்சியை ரஷ்யாவின் இணைய சேவை பிரிவு மேற்கொள்வோம் என எச்சரித்த சூழலில் வாட்ஸ்அப் இந்த குற்றச்சாட்டை வைத்துள்ளது.

# பிரேசில் அதிபர் பிப்.18-இல் இந்தியா வருகை: ஐந்து நாள் அரசுமுறைப் பயணம்

பிரேசில் அதிபர் லூயிஸ் இனாசியோ லுலா டா சில்வா, 5 நாள் அரசுமுறைப் பயணமாக இந்தியாவுக்கு பிப்.18-இல் வரவுள்ளார்.

பிப்.21-இல் பிரதமர் நரேந்திர மோடியுடன் இருதரப்பு பேச்சுவார்த்தையில் ஈடுபடுவதுடன், தில்லியில் நடைபெறும் சர்வதேச செயற்கை நுண்ணறிவு (ஏ.ஐ.) உச்சிமாநாட்டிலும் அவர் பங்கேற்கவுள்ளதாக இந்திய வெளியுறவு அமைச்சக செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. தில்லியில் பிப்.19 முதல் 20 வரை சர்வதேச ஏ.ஐ. உச்சிமாநாடு நடைபெறவுள்ளது. இதில் பல்வேறு நாடுகளின் தலைவர்கள், உயர்நிலை பிரதிநிதிகள், துறைசார் நிறுவனத் தலைவர்கள் உள்ளிட்டோர் பங்கேற்கவுள்ளனர். இதையொட்டி, ஐந்து நாள் அரசுமுறைப் பயணமாக பிரேசில் அதிபர் லுலா டா சில்வா பிப்.18-இல் இந்தியாவுக்கு வரவுள்ளார்.

# ராவல்பிண்டி சிறையில் கண் பார்வை பாதிப்பால் அவதிப்படும் இம்ரான் கானுக்கு சிகிச்சை அளிக்க உச்ச நீதிமன்றம் உத்தரவு

**இஸ்லாமாபாத், பிப்.14:**

சிறையில் உள்ள பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான் கானின் (73) வலது கண் பார்வை பாதிக்கப்பட்டுள்தால் சிகிச்சை அளிக்க உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டு உள்ளது.

பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் முன்னாள் கேப்டன் இம்ரான் கான், தெஹ்ரீக் இஇன்சாப் (பிடிஐ) கட்சியைத் தொடங்கி, 2018 பொதுத் தேர்தலில் வென்று, பாகிஸ்தானின் 22-வது பிரதமராகப் பதவியேற்றார். கூட்டணிக் கட்சிகள் விலகியதால், 2022 ஏப்ரல் மாதம் அவர்



பிரதமர் பதவியில் இருந்து விலகினார்.

பின்னர் அவர் மீது ஊழல், மோசடி, கொலை மிரட்டல் என 100-க்கும் மேற்பட்ட வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. சில வழக்குகளில் அவருக்கு சிறை தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. தற்போது அவர் ராவல்பிண்டியில் உள்ள அடிலா சிறையில் அடைக்கப்பட்டு உள்ளார்.

இந்த சூழலில் இம்ரான் கானின் வலது கண்ணில் சிஆர்விஓ என்ற நோய் பாதிப்பு ஏற்பட்டு உள்ளது. இதன் காரணமாக வலது கண்ணில் 85 சதவீத பார்வை இழப்பு ஏற்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது. சிறை அதிகாரிகள் அவருக்கு உரிய சிகிச்சை அளிக்கவில்லை என்று குடும்பத்தினர் குற்றம் சாட்டுகின்றனர்.

இதுதொடர்பாக பாகிஸ்தான் உச்ச நீதிமன்றத்தில் முறையிடப்பட்டது. இந்த வழக்கை தலைமை நீதிபதி யஹ்யா அப்ரிடி, நீதிபதி ஷாகித் பிலால் ஹுசைன் அமர்வு விசாரித்து நேற்று முக்கிய உத்தரவைப் பிறப்பித்தது. "இம்ரான் கானின் கண் பார்வையை பரிசோதனை செய்து சிகிச்சை அளிக்க சிறப்பு மருத்துவர் குழுவை அமைக்க வேண்டும்.

பிப்ரவரி 16-ம் தேதிக்குள் அவருக்கு பரிசோதனை செய்து முழுமையான அறிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டும். அவர் தனது பிள்ளைகள் மற்றும் உறவினர்களிடம் பேச தொலைபேசி வசதியை சிறை நிர்வாகம் செய்து கொடுக்க வேண்டும்" என்று தலைமை நீதிபதி அமர்வு உத்தரவிட்டது.

பாகிஸ்தான் அரசு வட்டாரங்கள் கூறும்போது, "உச்ச நீதிமன்ற உத்தரவின் அடிப்படையில் செயல்படுவோம்" என்று தெரிவித்தன.